No. M. 2569

12 OCT 1937

1237

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 8

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 8, 9

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ஜமாதுல் அ[illegible] - ஜமாதுல் ஆகிர்மீ
1937வூ ஆகஸ்டு - செப்டம்பர்மீ

1. அல்குர்ஆன் ... 185 2. அல்ஹதீது ... 188
3. பாலஸ்தீன் பிரிவினை ... 190
4. முஸ்லிம்கள் கவனிப்பார்களா? ... 193
5. பெண் கல்வி ... 195
6. ஹஜ்ரத் பாயஜீது புஸ்தாமீ (ரஹ்.) அவர்களது உபதேசங்கள் ... 198
7. பர்த்தா முஸ்லிம் ஸ்திரீகளின் அணிகலன் ... 199
8. ஹஜ்ரத் றஹ்மத்துன் லில் ஆலமின் (ஸல்.) ... 201
9. புத்தகாலய இயக்கம் ... 204
10. முஸ்லிம்கள் இந்தியாவிற்கு எப்பொழுது வந்தார்கள்? ... 208
11. குபேரர்கள் படும்பாடு ... 211
12. ஐரோப்பாவின் விபரீத முன்னேற்ற துறையில் மாறுதல் ... 214
13. தின்மைகளறுத்த திண்ணிய தியாகி ... 218
14. பல திரள் ... 223

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
208352
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1937
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 356 ஜமாதுல் அவ்வல், ஜமாதுல் ஆகிர் மீ 1937ஹு ஆகஸ்டு, செப்டம்பர் மீ	இதழ் 8 & 9

அல்குர் ஆன்

ஆதலால் யார் அவர்மீது ஈமான் கொண்டு இன்னும் அவருக்கு சங்கையும் உதவியும் புரிந்து அவர்மீது இறக்கிவைக்கப்பட்ட ஒளியைக்கொண்டு ஈமான் கொண்டிருக்கின்றனரோ அன்னோர் ஜெயம் பெற்றவர்களாகும். (திருகுர் ஆன்

ஸூறாயெ' அஃறாபிலுள்ள இத்திருவஸனம் மிகமிக கவனிக்கத்தக்கதாகும். அதாவது, யார் நபிகள் திலகம் முகம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் மீது ஈமான்கொண்டு, அவர்களுக்கு மரியாதையும் உதவியும் புரிவதுடன் அம்மகான் அவர்கள்மீது இறக்கி வைக்கப்பட்டுள்ள குர்ஆன்ஷரீபைப் பின்பற்றி நடக்கின்றனரோ அன்னோர் ஜெயம் பெற்றவர்களாகும் என, அல்லாஹ் தஆலா அறிவிக்கிறான். எனவே, எதுவரை நாம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்காமலும், அவர்களுக்கு மரியாதை உதவி செய்யாமலுமிருக்கின்றோமோ, இன்னும் நாம் எதுவரை நமது முதியோர்கள், சிநேகிதர்கள், அன்பர்கள்மீது கொண்டுள்ள பிரீதியைவிட ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் மீது அதிகப் பிரீதியுடையவர்களாயிருக்க வில்லையோ அதுவரை நாம் பூர்ண ஈமானையுடையவர்களெனக் கூறிவிடமுடியாது.

அன்பர்காள்! இதுபொழுது உங்கள் முன் சில உதாரணங்கள் எடுத்துக்காண்பிக்கப்படுகின்றது. அவைகளை ஊன்றி கவனிப்பது கொண்டு முற்காலத்திய மக்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள்மீது கொண்டுள்ள பிரீதி, உண்மையான மரியாதை, இவைகள் எத்தன்மையதாக விருந்தன வென்பது நன்கு புலனாகும்.

"உஹத்" போர் நடை பெற்ற விஷயத்தை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதில் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது பட்டாளங்கள் யுத்தத்தினின்று திரும்பி மதீன மாநகருக்குச் சமீபம் வருங்காலை ஓர் மாதரசி அந்த வழியில் நின்று கொண்டிருந்தார். அதுபொழுது அப்படை வீரர்களில் ஒருவர், 'உஹத், போரில் அம்மாதின் தந்தை, சோதிரர், புருஷன் இம் மூவரும் மரணமாய் விட்ட துக்க கரமான செய்தியை அறிவித்தார். அம்மாது சிரோன்மணி இவ்வார்த்தையின் பக்கல் சற்றும் கவ

னத்தைச் செலுத்தாது தன்னிலையற்றவராய், "எனக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களின் நிலைமையைத் தெரியப்படுத்துங்கள்" எனக் கூறினர். அதுபொழுது மக்கள் யாவரும் "அல்லாஹ்வின் கிருபையால் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் நற்சுகத்தோடு இருக்கின்றார்கள்" என்று கூறியும், ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களை தமது கண்ணால் பார்க்கு மளவும் அம்மாதின் நிலைமை நிம்மதியுடையதாய்க் காணப்படவில்லை. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களை அம்மாது பார்த்தவுடனேயே "ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் நல்ல நிலைமையிலிருக்கும்போது மற்ற கஷ்ட சங்கடங்களெல்லாம் எனக்கு ஒன்று மில்லாதது போலவேயாகும்" என்று கூறிவிட்டார். அன்புற்ற நேயர்காள்! நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மீதுள்ள உண்மைப் பிரீதி, அன்பு எவ்வாறிருந்ததென்பதைப் பார்த்தீர்களா? ஒருமாது தன் பர்த்தா மரணமடைந்ததையும் கவனிக்கவில்லை; தன் தந்தை உயிர் திறந்ததையும் பொருட்படுத்தவில்லை; தன் சோதரர் ஆத்மா அகன்றதையும் நோக்கவில்லை; இஃதென்னை? ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் உயிருடனிருப்பதற்குமுன் தன் பந்துக்களின் மரணம் எவ்விதக் கவலையையும் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்களுக்கு மரணம் சமீபித்து விட்டபோது அவர்களது மனைவி அழ ஆரம்பித்தார். 'ஆஹ்' என்னும் சப்தம் வெளியாயிற்று. உடனே ஹஸ்ரத் அவர்கள் தங்கள் மனைவியை நோக்கி, "இவ்வாறு அழவேண்டாம்; ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது தெரிசனை கிடைக்குமென யான் சந்தோஷங்கொண்டிருக்கிறேன்" எனக் கூறினார்கள்.

அபூஸுப்யானின் புதல்வி ஹஸ்ரத் உம்முஹபீபா (ரலி.) அவர்களை நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு விவாகஞ் செய்துகொடுக்கப்பட்டிருந்தபோது ஒருமுறை அபூஸுப்யான் தன் குமாரத்தியைச் சந்திப்பதற்காகச் சென்றார். ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலி.) அவர்கள் தந்தை வருவதைப் பார்த்து கட்டிலின் மீது போடப்பட்டிருந்த விறிப்பைச் சுருட்டி ஒரு இடத்தில் வைத்து விட்டார்கள். இது விஷயம் அபூஸுப்யானுக்கு பெரும் கவலையைக் கொடுத்ததால் "யான் இதில் உட்கார தகுதியுடையவனாக இருக்கவில்லையா? அல்லது அந்த விறிப்பு எனக்கு தகுதியுடையதாகவில்லையா?' எனவினவினர். அதற்கு ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலி.) அவர்கள் "இது ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் துயில் புரியும் விறிப்பாகும்; தாங்கள் இணைவைத்து வணங்கும் ஒருகாபிரான மனிதராக விருப்பதால் இவ்விறிப்பில் உட்காரமுடியாது" எனக்கூறிவிட்டார்கள்.

சங்கைவான்களான சஹாபாக்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் முன் உட்காருவார்களாயின் தலை குனிந்து மிக்க மேதை மரியாதையுடன் பார்வையைக் கீழ் நோக்கியவர்களாய் வீற்றிருப்பார்கள்; பெருமானார் (ஸல்.) அவர்களது முன்னிலையில் உயர்ந்த தொனியுடன் வார்த்தையாடமாட்டார்கள். "சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களைவிட என்னிடம் பிரீதியான வஸ்து யாதொன்றுமில்லை; யான் அவர்களுக்கு சங்கை செய்வதற் கறிகுரியாக ஒருபொழுதும் அவர்களது முகத்தை யான் கூர்ந்து பார்த்தது கிடையாது என, ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஏதாகிலுமொரு கட்டளை யிடுவார்களாயின் சஹாபாக்கள் அதனை நிறைவேற்றுவதற்கு முந்துவதில் போட்டி போடுவர்; காருண்யத்தூதர் (ஸல்.) அவர்கள் வார்த்தையாடும்போது மௌனமாய் தலை குனிந்து உட்கார்ந்திருப்பர்; பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒளுச்செய்வார்களாயின் மீதத் தண்ணீரை ஸஹாபாக்கள் எடுத்து முகம் திரேகம் முதலியவைகளில் தடவிக்கொள்வர். இஃதென்ன? ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்த பின்னும் இம் மேதை மரியாதைகள் இவ்வாறே நடைபெற்றுக் கொண்டுவந்தன. உதாரணமாய், ஒரு தடவை ஹஸ்ரத் இமாம் மாலிக், ஹஸ்ரத் அபூஜஅபர் (ரலி.) இருவரும் மஜ்ஜிதநபவிய்யில் உட்கார்ந்து ஓர் மஸ்அலாவைப் பற்றித்தர்க்கித்துக் கொண்டிருக்குங்கால் ஹஸ்ரத் அபூஜஅர் அவர்களது வார்த்தையின் ஓசை உறத்தபோது ஹஸ்ரத் இமாம்மாலிக் (ரலி.) அவர்கள், "இம்மஸ்ஜிதில் உறத்த தொனியில் கூறுதீர்கள், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகைவிட்டு மறைந்த பின்னும் அவர்களுக்கு மரியாதை செய்வது நம்மீது கடமையாகவிருக்கிறது" எனக்கூறினர்கள். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அபூஜஅபர் (ரலி.) அவர்கள் கண்களிலிருந்து தண்ணீர்வடிய ஆரம்பித்தது. இதுவன்றி ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்கு உதவிபுரிவதில் சங்கைவான்களான சஹாபாக்கள் பலவாறான தியாகங்கள்

செய்திருக்கின்றனர். குப்பார்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்களுக்கு இரும்புச் சட்டை அணிவித்து மக்காவின் மலைகளில் இழுத்துச் செல்வார்கள். ஹஸ்ரத் அபூபகிய்யா (ரலி.) அவர்கள் காலில் வளையத்தை மாட்டி வெயி லில் படுக்கவைத்து பாரமான கல்லை முதுகில் வைத்து விடுவார்கள். இதனால் ஹஸ்ரத் அவர் களது ஆத்மா பெரும் சங்கடமடையும். ஹஸ் ரத் கப்பாப் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியபோது அவர்களின் எஜமாட்டி யான 'உம்மு நம்மார்' என்பாள் இரும்பை பழுக்கவைத்து அவர்கள் தலைமீது வைத்து விட்டாள். ஒருபோது தணல்விட்டெறியும் படியான நெருப்பில்போட்டு இழுக்கப்பட்டார் கள். ஹஸ்ரத் ஜுபைர் பின் அவாம் (ரலி.) இஸ் லாத்தைத் தழுவியபோது அவர்களின் சிறிய தந்தை ஹஸ்ரத்தை ஒருவிறிப்பில் வைத்து சுருட்டி தலைகீழாய்த் தொங்கவிட்டு மூக்கு துவாரத்தில் புகைவிட்டார். ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி.) இஸ்லாத்தைத் தழுவிய போது பகைவர்கள் ஹஸ்ரத் அவர்களுக்கு பல வாறு கஷ்டம் கொடுக்க ஆரம்பித்து பெரும் நோவினை செய்தார்கள். இதனால் மரண மடைந்து விடுவார்களோவென்று அஞ்சவேண் டியதாகவுமிருந்தது. ஒருநாள் குப்பார்கள் ஹஸ்ரத் அவர்களை மிகுதமாய் அடித்து தொந்திரவு செய்ததால் மரணமாய் விடு வார்களென்பதை பயந்து ஒரு துணியில் சுருட்டி வீடு சேர்க்கப் பட்டார்கள். மாலை யில் ஹஸ்ரத் அவர்கள் தெளிவு பெற் றெழும்பி தன் சங்கடத்தைக் கூறுவதற்குப் பகரமாய் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது நிலைமையை விசாரித்தார்கள். ஹஸ்ரத் அவர் களைச் சேர்ந்தவர்களும் விலகிவிட்டார்கள். ஆனால் தங்கள் மனதில் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களது பிரீதி வேரூன்றி விட்ட தால் கடைசிவரை சத்தியத்தூர் (ஸல்.) அவர் களுக்காக நூற்றுக்கணக்கான கஷ்ட சங்கடங் களை அனுபவித்து வந்தார்கள். ஒருமுறை ஒரு யுத்தத்திற்கு உதவி கோரப்பட்ட பொழுது ஹஸ்ரத் ஸித்தீக அக்பர் (ரலி.) அவர்கள் தங்களுடைய சகல ஐசுவரியங்களை யும், வீட்டிலுள்ள எல்லா சாமான்களையும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது கால்மாட்டில் கொணர்ந்து குவித்து விட்டார்கள். எனவே சங்கைவான்களான சஹாபாக்கள் எம்பெரு மானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்காக தங்கள் இன்னுயிர்களையும், ஐசுவரியங்களையும் எவ்வளவு தூரம் தியாகங்கள் செய்திருக்கின் றார்களென்பதை விரித்துக் கூற இச்சிற்றேடு இடந்தாராதாகையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

முஸ்லிம் நேயர்காள்! நமக்கு ஐசுவரியம், தாய், தந்தை, பெண்டீர், பிள்ளை இவர்களின் பிரீதி அதிகரித்திருக்கிறதா? அல்லது ரஸூ லுல்லாஹ் (ஸல்.) அவர்கள் மீது பிரீதி ஏற் பட்டிருக்கிறதா? வென்பதை நன்கு சிந்தனை செய்து பார்ப்போமாக. நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்காக தியாகம் செய்வதில் ஏதாகிலும் கஷ்ட சங்கடங்கள் தோன்று மாயின் நம்முடைய ஈமான் பக்குவ நிலைக்கு வரவில்லை யென்பதையும், நாம் விடுதலை பெறுவதற்கான சரியான மார்க்கம் கிடைக்க வில்லை என்பதையும் நன்குணர்வோமாக. இது காலை மக்களுக்கு நபிகள் திலகம் (ஸல்.) அவர் கள் மீது உண்மையான பிரீதி கம்மியாகிவிட்ட தால் இஸ்லாத்தின் விரோதிகள் பற்பல வகை யிலும் முற்பட்டு சத்தியத்தூதர் (ஸல்.) அவர் கள் மீது பலவாறான துர் எண்ணங்களை உண்டு பண்ண முயற்சித்து வருகின்றனர். ஆகவே, நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள்மீது உண்மையாகவே பற்றுக்கொண்டுள்ளோமா யின் எந்த விரோதியும் குறைகூற முற்பட மாட்டானென்பது திண்ணம். எனவே நாம் உண்மையாகவே ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர் கள்மீது பற்றுக்கொண்டவர்களாகி ஜெயம் பெற்ற கூட்டத்தினராகத் திகழ வல்ல றஹ் மான் கிருபை பாலிப்பானாக.

குர்ஆன் உபதேசம்

நீங்கள் அல்லாஹ் தஆலாவால் அளிக்கப் பட்டுள்ள காருண்யங்களை எண்ணிப்பார்க்க முற்படுவீர்களேல் அவைகளை பூர்ணமாக்க உங்களால் முடியாது. நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவனும், கிருபை பாலிப் பவனுமிருக்கிறான்.

யார் நன்மையான காரியங்கள் புரிகின்றாரோ அவருக்கு இவ்வுலகிலும் நன்மையுண்டு. மறுமை யிலும் விடுதலை கிடைக்கும். பேணுதலுடன் நடந்தவர்கள் தங்குவதற்கு மறுமையில் அழ கிய கட்டடமிருக்கிறது, பூங்காவனங்களிருக் கின்றன. அவர்கள் அந்த கட்டிடத்தினுள் பிர வேசிப்பார்கள். அப் பூங்காவனத்திற்குத்தா மூல் கால்வாய்களும் சென்றுகொண்டிருக்கும்.

அல் ஹதீது

நோன்பு, தொழுகை, தரும், இவைகளை விட மேலான வஸ்துவை உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா? என, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வினவியபோது, ஆம் அறிவியுங்களென சஹாபாக்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதற்கு சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதும் விரோதத்தை அகற்றுவதுமாகும் என, அறிவித்தார்கள்.

இதனால் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவது நபிலான தொழுகை, நோன்பு, தர்மம் இவைகளைவிட மேலான விஷயமாகும் என்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம். ஏனெனில், இவ்வாறு ஒற்றுமையை ஏற்படுத்தி வைப்பது மக்கள் மீதுள்ள கடமையாகும். ஆகவே நபிலை விட பாலான கடமையை முற்படுத்துவது பிரதானமாகும். மக்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள் அன்னோரில் மானம், மரியாதை, பொருள், மார்க்கம், சற்குணம் இவைகளைக் கெடுத்துவிடுவதுடன் உற்றார், உறவினருக்குள் பெரும் பகைமைத்தனத்தையும் வளர்த்து விடுகின்றது. நாம் பொதுவாக முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி வைக்க முடியாது போயினும் நமது உற்றார் உறவினர், அன்பர், அயலகத்தார்கட்கிடையே இப்பணியைச் செய்ய சக்தி பெற்றிருக்கிறோம். நம்முடைய இம் முயற்சியால், பிணங்கிக் கொண்டிருக்கும் இரு முஸ்லிம்கள் நேர்வழிக்கு வந்துவிடுவார்களாயின் அஃது நம்முடைய விமோசனத்திற்குக் காரணமாய் விடுகிறது. ஆகவே, நாம் இவ்விஷயத்தை நிறை வேற்றுவதற்காகிலும் முன் வரலாகாதா?

முஸ்லிம்கள் வதியும் ஒவ்வொரு பட்டணம் சிற்றூர் என்ன? ஒவ்வொரு குடும்பங்களிலும் இருசோதிரர்கட்கிடையிலும் மனஸ்தாபனம் மாச்சரியம், சண்டை சச்சரவு நிகழ்பெருத இடங்களைப்பார்ப்பது மிகமிக அரிதாயிருக்கிறது. நாம் இதனை தினேதினே கண்களால் பார்த்தும், காதுகளால் கேட்டுந்தான் வருகிறோம். ஆனல் அன்னோரிடையே ஒற்றுமையை உண்டுபண்ணி வைப்பதற்கும், பிரிவினை ஏற்பட்டவிடத்தில் சிநேகத்தை உண்டுபண்ணி வைப்பதற்கும் நாம் சற்றும் முயற்சிக்காது கடமையை நிறைவேற்ருது மௌனமாய் உட்கார்ந்திருக்கின்ரேம்.

ஒற்றுமையை உண்டு பண்ணிவைப்பது நம் மீது கடமையாக விருப்பதால் ஆரம்பத்தில் ஒற்றுமையின் மேன்மைகளையும், பலா பலன்களையும் அன்னேருக்கு எடுத்துக்காண்பித்து அதனைப் பின்பற்றி நடப்பதற்கான யோசனை கூறவேண்டும். அவர்களிலொருவர் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளாது மறுபடியும் பிணக்கத்தில் முற்படுவாராயின் முஸ்லிம்கள் யாவரும் சேர்ந்து அவர் ஒற்றுமையை ஏற்று நடக்கும் வரை அவருடன் பிணக்கங்கொள்ள வேண்டும். அவர் சமாதானத்திற்கு இணங்கி வந்து விடுவாராயின் நீதி முறையோடு சமாதானத்தை ஏற்படுத்தி வைத்துவிடவேண்டும்.

நாம் இவ்வாறு நமது கடமையை நிறைவேற்ருது சிலகால் வாளாவிருந்து விடுகிறோம். அல்லது ஒற்றுமைக்கு முயற்சி செய்யாது ஒரு சாராருடன் சேர்ந்து விரோதத்தின் தீயை வளர்த்து விடுகிறோம். இஃது நமது கடமையை நிறைவேற்றுவதாகுமோ?

ஜமாஅத் தொழுகை

ஹஜ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரீ (ரலி.) அவர்கள் கூறுவதாவது:—நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் என் வீட்டிற்கு ஆரம்பமாக வந்தபோது தொழுகையின் மேன்மை வரிசைகளைக் கூறுவதற்கிடையே,

“ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவது தனியே தொழுவதைவிட 27 அதிகப் பதவியுடையதாக இருக்கிறது” என்று கூறியுள்ளார்கள் என, அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்கள் இந்தஹதீதைவிரித்துரைக்குங்கால், இஸ்லாம் மார்க்கம் ஆரம்ப முதல் கடைசிவரை ஒற்றுமை, ஒன்றுசேர்வதையே வற்புறுத்தி வருகிறது; ஒன்று சேர்வதை வற்புறுத்தாத

அதன் எந்த கூட்டமுங் கிடையாது; தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவதும் ஒற்றுமையின் அறிகுறியாகவிருந்து வருகிறது; இதற்காகத்தான் சத்தியத் தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், மனிதன் தனியாகத் தொழுவதைவிட ஜமாஅத்துடன் நிறைவேற்றுவது 27 அதிகப்பதவிகளையுடையதாகவிருக்கிறது என அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நாம் ஒற்றுமைக்கான இந்த முயற்சியிலீடுபட்டு நற்கூலி அடைவதற்குள்ள பாக்கியசாலியாவோமாக, எனக் கூறியுள்ளார்கள்.

ஈமானின்சுவை

ஹஸ்ரத் அபூதர்ர கிபாரீ (ரலி.) அவர்கள் கூறுவதாவது:—ஒருநாள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின் பொருத்தத்தின் தன்மைகளை விபரிக்குங்கால்,

“எவன் தூய்மை பொருந்திய அல்லாஹ்வின் தன்மையின் மீதும், இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையிலும், சத்தியத்தூர் (ஸல்.) அவர்களின் நபித்துவத்திலும் உண்மை கொண்டு உறுதியுடையவனயிருக்கிருனே அவன் ஈமானின் சுவையைப்பெற்றுக் கொண்டான்” என கூறியுள்ளதாக அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் காலீஇயாள் (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், அல்லாஹ்வின் ஆண்டவத் தன்மையை ஒப்புக்கொள்வதின் கருத்து, அல்லாஹ் தஆலாவால் ஏற்பட்டுள்ள கட்டளை கற்பனைகளை ஒப்புக்கொள்வதும், எச்சந்தர்ப்பத்திலும் அதனைக்குறித்துப் பேசாமலிருப்பதாகு மென்றும், இஸ்லாத்தைப் பொருந்திக் கொண்டதின் கருத்து, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இஸ்லாம் காட்டிய நேர்வழியை முன் வைத்து நடக்க வேண்டிய தென்பதாகுமென்றும், சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது நபித்துவத்தை ஒப்புக்கொள்வதின் கருத்து, இம்மை மறுமை சம்மந்தப்பட்ட சகல காரியங்களிலும் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களைப் பின் தொடர்ந்து நடக்கவேண்டுமென்பது மாகுமென்றும், எவன் இம்மூன்று காரியங்களையும் சிரமேற்ருங்கி நடக்கிருனே அவன் பரிபூர்ண மூமினுவான் என்றும் கூறியுள்ளார்கள்.

வியாபாரத்தில் அருள்

உலகில் நடைபெறும் எந்த வியாபாரமும் இலேசு, சாந்தமில்லாது கைகூடி வரமாட்டாதென்பது வியாபாரத் தோரணையில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களது தீர்மான முடிவாகும். இதனுல்தான் சாந்தத்தைக் கைகொண்டு சமாதான முறையில் வியாபாரத்தை நடத்தி வருபவர்களே வியாபாரத் துறையில் முதன்மையாய்ச் சிறந்து விளங்குகின்றனர். ஆனல் வியாபார உலகம் ஒருக்கால் இதனைக் கைவிட்டிருந்தாலுமிருக்கலாம். இற்றைக்கு 1300 வருடங்களுக்குமுன் மதீனுவாசியான ஓர் தத்துவ சாஸ்திரி வியாபார சம்பந்தமாய் யாது கூறியிருக்கிருர்களென்பதை உற்றுணர்ந்து பார்ப்போமாக:—

“யார் இலேவாதேவி செய்வதிலும், கடன்களை வசூல் செய்வதிலும் சாந்தத்தையும், பொருமையையும் கைகோள்கின்றனரோ அவர்மீது அல்லாஹ் கிருபை புரிகின்ருன்” எனக்கூறியிருக்கிருர்கள். இது முஸ்லிம்களின் தலைவர், இரு உலக ரக்ஷகர் முகம்மதுநபி (ஸல்.) அவர்களது திருவசனமாகும். இந்த உபதேசத்தை முஸ்லிம்கள் முற்காலத்தில் பின்பற்றி வந்ததின் பயனுகத்தான் வியாபாரத் துறையில் தலைசிறந்து விளங்கி வந்தனர். ஆனல் துர் அதிர்ஷ்டவசமாக நாம் இச்சிறந்த போதனையை மறந்திருப்பதன் பயனுக வியாபாரத் துறையில் மிகமிக கீழ் நிலையை அடைந்து கொண்டே வருகிருேம். ஆனல் முஸ்லிம் அல்லாதாரோ இக்குணங்களைக் கையாண்டு வருகின்றனர். வியாபார முன்னேற்றத்தில் ஹிந்துக்கள், முஸ்லிம் அல்லாதார் ஆகியவர்களைவிட முஸ்லிம்கள் இது காலை பின்னணியிலேயே நிற்கின்றனர். எனவே முஸ்லிம்கள் வியாபாரத் துறையில் முன்னேற்றமடையாததின் நோக்கம் யாதாகுமென்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்ருர்கள். அந்த இரகசியம் மேலே கூறப்பட்டுள்ள நாயக வாக்கியத்தில் மிளிர்ந்திலங்கிக்கொண்டிருக்கிறது. அநேகமாய் முஸ்லிம்கள் வியாபாரத்தில் கடும்மொழிகளையே உபயோகிக்கின்றனர். இதனுலேயே அன்னேர் வியாபாரத்தில் முன்னேற்றமடைவதில்லை. முஸ்லிம் அல்லாதார் சாந்தம், மிருதுத் தன்மையைக் கைகொண்டு வியாபாரத்தைக் கைப்பற்றிக் கொண்டே செல்கின்றனர். ஆகவே முஸ்லிம்கள் மதீனு வாழ் ரஸூலதிபர் அவர்களது அரும்மொழிகளைக் கைகொண்டு நிகழ முற்படுவார்களாயின் வியாபார உலகில் இதரர்களைவிட முஸ்லிம்கள் மிகுதியாய்க் காணப்படுவார்கள்.



பாலஸ்தீன் பிரிவினை

பாலஸ்தீன ராயல் கமிஷன் அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதனை மூன்றாகப் பிரித்து ஒரு பிரிவை யூதர் தாயகமாகவும், மற்றொரு பிரிவை பிரிட்டிஷ் மாண்டேட் நாடாகவும் ஆக்கவேண்டும் என்பதும், மூன்றாவது பாகத்தை டிரான்ஸ் ஜார்டோனியாவுடன் சேர்த்து விடவேண்டும் என்பதும், இந்தப் பிரிவு அறபியருக்கு என்பதும், யூதருக்கும் அறபியருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும் இரு நாடுகளுக்கும் சுயேச்சை யளித்து சர்வதேச சங்கத்தில் சேர்க்க பிரிட்டன் உதவிபுரிய வேண்டும் என்பதும் ஷை கமிஷன் அறிக்கையின் முக்கிய சிபாரிஷ்களாகும். ஷை ராயல் கமிஷன் இச் சிபாரிஷ்களைச் செய்து இப்பிரிவினையால் யூதருக்கும் அறபியருக்கும் ஏற்படுகிற நன்மைகளையும் விளக்கி இருக்கிறது. ''ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுதது'' என்ற பழமொழிக்கேற்ப யூதரும் அறபியரும் ஒருவருக்கொருவர் பீதி கொள்ளாமல் இரு சமூகத்தாரும் க்ஷேமமாக வாழ இந்த சிபாரிஷ்கள் இடமளிக்கிறதாம். ஆனால் ராயல் கமிஷன் செய்துள்ள இந்த சிபாரிஷ்கள் யூதருக்கோ அல்லது அறபியருக்கோ திருப்தியளிப்பனவாக இல்லை.

இந்த சிபாரிஷ்களை இரு சாரரும் அங்கீகரிக்கமாட்டார்கள். அதிலும் முக்கியமாக அறபியர் முற்றிலும் உதறித்தள்ளுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், சென்ற பதினான்கு நூற்றாண்டுகளாக பாலஸ்தீனம் முஸ்லிம் அறபியருக்குத் தாய் நாடாக இருந்து வருகிறது. அதற்குமுன் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்துவ அறபியருக்கு அது தாய் நாடாக இருந்தது. ஆகவே, அறபியர் சுமார் 19 நூற்றாண்டுகளாக அத்தேசத்தில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இத்தனை நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த அறபியருக்கு பாலஸ்தீனில் ஒரு பாகத்தைமட்டும் அளித்து மற்றிரு பாகங்களை அவர்களை விட்டுப் பிரித்துவிட வேண்டும் என்று ஆலோசனை கூறுகிற இந்த சிபாரிஷ்களை அவர்கள் அங்கீகரிப்பது சுலபமான காரியமன்று. பாலஸ்தீனம் அறபியர் நாடாக இருந்தாலும் அது முஸ்லிம்கள் ஆதிக்கத்தின்கீழ் வந்தபின் பூரண சுயேச்சையுள்ள நாடாக இருந்து வரவில்லை. அங்கு வதியும் முஸ்லிம்கள் தங்கள் சகோதர முஸ்லிம்களாகிய துருக்கியரின் ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு ராஜிய சுயேச்சை யடைவதற்காக சென்ற மகா யுத்தத்தில் நேசக் கக்ஷியாருக்கு உதவி புரிந்து அவர்களுடன் ஒத்துழைத்தனர். அறபியரின் இவ்வுதவிக்காக அவர்களுக்குப் பூரண ராஜீய சுதந்திரமளிப்பதாக நேசக்கக்ஷியினர் கூறினர். இறுதியாக துருக்கியர் மகாயுத்தத்தில் தோல்வியடைந்தனர்; பாலஸ்தீனமும் பிரிட்டிஷ்காரர்களிடம் மாண்டேட் நாடாக ஒப்புவிக்கப்பட்டது. பூரண சுயேச்சை யடையும்படி பாலஸ்தீனத்திற்கு பிரிட்டிஷார் பயிற்றுவித்து பூரண சுயேச்சையுள்ள நாடாக அதனை ஏற்றுக்கொள்ளும்படி சர்வதேச சங்கத்திற்குச் சிபாரிஷ் செய்யவேண்டும். இம்முறையை பிரிட்டிஷார் கைவிட்டு அதனை மூன்றாகப் பிரிப்பதையும், அறபியருக்கு செழிப்பற்ற

பிரதேசத்தை ஒதுக்கி டிரான்ஸ் ஜார்டோனியாவுடன் இணைப்பதையும் அறபியர் விரும்பமாட்டார்கள்.

யூதர்கள் மகாயுத்தகாலத்தில் பிரிட்டிஷாருக்கு ஏதோ சகாயம் செய்ததற்காக அவர்களுக்கு பாலஸ்தீனத்தைத் தாய் நாடாக்கிக் கொடுப்பதாக பிரிட்டிஷார் வாக்குறுதி செய்தனராம்! இவ் வாக்குறுதியின் பேரிலேயே யூதர்கள் யுத்தகாலத்தில் உதவி புரிந்ததாகத் தெரிகிறது. ஆகவே, பாலஸ்தீனத்தைப் பிரிட்டிஷார் மாண்டேட் நாடாக ஏற்றுக் கொண்டபோதே அதனை யூதர் தாயகமாக்குவதற்காக ஒரு திட்டம் போடப்பட்டதாக தெரிகிறது. அத்திட்டத்தின்படி சென்ற பதினைந்தாண்டுகளாக உலகின் பல பாகங்களிலுமிருந்து யூதர் கூட்டங் கூட்டமாக வந்து அங்கு குடியேறத் தொடங்கினர். இதன் பயனாக 1931-ம் வருஷத்திய ஜன சங்கியைப்படி பாலஸ்தீனத்தின் மொத்த ஜனத்தொகை 10,36,000 பேர்களில் 17,5,000 பேர் யூதர்களாக இருந்தனர். அதாவது 17 சதவிகிதம் யூதர்களிருந்தனர். சென்ற வருஷத்தைய யூதர்களின் ஜனத்தொகை 38,4000 பேர்களாக உயர்ந்து விட்டது. அதாவது ஐந்து வருஷகாலத்திற்குள் 28 சத விகிதமாகி இருக்கிறது. இன்னும் பத்து வருஷ காலத்தில் இது 50 சத விகிதமாக உயர்ந்துவிடும் என்றும் அங்குள்ள அரசாங்க அறிக்கை கூறுகிறது. இவர்களையல்லாமல் பாஸ்போர்ட் இல்லாமல் திருட்டுத்தனமாக பாலஸ்தீனிற்கு வரும் யூதர்கள் பல்லாயிரக் கணக்கிலிருக்கின்றனர். பாலஸ்தீன் பிரதேசத்தை யூதர் குடியேற்ற நாடாக்கிக் கொடுப்பதாக வாக்களித்து அந்நிய நாட்டிலுள்ள யூதர்களை லக்ஷக்கணக்கில் குடியேற்றிவிட்டு அங்குள்ள அறபியரின் கிளர்ச்சிக்கும் இஸ்லாமிய உலகின் கண்டனத்திற்கும் பிரிட்டிஷார் ஆளாகியிருக்கின்றனர்.

நிற்க, பிரிட்டிஷார் தங்களது ஏகாதிபத்திய பாதுகாப்பிற்காகவும், தங்கள் ஏகாதிபத்தியத்தைப் பலமாகப் பிடித்துக்கொண்டிருப்பதற்காகவும் அத்தேசத்தைத் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். இதற்காக தங்களது மாண்டேட் ஆட்சியின் கீழ் இருப்பதற்காக அங்குள்ள முக்கிய பிரதேசத்தையும் கடற்கரைப் பட்டணங்களையும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். தூர கீழ் நாடுகளிலுள்ள தங்கள் ஏகாதிபத்யத்திற்கு வெகு சீக்கிரத்தில் செல்வதற்காக அங்கு ஆகாய விமான நிலையங்களும் கடற்படைத் தளங்களும் இருக்கவேண்டியது அவசியமாக இருந்து வருகிறது. பிரிட்டிஷாருக்கு ஆசியாவிலும் ஆப்ரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சொந்தமாகவுள்ள நாடுகளுக்கு மத்தியில் அத்தேசம் இருப்பதால் அங்கு தங்களுக்கு ஆதிக்கம் இருக்கவேண்டும் என்ற அவசியத்தை அவர்கள் நன்குணர்ந்து தங்கள் சுயநலத்தைக் காப்பாற்றிக்கொள்ள இத் திட்டத்தின் மூலம் யுக்தி செய்திருக்கிறார்கள். தங்களது மாண்டேட் ஆட்சியின் கீழ் அங்கு ஒரு பிரதேசத்தை ஒதுக்கி வைத்திருப்பதுமட்டுமில்லாமல் யூதரையும் அறபியரையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டு தங்கள் நோக்கம் போல் அவர்களைத்தங்கள் கைபொம்மைகளாக்கிக் கொள்வதற்காக யூதர்களுடனும் அறபியருடனும் உடன்படிக்கைகளையும் ஏற்படுத்திக்கொள்ள திட்டம் போட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷாரை நம்பிய யூதருக்கும் அரபியருக்கும் இத் திட்டம் தக்க கைமாறு போலும். இவ் விருசாரரும் இதனை அங்கீகரிக்க மாட்டார்கள் என்பதை அவர்கள் உணராமலில்லை. ஆதலால் அவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பதையும் அவ்வறிக்கையில் கூறி அவர்கள் அங்கீகரிப்பதால் அவ்விருசாரரும் அடையும் லாபத்தையும் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். ஆனால்,

பாலஸ்தீனில் ஏற்பட்டுள்ள அமைதியை நிலை நிறுத்துவதற்காக பிரிட்டிஷார் செய்த இந்த திட்டத்தால் பாலஸ்தீனில் அமைதி நிலவப்போவதில்லை.

தவிர, இன்னொரு முக்கிய விஷயத்தையும் இங்கு கூறிவிட விரும்புகிறோம். பாலஸ்தீனம் அறபியருக்கு மட்டிலும் சொந்தமான தேசமன்று; உலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் பொதுவானது. முஸ்லிம் புண்ணிய க்ஷேத்திரங்கள் பல அங்கிருக்கின்றன. ஆதலின், இத்திட்டத்தை அங்குள்ள அறபியர் அங்கீகரித்தாலும் ஏனைய முஸ்லிம்கள் அங்கீகரிக்கமாட்டார்கள். எல்லாம்வல்ல இறைவனால் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்ட அந்த நாட்டை பிரிட்டிஷ் ராஜதந்திரம் யூதருக்கும் கிறிஸ்துவருக்கும் பங்குபோட்டுக் கொடுப்பதை முஸ்லிம் உலகம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டாது. அதனை முஸ்லிம் நாடாக்குவதற்காக, முஸ்லிம் ஆதிக்கம் அங்கு இருந்து வரவேண்டுமென்பதற்காக முஸ்லிம் உலகம் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்யாமலிருக்காது என்பது நிச்சயம்.

இப் பிரிவினை விஷயம் வெளியிடப்பட்டதிலிருந்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள முஸ்லிம் உலகம் விழித்து ஆங்காங்கு கண்டனக் கூட்டங்களேற்படுத்தி அதன் மூலம் கமிஷனது சிபாரிஷுகளை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி வருகிறது. இத் தோரணையில் சென்னை கடற்கரையில் மௌலானா அப்துல் வஹாப் சாஹிப் புகாரி M. A., L., T,. M.L.C. அவர்கள் தலைமையின்கீழ் மாபெரும் மகாநாடு நடைபெற்றது. ஏராளமான முஸ்லிம்கள் சமுகந் தந்து பிரிவினை விஷயத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

மேலும், "முஸ்லிம்களுக்கு யூதரும் முஷ்ரிக்குகளும்தான் கொடும் பகைவர்" என்பதாக திருகுர்ஆன் எச்சரிக்கைசெய்துள்ளது. முஸ்லிம்கள்பால் துவேஷமும் கொடும்பகையும் கொண்டுள்ள யூதசமூகத்திற்கு, சுயேச்சையுள்ள முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் தாயகம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முஸ்லிம் உலகம் சம்மதிக்குமாயின் 'கட்டிச் சோற்றுக்குள் எலியை வைத்துக் கட்டியது' போலாகும் என்பதை அறிவித்துவிட விரும்புகிறோம். பிறர் கைபொம்மையாக இருந்து, முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இல்லாமலிருந்து ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டதன் பயனாக தங்கள் பலத்தையும், சுயேச்சையையும் ராஜிய சுதந்திரத்தையும் இழந்தவர்கள் தங்களது பரிதாப நிலைமையை யுணர்ந்து தங்களுக்குள் உள்ள பிளவை நீக்கித் தங்களுக்குள் ஐக்கியத்தையும் அந்நியோன்யத்தையும் ஏற்படுத்திக்கொண்டு இழந்துபோன தங்கள் கௌரவத்தை மீண்டும் அடைய முயலுகிற இக்காலத்தில், தங்களுக்கு மத்தியில் யூதருக்குத் தாயகமிருப்பதையும், அந்த நாடு யூதரின் சுதந்திர நாடாக இருப்பதையும் ஒரு போதும் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். மேலும் அங்கு யூதர் நாடு இருப்பதானது இஸ்லாமிய உலகில் ஏற்படுகிற ஐக்கிய மனோபாவத்தைக் குலைத்து மீண்டும் பிளவை யுண்டுபண்ணுவதற்காகச் செய்யப்படும் ராஜீய சூழ்ச்சியேயாகும். ஆகவே, பாலஸ்தீன ராயல் கமிஷன் செய்த சிபாரிசை பிரிட்டிஷாரும் சர்வதேச சங்கமும் ஆதரித்தபோதிலும் முஸ்லிம்கள் கட்டுப்பாடாக எதிர்த்து, அதனைப் பூரண சுயேச்சையுள்ள முஸ்லிம் நாடாக மாற்ற சலியாமல் உழைப்பார்களாக.

எல்லாம்வல்ல இறைவன் இஸ்லாமிய உலகிற்கு புத்துணர்ச்சியையளித்து, முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரங்கள் நிறைந்துள்ள இத்தேசம் முஸ்லிம்கள் ஆதிக்கத்திலிருந்து விலகாமல் மறுபடியும் வந்துசேர அருள் புரிவானாக ஆமீன்.

முஸ்லிம்கள் கவனிப்பார்களா?

கல்வி பயிலுவதற்கு உங்களது மூளை தகுதியாயில்லை என்றும், நீங்கள் உயர்தர கல்வி பயிலுவதற்குத் தகுந்த நிலைமையிலில்லை என்றும், உயிர்தர கல்வி பயிலுவதற்காக ஏற்படும் செலவுகளுக்கு உங்களிடம் வகையில்லை என்றும், உங்களுக்கு அதிக வயதாகிவிட்டதென்றும் வைத்துக் கொள்வோம். ஆயினும், வேலை செய்வதற்கு உங்களுக்கு லஜ்ஜை வருவானேன்? வேலை செய்வதைக் கேவலமாக மதிப்பானேன்? கல்வி இல்லையென்றால் தொழில் முறைகளின்பால் கவனம் செலுத்தலாகாதா? இக்காலத்தில் தொழிலுக்குத்தான் கௌரவமிருந்து வருகிறது. தொழிலிலீடுபட்டவர்களை இன்றைய உலகம் தனது நேத்திரத்தில் வைத்துக் கொள்கிறது. ஆகவே, கல்வி கற்க முடியவில்லையென்றால் தொழிலையாகிலும் கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களிடம் தொழில் இல்லை என்றும், தொழில் கற்றுக்கொள்ள உங்களால் முடியாதென்றும் வைத்துக்கொள்வோம். உங்களுக்கு வியாபாரம் கூடவா செய்ய முடியாது? வியாபாரத்தை நீங்கள் ஏன் வெறுக்கிறீர்கள்? வியாபாரம் ஹிந்துக்களது சொந்தத் தொழில் என்று நீங்கள் கருதுகிறீர்கள். இதனால்தான் நீங்கள் அவர்களைத் தாழ்ந்தவர்களாகவும் உங்களை உயர்ந்தவர்களாகவும் மதிக்கிறீர்களோ? நீங்கள் தவறான எண்ணத்திலிருக்கிறீர்கள். கல்வி, கைத்தொழில், வியாபாரம், செல்வம் கௌரவம், கீர்த்தி ஆகிய சகலத்திலும் உங்களைப்பார்க்கினும் ஹிந்துக்கள் முன்னணியிலிருக்கிறார்கள். அப்படி இருக்க அவர்கள் தாழ்ந்தவர்களாகவும் நீங்கள் உயர்ந்தவர்களாகவும் எங்ஙனம் இருக்க முடியும்? நீங்கள் பெரிய பிரபுவின் பிள்ளை, அல்லது நவாபின் பிள்ளை, ஜாகீர்தாரின் பிள்ளை என்று உங்களைப் பெருமையாக நினைத்துக் கொள்ளலாம். உங்களது மூதாதையரது கௌரவத்தை நினைத்துக் கொண்டு கல்வி, கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளிலீடுபடாமல் இருப்பதனால் உங்களது செல்வாக்கையும் செல்வத்தையுமிழந்து உங்கள் மூதாதையரின் கௌரவத்திற்கு நீங்களே ஹானி விளைவிப்பவர்களாக இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டவிரும்புகிறோம்.

இஸ்லாம் கூறுவதென்ன?

நீங்கள் ஒரே ஒரு கேள்விக்கு மட்டிலும் விடை கூறுங்கள். நீங்கள் உங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். கடைசி காலத்து நபி (ஸல்.) அவர்களை உங்கள் தலைவராக அங்கீகரித்திருக்கிறீர்கள். அப்பெருமகார் உங்களால் மதிக்கத்தக்கவர்களாக இருக்கிறார்களல்லவா? அவர்களுக்கு மிகப்பிரியமான தொழில் யாது? என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். வியாபாரம் தான் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிரியமான தொழில். நாயகம் (ஸல்.) அவர்கள் ஆடு மேய்ப்பதைக் கேவலமாகக் கருதவில்லை. கையால் வேலை செய்வதைச் குறைவாக மதிக்கவில்லை. அறப், ஷாம் ஆகிய நாடுகளுக்கு வியாபாரத்தின் நிமித்தமாகச் சென்றிருந்தார்கள். ஆகவே, உங்களை வியாபாரம் செய்வதைவிட்டுத் தடுப்பதொன்றுமில்லை. "வியாபாரத்தில் பத்து பங்கு அருள் இருக்கிறது" என்பதாக உங்கள் உயிரினும் அதிகப் பிரியமான நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

உலகிலுள்ள சமூகங்களைக் கவனித்துப் பாருங்கள்

தற்போது யாவரிலும் அதிக கௌரவமும் நாகரீகமும் பொருந்தியவர்கள் ஆங்கிலேயர்கள் தாம் என்று கருதப்படுகிறது. ஒரு ஆங்கிலேயருடன் கைலாகு செய்வதை நீங்களும் கௌரமாக மதிக்கிறீர்கள். அவர்கள் யார்? என்பதை நீங்கள் உணர்ந்தீர்களா? அவர்கள் ஆதியில் சமுத்திரத்திரக்கரையோரமாக மீன் பிடிக்கும் சாமான்ய மக்களே யாவர். அக்

காலத்தில் காட்டு மிராண்டிகளாக இருந்தனர். நாகரீகம் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆனால், இன்று உலகை ஆள்பவர்கள் அவர்கள் தான். இத்தனை மகத்துவம் அவர்களுக்கு எப்படி வந்தது? இந்திய சக்கரவர்த்தியான ஜஹாங்கீர் மன்னரது தர்பாருக்கு வியாபார நோக்கமாக அவர்கள் வந்தனர். இன்றுங்கூட அவர்கள் வியாபார நோக்கத்திற்காகவே அரசாங்கம் செய்துவருகின்றனர்.

தூரத்திற் போக வேண்டாம்

உங்கள் தேசச் சகோதரர்களைப் பாருங்கள். அவர்களில் ஏராளமானவர்கள் பிரபுக்களாகவும் ஜமீந்தார்களாகவும், தலைவர்களாகவும் காணப்படுகின்றனர். நூறு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் அவர்கள் எந்நிலைமையிலிருந்தனர்? அரசாங்கம் உங்களுடையதாக இருந்தது. செல்வமும் சம்பத்தும் உங்களுக்கடிமைகளாக இருந்தன. நீங்கள் பூஸ்திதியுள்ளவர்களாக இருந்தீர்கள். தோட்டங்களும் சோலைகளும் மாளிகைகளும் உங்களுக்குச் சொந்தமாக இருந்தன. அவர்கள் ஏழைகளாக இருந்தனர். அப்படி இருந்தும் இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. அவர்கள் கல்வியைக் கற்றனர். தொழிலைப் படித்தனர். வர்த்தகம் செய்தனர். உங்கள் கையிலிருக்கும் யாவும் உங்களைவிட்டு அவர்களிடம் சென்றுவிட்டன. நீங்கள் இன்னமும் இவ் விஷயத்தைக் கவனியாதிருந்து வருகிறீர்கள். இனியேனும் நீங்கள் விழித்துக்கொள்ளாவிடில் உலகில் நீங்கள் இல்லாமலே ஒழிந்து போவீர்கள் என்பதை உறுதியாக நம்புங்கள். காலத்தைத் தவறவிட்டுக் கைசேதப்படுவதில் பிரயோஜனமில்லை.

ஒரு தப்பபிப்பிராயம்

வியாபாரத்திற்குப் பெருத்த மூலதனம் வேண்டும் என்றதப்பபிப்பிராயம் துர் அதிஷ்டர் வசமாக உங்களுள்ளங்களில் தோன்றி இருக்கிறது. இது தப்பான அபிப்பிராயம். பெருத்த மூலதனம் வைத்துத்தான் வியாபாரம் செய்ய வேண்டுமென்று கருதிக்கொண்டிருப்பது முட்டாள்தனமாகும். உங்களுக்கு அக்கம்பக்கத்திலுள்ள பெரிய வியாபாரிகளையும் தலைவர்களையும் கைத்தொழில் ஸ்தாபனக்காரர்களையும் கவனித்துப் பாருங்கள். முதன் முதலாக அவர்கள் பெருந்திரவியத்தையா கொண்டு வந்தனர்? அன்று, அன்று. அவர்களில் இருபத்தைந்து சக விகிதம் பேர்கள் கடலை பொறித்து விற்பவர்களாகவும் இதுபோன்ற உபாயமான தொழில் செய்பவர்களாகவுமே இருந்தனர். உழைப்பு, உறுதி, சிக்கனம், சலியாமை ஆகியவைகள் அவர்களிடமிருந்தன. ஒவ்வொரு தம்பிடியையும்பற்றிக் கணக்குப் பார்த்து அவைகளை ஊதாரியாக்காமல் ஒன்று சேர்த்தனர். இறைவன் கிருபை அவர்களுக் கேற்பட்டது. நாளடைவில் பெரிய தொழில் ஸ்தாபனக்காரர்களானார்கள். ஆகவே, அல்லாஹ்வின் திருநாமத்தைக்கூறி இன்றைய தினமே உங்களிடமுள்ள கைப்பொருளுக்குத் தக்கவாறு சாமான்ய கடையைத் திறந்து வையுங்கள். நேர்மை, நாணயம், சிக்கனம் ஆகியவைகளைக் கடைப்பிடியுங்கள். ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்கப்புறம் நீங்கள் எங்கிருந்து எங்கே போயிருப்பீர்கள் என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

உங்களைச் சீர்திருத்திக்கொள்ளுங்கள்

தாய் வயிற்றிலிருந்து பிறக்கும்போதே ஒரு வரும் தொழில் கற்றுக்கொண்டு பிறப்பதில்லை. பிறக்கும்போதே செல்வத்தைக் கொண்டு வருவதுமில்லை. உழைப்பும் உறுதியும்தான் நமக்கும் மற்றவர்களுக்குமிடையிலுள்ள வித்தியாசம். முஸ்லிம்களிடம் ஒரு நூறு ரூபாய் இருக்குமாயின் அவர்களுக்கு தலைகால் தெரிவதில்லை. அந்தத் தொகையைச் செலவு செய்யும் வரை அவருக்கு நிம்மதி இருக்கமாட்டாது. வீண் ஆடம்பரங்கள், சிற்றின்பங்கள், வியவகாரம் முதலிய ஏதேனும் ஒன்றின் மூலமாக அதனைச் செலவு செய்த பிறகுதான் அமருவார்கள். ஆனால் நமக்கு அக்கம்பக்கத்திலுள்ள ஒரு ஹிந்துவிடம் லக்ஷக்கணக்கான திரவியமிருந்தாலும் அவர் மிகவும் அமர்க்கை, தாழ்மை, ஜனங்களிடம் நேர்மையுடன் பழகல் முதலிய தன்மையுள்ளவராக இருப்பார். அவர் லக்ஷாதிபதியாக இருந்தாலும் மிகவும் சாமான்ய மனிதரைப்போலவே இருப்பார். அவர் கோடீஸ்வரரானாலும் அவரந்தஸ்திற்குக் குறைந்த ஆடை, உணவு ஆகியவைகளிலேயே காலங்கழிப்பார். ஆனால், நமது முஸ்லிம்கள் மாதம் பத்து அல்லது பதினைந்து ரூபாய் சம்பாதிப்பவராக இருப்பின் அவரைப் பார்த்தால் நவாப் தர்பாராகத்தானிருக்கும். தலையில் முப்பது நாற்பது ரூபாய் பெருமானமுள்ள சரிகை சில்க் தலைப்பாகை அல்லது கிராப், ஹேட்

உடம்பில் சில்க்கு கமீஸ், கால்களில் சீமை லெதர் பூட்ஸ் ஆகியவைகளிருக்கும். இப்படி ஆடம்பரம் செய்பவர்களிடம் பணம் ஒன்று சேர்ந்திருக்க முடியுமா? அவருக்குள்ள இந்தச் செலவுகளுக்கு அவரது வருவாய் போதியதாக இருக்குமா? ஒருபோதுமிருக்கப் போவதில்லை. இவ்வித மனப்பான்மையுள்ளவர் வியாபாரம் செய்யப் புகுந்தால் ஒன்றிரண்டு மாதத்தில் அசல் முதலையும் விழுங்கிவிட்டு அழுதுகொண்டலைவார்.

நன்றாய் யோசியுங்கள்

உணவுப் பொருள்களெல்லாம் முஸ்லிம் களது கையிலிருக்கின்றன. தானியம், பால், பருத்தி, விறகு முதலியவைகள்தாம் மனித னது வாழ்க்கைக்கு முக்கிய பொருள்கள். இவைகள் ஒவ்வொருவருக்கும் தேவையான வைகள். இவைகளை முஸ்லிம்கள் சம்பாதிக் கின்றனர். ஆனால் புசிப்பவர்கள் தனவணிகர் கள். இரவு பகலாக மழையையும் வெய்யலை யும் கவனியாமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுழைத்து நமது அறிவின்மை யால் அவைகளை நமது வீட்டிற்குக்கூடக் கொண்டு வாராமல் களத்து வாசலிலிருந்தவாறே வட்டிக் கடன்காரர்கள் கையில் அவைகளை ஒப்புவித்தல், அல்லது ஈனக்கிரயத்திற்கு விற் பனை செய்துவிடல் எவ்வளவு மதியீனமான செய்கை? அவைகளை வீட்டிற்குக் கொண்டு வந்து சாவதானமாய் விற்பதாக இருந்தால் அதிக விலைக்கு விற்கலாமல்லவா? சிக்கனமாக இருந்துகொள்ள வகையறியாமல் முற்கூட்டியே வட்டிக்குக் கடன் வாங்கி அல்லது நெல்லிற்குப் பணம் வாங்கி சாதாரணமாக மூட்டை ஒன் றிற்கு நான்கு ரூபாய் அகவிலையாக இருந்தால் மூன்று ரூபாய்க்குத் தருவதாகக் கூறி முன் கிரயம் பெற்று வீண் டம்பச் செலவில் விரயம் செய்வதாலன்றோ பாடுபட்ட பயன் கூட நமக்கு உதவாமல் பிறருக்குச் சென்று விடுகிறது. இவைகளை முஸ்லிம்கள் நன்கு சிந்தித்துப்பார்த்து தங்கள் நிலைமையை மாற் றிக்கொள்வார்களாக.

பெண் கல்வி

இக்காலத்தில் பெண் கல்வியைப்பற்றி அதி கம் பிரஸ்தாபிக்கப்படுகிறது. எங்கும் இதன் அவசியத்தையும் முக்கியாம்சத்தையும் பற்றி விவாதிக்கப்பட்டு வருகிறது. இதன் பயனாக நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் பெண் கல்வியை ஆதரிக்கின்றனர் என்பது வெளியாகிறது. இதற்கு முன்னிருந்ததைப் பார்க்கினும் இப்பொழுது அதிகமானவர்கள் தங்கள் பெண்குழந்தைகளைப் படிப்பிக்கும் விஷ யத்தில் சிரத்தை காண்பிக்க வாரம்பித்திருக் கின்றனர். என்றாலும் "பெண்களுக்குக் கல்வி புகட்டுவதால் அவர்களது ஒழுக்கத்தில் தீய பயன் ஏற்படும்" என்ற ஆக்ஷேபணை இன்ன மும் சொல்லப்பட்டே வருகிறது. ஆடவர் களைப்போல் ஸ்திரீகளுக்கும் கல்வி போதிப் பது மிகவும் முக்கியமானதென்பதில் எவ் விதச் சந்தேகமுமில்லை. இதன் முக்கியாம் சத்தை தர்க்க முறையிலோ அல்லது மத சம்மந்தமாகவோ எவரும் மறுக்கமுடியாது. ஆனால் ஸ்திரீகளுக்குக் கற்பிக்கவேண்டியவை கள் யாவை? அவர்களுக்கு எத்தகையபோதனா முறைத் திட்டம் இருக்கவேண்டும் என்பன தாம் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும். ராணுவக்கல்வியைப் போதிப்பது சம்மந்தமாக ஆயிரக்கணக்கான விவாதங்களும் ஆலோசனை களும் செய்யப்பட்டுவிட்டன. அது சம்மந்த மாக இன்னும் அதிகமாக விவாதிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இதனைப்பற்றி விவாதிப்பதன் மூலம் நம்முடைய மேற்கண்ட ஆக்ஷேபனை எவ்விதத்திலும் நிவர்த்தியாக முடியாது.

இதனைப்பற்றிச் சரியான முடிவு செய்வதற்கு நாம் இஸ்லாமியச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பதுதான் ஏற்றமுறையாகும். அக்காலத்

திலுள்ள ஸ்திரீகள் கல்வி கற்றிருந்தார்களா இல்லையா? அவர்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்திட்டம் போதுமானதாக இருந்ததா, இல்லையா? என்ற விஷயங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். 'குறூனே ஊலா' அதாவது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அடுத்த படியாகவுள்ள முதற்காலத்திலிருந்த ஸ்திரீகள் இலக்கியத்தில் ஆடவர்களைப்பார்க்கினும்கூட சில சமயங்களில் மேம்பட்டவர்களாக இருந்தனர். புகழத்தக்க தன்மைகளனைத்தையும் பொருந்தியவர்களாக இருந்தனர். ஆடம்பரமின்மை, கண்ணியம், வீரத்தன்மை, நன்னடத்தை ஆகியவைகளுக்கு அவர்கள் சிறந்த முன் மாதிரியாக இருந்தனர். அதுவும் இஸ்லாமிய பரிசுத்த போதனையினுல் மட்டிலுமே அவர்கள் இந்தத் தன்மைகளுள்ளவர்களாக இருந்தனர். அவர்களிடம் இத்தியாதி தன்மைகளிருந்தமையாற்றுன் அறபி இளவல் களிலுள்ளங்களில் வீரத்துவம், உணர்ச்சி முதலியவைகள் ததும்பிக்கொண்டிருந்தன. இவர்கள் ஒவ்வொன்றிலும் ஆண்பிள்ளைத் தன்மைகள் நிறைந்தவர்களாக இருந்தனர். வெற்றியும் காரிய சித்தியும் அவர்களது காலடியிலிருந்தன.

ஸ்திரீகளிடம் திறமை ஏற்படாதவரை எந்தச் சமூகமும் சரியான முறையில் முன்னேற்றம் என்ற ஏணிப்படிகளை அடைவது முடியாத காரியம் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்றைய தினத்திலேயே நாம் ஒரு அரசாங்கத்திற்கு அதிபதிக ளாகிவிடவேண்டும், அல்லது செல்வந்தராகி விடவேண்டும், குபேரராகிவிடவேண்டும் என்பது சமூக முன்னேற்றத்திற்கு அர்த்தமல்ல. நம்முடைய பின்னைய சந்ததியினரது முன்னேற்றம்தான் இதன் தாத்பரியம். ஒரு சமூகம் முன்னேற்றம் அடைவதானது அச்சமூகத்திலுள்ள இளைஞர்கள் தகுதிவாய்ந்தவர்களாக இருப்பதைப் பொறுத்திருக்கிறது. இளைஞர்களை அதாவது குழந்தைகளை நன்கு பரிபாலித்து தக்க பயிற்சியளிப்பதற்கு ஸ்திரீகளுக்குக் கல்வி போதிப்பது அவசியமாகும். எந்தச் சமூகத்திலுள்ள குழந்தைகள் ஆரம்ப முதற்கொண்டே நல்ல விதமாக பயிற்சி யளிக்கப்படுகின்றுர்களோ அந்தச் சமூகத்தின் எதிர்காலம் எப்பொழுதும் வெற்றிகரமான பிரகாசத்தையே காண்பிக்கும். எந்த சமூகத்தின் குழந்தைகள் ஆரம்ப முதற்கொண்டே தகுதியில்லாமலும் கல்விப் பயிற்சியில் தூரமானவர்களாகவுமிருக்கிருர்களோ அந்தச் சமூகம் எதிர் காலத்தில் முன்னேற்றத்தின் படித்தரங்களைக் கடந்து செல்வது அசாத்தியமாகிவிடும். சமூகத்திற்கு வர இருக்கிற சங்கடங்களை விட்டு விடுதலையாகுவதற்கு குழந்தைகளுக்குச் சரியான கல்விப் பயிற்சி யளிப்பதுதான் ஒரே வழியாகும். இவ்விஷயத்தை நாம் முற்றிலும் மறந்தவர்களாகவும் உணராதவர்களாகவும் இருக்கிறேம். இனிமேல் வரப்போகிற நமது சந்ததியினரைப் பற்றி நமக்கு எவ்வித சிரத்தையும் கொள்ளாதவர்களாக இருக்கிறேம். ஸ்திரீகளுக்குக் கல்வி போதிப்பதிலும் முக்கியமாக மதக் கல்வியைப் போதிப்பதிலுமே இப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும்.

ஸ்திரீகள் தாம் வரப்போகிற சந்ததியினர் என்னும் கட்டிடத்திற்கு கொத்தர்கள் என்பது வெளிப்படை. ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளுக்குரிய ஜீவியத்தைக் கட்டுவதற்குத் தகுதியில்லாதவர்களாகவும் கல்வி அறிவற்றவர்களாகவும் இருப்பார்களாயின், இன்னும் தங்கள் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்ற இயலாதவர்களாகவும் இருப்பார்களாயின் நமது சந்ததியினர் நமது மார்க்கத்தையும் தீனையும் அறியாதவர்களாகி அடிமையராகவும் சுயநலங் கொண்டவர்களாகவும் பிணைக்கப்பட்டுவிடுவர் என்பதும், அவர்களுக்கு வெற்றி முகத்தைப் பார்க்கும் பாக்கியம் எப்பொழுதுமே கிடைக்காது என்பதும் உறுதி. ஸ்திரீகளுக்கு கல்வியும் பயிற்சியும் அளிக்கவேண்டும் என்பதற்கு அவர்கள் தங்கள் மக்களிடம் இஸ்லாமிய உணர்ச்சியை உண்டாக்கி விடுவதற்குத் தகுந்தவர்களாகவேண்டும் என்பதும், அவர்களிடம் நல்ல இருதயமும் மூளையும் ஏற்பட வேண்டும் என்பதும் தான் நமது நோக்கம். இந்நோக்கம் பூர்த்தியடையவேண்டுமாயின் ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தப்படும் போதனுமுறைத் திட்டமானது மதக்கல்வியையும், குடும்ப சம்ரக்ஷணைக்குரிய இதர முக்கிய விஷயங்களையும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கவேண்டும். இதன் மூலமாக அவர்களில் மத சமூக உணர்ச்சி உண்டாகவேண்டும். இவை யிருக்குமாயின் அவர்கள் புகழத்தக்க எல்லாத் தன்மைகளையுமுள்ளவர்க ளாகிவிடுவதுடன் இஸ்லாமிய ஒழுக்கங்கள் என்ற ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு தங்களது ஜீவியத்தின் சரியான லக்ஷியத்தை உணரும் ஆற்றலுள்ளவர்களா

விடுவர். வரப்போகிற நமது சந்ததியினரின் உள்ளங்களில் இஸ்லாமிய உணர்ச்சி உண்டாகி விடும் பக்ஷத்தில் அப்புறம் அவர்களை எதிர்ப்ப தற்கும் அவர்களது முன்னேற்றத்தின் பாட்டையில் தடைகல்லாக இருக்கவும் உலகில் எந்தப்பெரிய அரசாங்கத்தினலும் இயலாது என்பது மட்டும் ஞாபக மிருக்கட்டும். இதற்கு சரியான திருஷ்டாந்தம் நமது முன்னேர்களின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நன்கு தெரியவரும். ஹஜ்றத் இமாம் ஹஸன் (றலி.), ஹஜ்றத் இமாம் ஹுஸைன் (றலி.) ஆகியவர் கள் போன்ற உயிர்த்தியாகிகளான வீரர்கள் எந்தத் தாயின் மடியில் பயிற்சியடைந்தனர் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அவ்விரு பெரியார்களும் மதச் சட்டங்களைப் பேணி நடக்கும் விஷயத்தில் தங்கள் இன்னுயிரையுங் கூட லக்ஷியம் செய்யவில்லை. அவர்கள் வீர தீரமான உறுதியையும், பொறுமையையும், தியாகத்தையும் சமர்ப்பித்தனர். அவைகளுக்கு நிகரான உதாரணத்தைச் சரித்திரம் இன்றள வும் காண்பிக்க முடியவில்லை. இது இஸ்லா மிய போதனையினல் மட்டும் ஏற்பட்ட பய னகும். இவ்விருவரும் ஹஜ்றத் பாத்திமா நாயகி(றலி.) அவர்கள் போன்ற மாதாவின் மடி யில் பயிற்சி யடைந்தனர். நாயகி (றலி.) அவர்கள் உலகிலுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் கிரீடமாக இருக்கிருர்கள் என்பதும், இரு உலகிலும் அவருடைய அந்தஸ்து உலகிலுள்ள எல்லா ஸ்திரீகளைப் பார்க்கினும் மேலானது என்பதும் முஸ்லிம்களது நம்பிக்கை.

நமது சமூகத்திலுள்ள குழந்தைகளைப் பயிற்சி செய்விக்கும் பிரச்சினைதான் வரப்போ கிற நமதுகஷ்டங்களை நிவர்த்திசெய்வதற்குரிய பிரச்சினை என்பதை முஸ்லிம்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடு காடு மட்டில்' என்ற தமிழ்ப்பழமொழிக்கேற்ப ஆரம்பகாலத்தில் பிள்ளைகளின் இருதயங்களில் எந்த உணர்ச்சி உண்டாகின்றதோ அந்த உணர்ச்சியை மாற்றுவது முடியாத காரியம். இதுபோழ்து குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியின்படிதான் அவர்கள் வயது வந்த வுடன் கிரியாம்சையில் கொண்டுவர ஆரம்பிக்கி ருர்கள். ஆரம்பப் பயிற்சி இல்லாமல் இருப்ப வர்கள் எப்பொழுதும் ஜீவியத்தின் இருள்களி லேயே உழலுவார்கள். இப்படிப்பட்டவர்கள் இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றேயாகும். இவ்விஷயம் ஸ்திரீகளின் திறமையை மட்டி லும் தான் பொறுத்தது. எனவே, பிள்ளை களின் பயிற்சிக்கும் அறிவிக்கும் முதல்படி யாகவும் யுனிவர்ஸிட்டியாகவும் இருப்பது மாதாவின் மடிதான். மதா தனது பிள்ளை களின் ஜீவியத்திற்கு கொத்தனுடைய அந் தஸ்திலிருக்கின்ருள். ஸ்திரீகள் நன்னடத்தை, நற்குணம், நல்லொழுக்கம், கல்வி முதலியவை களில்லாமலிருந்தால் வரப் போகிற சமூகம் ஒரு போதும் உச்சஸ்தானத்தையும், செல்வாக் கையும் அடையப் போவதில்லை. இந்த இர கசியத்தை உணர்ந்து கொண்டு இதன்படி நடந்த சமூகங்கள் தான் இன்று முன்னணி யில் அதிகாரத்துடனும் செல்வாக்குடனு மிருக்கின்றன.

நமது நிலைமையோ வெனில், நமது குழந்தை களின் தாய்மார்கள் அறியாமை என்ற பாழ் கிடங்கில் வீழ்ந்து கிடக்கின்றனர். இவர்களி லிருந்து இனிவருகிற நமது சமூகம் உலகில் தலை நிமிர்ந்திருப்பது முடியாதகாரியமாகும். ஆகவே, ஆண்குழந்தைகளைப் பயிற்றுவிப்ப துடன் பெண் குழந்தைகளுக்கும் இஸ்லாமிய ஆசாரங்களையும் கல்விகளையும் பயிற்றுவிக்க வேண்டும். இதனை மறந்திருப்பது ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை விளைவிக்கும் என்பது ஞாபகமிருக்கட்டும்.

சந்தா நேயர்கட்கு!

இதுகாலை காகிதத்தின் விலை இரட்டிப்பாய் உயர்ந்திருக்கிறது. ஒவ்வொரு சந்தா தாரும்தங்கள் தங்கள் சந்தாக்களை முன்பணமாக அனுப்பி பத்திரிகையை ஆதரித்தால்தான் காரியாதிகளை தக்க முறையில் நடத்திச்செல்லமுடியுமென்பது தங்களுக்குத் தெரியாத விஷய மன்று. ஆகவே, சென்ற வருஷத்திய சந்தா பாக்கியிருப்பவர்கள் அதையும், நடைபெறும் வருஷத்திய சந்தாவையும் சேர்த்து அனுப்பிவைக்கும்படியும், பாக்கியில்லாதவர்கள் நடை பெறும் வருஷத்திய சந்தாவை அனுப்பி உதவிபுரியும்படியும் வேண்டுகிறோம்.

ஹஜ்றத் பாயஜீது புஸ்தாமீ (ரஹ்) அவர்களது உபதேசங்கள்

திக்ரு என்னும் ஜபம் எண்ணிக்கையின் மிகுதத்தைப் பொறுத்தில்லே, மறதியில்லாமல் மனோ வோர்மையாக இருப்பதற்குத்தான் 'திக்ரு' என்று பெயர்.

இம்மை மறுமை இரண்டையும் நேசிக்காமலிருப்பதுதான் அல்லாஹு தஆலாவின் மீதுள்ள பிரியமாகும்.

நற்குணமுள்ளவராகவும், சிருஷ்டிப் பொருள்களது சுமையைத் தாங்குபவராகவும் இருப்பவரே அல்லாஹு தஆலாவினிடத்தில் மிகவும் அதிகமாக நெருங்கியவராவார்.

ஹக்கை எவ்விதமாக அறியவேண்டும் என்பதாக ஒருவர் வினவியதற்கு ஹஜ்றத் பாயஜீது புஸ்தாமீ (றஹ்.) அவர்கள் "குருட்டுத் தன்மை, செவிட்டுத்தன்மை, மூடத்தன்மைகளால்" என்று பதிற்கூறினர்கள்.

பசியைப்பற்றி தாங்கள் ஏன் இவ்வளவு அதிகமாகப் போற்றுகிறீர்கள் என்பதாக ஒருவர் வின வியதற்கு, ஹஜ்ரத் (றஹ்.) அவர்கள் "பிர்ஔன் பசியாளியாக இருந்திருந்தால் 'நான்தான் உங்களது மிகவும் உன்னதமான நாயன்' என்று கூறி இருக்கவேமாட்டான்" என்பதாகப் பதிற்கூறினர்கள்.

வணக்கங்களில் ஈடுபட்டு, கஷ்டப்பட்டு முயலுதல் என்னும் வாளினல் தனக்குள்ள எல்லாத் தேவைகளினுடையவும் நாட்டங்களினுடையவும் தலையைத் துண்டித்து, தனது எல்லா இச்சைகளையும், விருப்பங்களையும், ஆசைகளையும் ஹக்கில் அழித்து, அல்லாஹு தஆலாவிற்கு நேசராக இருப்பவரை நேசித்து அல்லாஹுத ஆலாவின் நாட்டம் எதுவோ அதனையே நாடுபவராகவு மிருப்பவரே உண்மையான வணக்கவாளியாக இருக்கிறார்.

சிருஷ்டிப் பொருள்களைவிட்டு ஓடுவதுதான் அல்லாஹுத ஆலாவை அறிந்ததற்குரிய அற்ப அடையாளமாகும். ஆரிபாகிய மெஞ்ஞானிக்கு அவசியமானது தேசத்தையும் பொருளையும் விட்டு ஒதுங்கி இருத்தலேயாகும்.

நல்லோர் சமூகத்திலிருப்பது நற்கிரியைகளைப் பார்க்கினும் மேலானது. கெட்டோர்கள் சமூகத்திலிருப்பது கெட்ட காரியத்தினும் தீது.

தற்பெருமை கொண்டவர் யார் என்பதாக ஒருவர் வினவியதற்கு ஹஜ்றத் (ரஹ்.) அவர்கள் "இவ்வுலகில் தம்மைப் பார்க்கினும் கெட்ட பொருள் ஒன்றிருப்பதாகக் கருதுபவன்" என்று பதிலளித்தார்கள்.

ஹஜ்றத் (றஹ்.) அவர்களது சிஷ்யர்களில் ஒருவர் ஹஜ்றத் (றஹ்.) அவர்களிடம் "நான் 32 வருஷங்களாக தங்கள் சமூகத்திலிருக்கிறேன். தாங்கள் தினந்தோறும் எனது பெயரை விசாரித்துக்கொண்டே இருக்கிறீர்கள்" என்று கூறினர். அதற்கு ஹஜ்றத் (றஹ்) அவர்கள் "நான் பரிகாசத்திற்காக வினவுவதில்லை. நாயனது திருநாமம் என்னிருதயத்தில் வந்ததிலிருந்து எனக்கு எதுவுமே ஞாபகத்திலிருப்பதில்லை" என்று பதிற்கூறினர்கள்.

ஒருமுறை ஹஜ்ரத் (றஹ்.) அவர்கள் ஒரு இமாமுக்கு பின்னுலிருந்துதொழுகையை நிறைவேற்றினர்கள். தொழுகை முடிந்த பிறகு அந்த இமாம் ஹஜ்றத் (ரஹ்.) அவர்களிடம "தங்களுக்கு உணவு எங்கிருந்து வருகிறது?" என்று வினவினர். அதற்கு ஹஜ்றத் (றஹ்.) அவர்கள் "கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். முதலில் தொழுகையைத் திரும்பத் தொழுது கொள்கிறேன்; அப்புறம் உங்கள் கேள்விக்கு பதில் கூறுகிறேன்; உணவளிப்பவனை உணராதவருக்குப் பின்னுல் அவரைப் பின் பற்றித் தொழுகையை நிறைவேற்றுவது ஜாயிஸ் இல்லை" எனக் கூறினர்கள்.

ஹஜ்றத் (றஹ்.) அவர்களது மரணத்தருவாயில் அவர்களது நாவிலிருந்து "நாயனே! நான் உன்னை ஞாபகம் செய்யவில்லை; ஆனல்

நான் அப்படிச் செய்யாதிருந்தது எனது அஜாக்கிரதையினுல்தான். நாயனே! நான் உனக்கு ஊழியம் புரியவில்லை. ஆனுல், நான் அப்படிச் செய்யாதிருந்தது எனது சோம்பலினுல்தான்" என்ற வார்த்தைகள் வெளிவந்துகொண்டிருந்தன.

எவரை அல்லாஹுதஆலா ஏற்றுக்கொள்கிருனே அவருக்குத் துக்கத்தையும் வருத்தத்தையும் கொடுக்கும்படியான அக்கிரமஸ்தனை அவர்மீது நியமிக்கிருன்.

சிருஷ்டிப் பொருள்களின் நடமாட்டங்களேயும் செய்கைகளேயும் சிருஷ்டிக்கர்த்தாவின் மூலமாக நீ அறிவதுதான் 'மஅரிபத்து' என்னும் மெஞ்ஞானம்.

தர்வேஷ்களாகிய பக்கீர்களுக்குப் பணிவதும், பிரபுக்களாகிய அமீர்களிடத்தில் பெருமையாய் நடந்துகொள்வதும்தான் பணிவு என்பதின் கருத்தாகும்.

உனது ஜீவனும்சத்தை ஒரு தினத்திற்கு மட்டிலும் தேடிக்கொண்டு நாளைக்கு வேண்டும் என்ற கவலை கொள்ளாதிருப்பதுதான் 'தவக்கல்' அதாவது அல்லாஹு தஆலாவின் பால் ஒப்புவித்து விடுதல் என்பதாகும்.

நாளையதினம் அல்லாஹு தஆலா உங்களுக்கு அருள்புரிய வேண்டும் என்று நினைத்து அவனை நாடுவீர்களாயின் இன்றையதினமே அவனுக்காகவே (அதாவது அவனது திருப்திக்காக எல்லாக் காரியங்களேயும் செய்பவர்களாக) நீங்களாகி விடுங்கள்.

நன்மையைச் செய்து பயப்படுபவன் தான் நல்லவன். தீமையைச் செய்துவிட்டு அது அங்கீகரிக்கப்படவேண்டுமென்று எதிர் பார்ப்பவன் கெட்டவன்.

உனக்கு ஒருவர் அநீதி செய்தால் அல்லது நஷ்டம் விளைவித்தால் அல்லது உனக்குக் கஷ்டம் கொடுத்தால் நீ பொறுமையாயிருந்து அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவரிடம் பழிவாங்க வேண்டுமென நீ கருதலாகாது. இப்படிச் செய்வதுதான் நற்குணம்.

பர்தா முஸ்லிம் ஸ்திரீகளின் அணிகலன்

மேனுட்டுக் கல்வி பயின்று உயர்தரப்பட்டம் பெற்று உத்தியோகம் வகிக்கும் ஒரு முஸ்லிம் ஸ்திரீயின் அபிப்பிராயம்.

அமிர்தஸரசிலுள்ள 'அஞ்சுமனே இத்திஹாதுல் காத்தின்' அதாவது ஸ்திரீகளின் ஒற்றுமைச் சங்கத்து மகாநாட்டின் நடவடிக்கைகளேப் பற்றியவிபரம் லாகூரில் பிரசுரமாகும் "ஜமீந்தார்" பத்திரிகையில் பிரசுரமாகி இருக்கிறது. உயர்தரக்கல்வி பயின்று பட்டமும் பெற்று உத்தியோகம் வகிக்கும் முஸ்லிம் ஸ்திரீகளிலும்கூட தக்கவர்கள் இருக்கிருர்கள் என்பதைப் பார்க்க நமக்கு மிகவும் சந்தோஷமுண்டாகிறது. இம் மகாநாட்டில் பிரசங்கம் செய்தவர்களில் 'இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், உத்தியோகம் வகிக்கும் ஆனி ஸாகதீஜா பைரோஜுத்தீன் சாகிபாவும் ஒருவர். இவர் ஆங்கிலக் கல்வியில் எம். ஏ, ஒ. எல் பட்டங்களேப் பெற்றவர். அம்மகாநாட்டில் இவர் செய்த பிரசங்கத்தில் இஸ்லாமிய பர்தாவைப் பற்றிக் கூறிய விபரம் வருமாறு :—

பர்தா முஸ்லிம் ஸ்திரீகளின் அணிகலன் (ஆபரணம்-நகை). அதனை அவமதிப்பதை எந்த முஸ்லிம் ஸ்திரீயும் சகிக்க முடியாது. நவீனக் கல்வி பயில்வது அவசியம்தான். ஆனுல், முஸ்லிம்களுக்கு வாரிசுபாத்தியமாகக் கிடைத்திருக்கிற பர்தாபோன்ற விலை மதிக்க முடியாச் செல்வத்தைக் கைதவற விடக்கூடாது. இஸ்லாமிய பர்தாவானது எந்தவிதத்திலும், மதசம்மந்தமானுலும் லௌகீக சம்மந்தமானுலும் முன்னேற்றத்தின் பாதையில் எவ்விதத்தடையையும் உண்டுபண்ணுவதில்லை. முற்காலத்திலுள்ள வீர முஸ்லிம் ஸ்திரீகள் ஷரீஅத்தில் கூறப்பட்டுள்ள பர்தாவின் எல்லைக்குள்ளிருந்துகொண்டே ஒவ்வொரு இயக்கத்திலும் ஆடவர்களுடன் சமபங்கெடுத்துக் கொண்டார்கள். முஸ்லிம் ஸ்திரீகள் தங்களது மதத்தைப் பூரணமாகத் தெரிந்து அதன்படி நடப்பவர்களாக இருப்பதுதான் அவர்களது முதற்

கடமையாகும். ஏனெனில், ஸ்திரீ ஜாதியினர் இஸ்லாமிய வர்ணத்தில் தங்களை வர்ணமிட்டுக் கொண்டிருப்பதில் தான் பிற்காலத்தில் வருகிற நமது சந்ததியினரின் உயர்வும் கௌரமும் மறைந்திருக்கின்றன. ஆங்கிலக்கல்வி பயிலும் முஸ்லிம் ஸ்திரீகள் தங்களது கடமைகளை உணர வேண்டும். முஸ்லிம் ஸ்திரீகளின் வாழ்க்கைலக்ஷியத்தைத் தெரிந்திருக்கவேண்டும். ஆங்கில பாஷையிலுள்ள சில புத்தகங்களைப் படித்து டிக்ரீகளைப் பெற்று விடுவதால் மட்டிலும் தங்களது லக்ஷியத்தை அடைந்து விட்டதாக அவர்கள் எண்ணிக்கொள்ளக் கூடாது. மதசம்மந்தமானவைகளில் அவர்களது இருதயம் இருள் சூழ்ந்ததாக இருந்தால் அவர்களது மேனாட்டுப் பட்டங்களும், அவர்கள் முன்னேற்றமடைந்து விட்டதாகக் காண்பித்துக் கொள்ளும் காக்ஷிகளும் எவ்வித பிரயோஜனமுமில்லாதவைகளாகும். இவ்வித நிலைமை யிருக்குமாயின் மிகவும் பிற்போக்கடைந்த பாமா தற்குறிகளான ஸ்திரீகள் தங்கள் மதக்கடமைகளைச் சரிவர நிறைவேற்றிவரும் பக்ஷத்தில் மேனாட்டுப் படிப்பில் டிக்ரீபெற்றுள்ள ஸ்திரீகளைப் பார்க்கினும் அல்லாஹ்வினிடத்திலும் றஸூலினிடத்திலும் இன்னார் அதிகக்கண்ணியம் பெற்றவர்களாவார்கள்.''

குறிப்பு:—ஆங்கிலக் கல்விகளை நாலைந்து வருஷகாலம் படித்து, மேனாட்டு மோஸ்தாவில் மூழ்கி, மேனாட்டினரின் பழக்க வழக்கங்களைப் பெரிதென மதித்துத் திரியும் சில முஸ்லிம் இளவல்களும், சில காதியானிகளும் ஸ்திரீகளுக்கு பர்தாமுறை மிகவும் அநீதி செய்வதாகும் என்றும், அவர்களுக்குச் சிறைக்கூடமாகுமென்றும், அவர்களும் ஆடவர்களைப் போல் சுத்தமான காற்றையுட்கொள்ள ஆடவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு கடற்கரைக்கு உலாவச் செல்லவேண்டுமென்றும் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டும் பிதற்றிக்கொண்டும் திரிகின்றனர். இவர்களுக்கு, மேனாட்டு ஆங்கிலக் கல்வியில் இரண்டு பட்டங்களைப் பெற்று உத்தியோகப் பதவியிலும் இருந்துவரும் கண்ணியமிக்க ஆனிஸா கதீஜா பைரோஜுத்தீன் சாகிபா எம். ஏ., ஒ. எல். அவர்களது பொன் மொழிகள் தக்க வாயாப்பாகும். ஸ்திரீகளுக்காக வக்காலத்து வாங்கிப் பேசும் அறிவிலிகள் படித்த முஸ்லிம் ஸ்திரீகள் பர்தா முறையை எவ்வாறு கருதுகிறார்கள் என்பதை உணர்வார்களாக.

சமீபத்தில் லாவிஹாலில், ஆங்கிலக் கல்வியில் பட்டம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு உபசாரம் நடத்தப்பட்ட கூட்டத்தில் நம் சென்னை மாகாண முதல் மந்திரி கனம் C. ராஜகோபாலாச்சாரியார் நம் பெண்மணிகள் அநுஷ்டித்துவரும் பர்தா கோஷாமுறையைக் கண்டித்து, முஸ்லிம் ஆண் பட்டதாரிகளுக்கும், முஸ்லிம் பெண் பட்டதாரிகளுக்கு மிடையே விடப்பட்டிருக்கும் இந்த பர்தா வழக்கம் அடுத்த வருடத்திற்குள் நீக்கப்பட்டுப்போய் விடுமென தாம் கருதுவதாகவும், முஸ்லிம் பெண் பட்டதாரிகள் விருந்து மண்டபத்தினுள் சான்ஸலரிடம் சென்று பர்தாவின்றி தங்களது யோக்கியதா பத்திரம் பெறும்போது இப்போது மாத்திரம் இங்கு பர்தா இருக்கவேண்டிய தன் அவசியமென்னவென்றும், உலகம் தலைகீழாக மாறிவரும் இக்காலையில் பர்தாவை நீக்கி விடுவதனால் யாருக்கும் எத்தகைய இடஞ்சலும் கிடையாதென்றும், எவ்வளவுக்கெவ்வளவு ஆண்களும் பெண்களும் நெருங்கி பழகுகின்றார்களோ அவ்வளவுக்கு நன்மை ஏற்படுமென்றும் கூறியுள்ளார். பெண்கள் கோஷா பர்தா முறையை அநுஷ்டிப்பது சம்பந்தமாய் நமது சன்மார்க்கம் யாது கட்டளையிடுகிற தென்பதை அவர் நன்கு தெரிந்து கொள்ளாததே இதற்குக் காரணமாகும். இவ்வாறுதான் இதர மத வாதிகள் தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் வீணே தலையிட்டு வாயில் வந்தவைகளை யெல்லாம், மனதில் தோன்றியவைகளை யெல்லாம் பிதற்றி மக்களிடையே பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணி வைத்துவிடுகின்றனர். இத் தோரணையில்தான் மந்திரி அவர்களுடைய இச்செய்கையும் மக்களிடையே பெரும் ஆத்திரத்தையும் மனக்கசப்பையும் உண்டுபண்ணி வைத்திருக்கிறது. ஆகவே கனம் மந்திரியார் தாம் விஷயம் தெரியாது பிர மதத்தில் தலையிட்டதற்காக வருந்தி தாம் கூறியவைகளை வாபஸ் பெற்றுக்கொள்வாராக.

தமிழ்நாடு ஆவணக காப்பக நூலகம்
சென்னை-600 008

ஹஜ்றத் றஹ்மத்துன் லில் ஆலமீன் (ஸல்.)

மிஸ்டர் கார்லைல், பிரபல ஆங்கில தத்துவ விற்பன்னர், பன்னூல்யாத்த பேராசிரியர். மகா கவி, நீதியும் நேர்மையும் வாய்ந்தவர். அவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறித்துக் கூறிய நீண்ட பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

முஹம்மது (ஸல்.) அவர்கள் சூனியக்காரரல்லர். "நான் சூனியக்காரனன்று; நான் அல்லாஹ்வின் றஸூல்; நபி; எல்லா ஜனங்களுக்கும் அல்லாஹு த ஆலாவின் சமாச்சாரங்களை அறிவிப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறேன்" என்று பலமுறைகளில் அவர்கள் அறிக்கைசெய்திருக்கிறார்கள். ஆனால், இவ்வுலக மனைத்தும் அவருக்கு ஒரு பெரிய மந்திரமாக, சூனியமாக இருந்தது. "இந்த உலகைப்பாருங்கள். இது அல்லாஹு த ஆலாவின் பிரமிக்கத்தக்க வேலைப்பாடாக இல்லையா? இந்த உலகம் முழுவதும் உங்களுக்கு அல்லாஹு தஆலாவைப்பற்றிய செய்தியாகவே இருக்கிறது. உங்களது கண்கள் திறக்கப்படலாகாதா? நீங்கள் இந்தச் சமாச்சாரத்தை உணர்ந்து கொள்ளலாகாதா? இந்த பூமியைப்பாருங்கள். இதனை அல்லாஹு த ஆலா உங்களுக்காகவே சிருஷ்டித்திருக்கிறான். நீங்கள் இதில் வசிக்கிறீர்கள். பிரயாணம் செய்கிறீர்கள்." என்று அவர்கள் பிரசங்கம் செய்தார்கள். அறபிதேசத்தின் பாலைவனங்களில் மேகங்கள் கூடுவது அங்குள்ள ஜனங்களுக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதாக இருந்தது. இதனைக் குறித்து முஹம்மது (ஸல்.) அவர்கள் "ஆகாயத்தில் சஞ்சரித்து மூடிக்கொண்டிருக்கிற இந்த மேகங்கள் மழை பெய்விப்பதற்காக இருக்கின்றன. உங்களது வரண்டதும் செத்துப்போனதுமான பூமிக்கு ஜீவியமளிப்பனவாயிருக்கின்றன. கழனிகள் இவைகளால் செழிப்படைந்து பசுமையாகின்றன. மரங்கள் பூத்துப் பழுக்கின்றன. இவைகள் அல்லாஹு தஆலா ஒருவன் உளன் என்பதற்கு சாக்ஷியமாக இல்லையா? நாற்கால் பிராணிகளை உங்களுக்குக் கீழ்ப்படிபவனவாகச் செய்யப்பட்டிருக்கிறது. அப்பிராணிகள் புற்களை மேய்கின்றன. அப்புற்கள் பாலாகி விடுகின்றன. அவைகளின் உரோமங்களால் நீங்கள் ஆடைகளைச் செய்து கொள்கிறீர்கள். பகல் முழுவதும் அவைகளைக்காட்டில் மேய்த்த பின்னர் வீட்டிற்கு அவைகளை ஓட்டி வருகின்றீர்கள். இவைகள் தான் உங்களது மூலதனம். கப்பல்களைக் கவனியுங்கள்! தங்களது பாவட்டாக்களைப் பரப்பி இருக்கிற இந்தப் பெரிய பெரிய கப்பல்கள் சமுத்திரத்தில் இங்கு மங்கும் செல்வதை நீங்கள் பார்க்கின்றீர்கள். உங்களது ஆண்டவனின் காற்றுக்கள் தாம் இவைகளை இங்குமங்கும் கொண்டு செல்கின்றன. காற்று நின்றுவிடுமாயின் இக்கப்பல்களும் இருந்தவிடத்திலேயே நின்றுவிடும். இது அல்லாஹு தஆலாவினது அற்புதச் செய்கையாயில்லையா? உங்களையே நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். உங்களது உண்மை (உஜூது) தான் என்ன? வென்பதைக் கவனியுங்கள். இது குறைவான அற்புதச் செய்கையா? உங்களை ஒரு அற்பமான பொருளினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இல்லாமலிருந்தீர்கள். இறைவன் உங்களை இன்மையிலிருந்து (அதமிலிருந்து) உண்மையில் (உஜூதில்) கொண்டுவந்தான். உங்களது அவயவங்களில் சக்தியை உண்டாக்கினான். மனித அபிமான உணர்ச்சிகளை உங்களில் உண்டாக்கினான்" என்பதாகவும் பிரசங்கித்தார்கள்.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் வெளியிட்ட இவ்வபிப்பிராயங்களும் உணர்ச்சிகளும் அவர்கள், பூத பௌதிக சாஸ்திரத்தில் மிகப் பெரிய நிபுணராக இருந்தார்கள் என்பதற்கு சாக்ஷியாக இருக்கின்றன. இம் முறையில் அவர்கள் மிகவும் வெற்றி பெற்ற மகா புருஷர் என்றே நான் கருதுகிறேன்.

உலகத்தின் தன்மை

இந்தப்பிரகிருதி உலகம், விசாலமான இக்கோளம் இதர பெரும் பெரும் சீர்திருத்தக்காரர்களுக்கு மிகவும் அற்பமாக இருந்தது

போல ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களுடைய நேத்திரங்கள் இத்னை மதிக்கத்தக்க ஒரு பொருளாகக் கருதவில்லை. ஆம், இதனை அல்லாஹு தஆலாவின் வல்லமைகள் வெளியாகும் ஸ்தலமாக (மல்ஹராக) ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பது மட்டிலும் உண்மை. இந்த பெரிய பெரிய மலைகள் எல்லாம் மேகக் கூட்டங்களைப்போல் பஞ்சு பஞ்சாய்ப்பறந்துவிடும். பூமி நொருக்கப்பட்டு தூசுதூசாய்ப் போய்விடும். இவை எல்லாம் அழிந்துபோகக் கூடியன. ஆனல், அல்லாஹு தஆலாவும் அவனது வல்லமையும் மட்டிலும்தான் அழிந்து போகாதவைகள்'' என்று கூறினர்கள். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது இவ்வபிப்பிராயங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அகமியங்களை நமது புதிய தத்துவ சாஸ்திரம் எட்டிப்பார்க்கக்கூடவில்லை. நாம் பரிபூரணமான சக்தியின் (குத்ரத்தேகாமிலாவின்) உட்கருத்தை விளங்கவைப்பதற்காக அநேகம் வார்த்தைகளைப் புதிதாக உண்டுபண்ணியிருக்கிறோம். மிகப்பெரிய உச்சஸ்தானம் என்று நாம் கருதி இருக்கிற இந்தப் புதிய விஞ்ஞான சாஸ்திரம் ஒரு வஸ்துவாகக்கூட இல்லை. இது ஒரு மொட்டை மரத்திற்குச் சமமேயாகும். இதற்கு நிழலுமில்லை இலையுமில்லை.

இஸ்லாமும் கிறிஸ்துவ அறிஞர்களும்

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது மத போதனைகளைப்பற்றி மிஸ்டர் கார்லைல் தமது அபிப்பிராயத்தைக் கூறுகையில் ''நமது அறிஞர்கள் மிகவதிகமாக நீதியில்லாமல் நடந்து கொண்டனர்; ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்களது போதனைகளில் ஒரு அளவு கண்டிப்பு இருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. என்றாலும், சிரமமில்லாமல் கைகூடுகிற காரியம் உலகில் ஏதாவதிருக்கிறதா? உலகிலுள்ள மிகவும் அற்பமான காரியங்களுக்குக்கூடக் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய நிர்ப்பந்தமிருக்கும்போது மிகப்பெரிய காரியமாகிய மதத்திற்காகக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்பது கூடாத காரியமாகுமா? கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக மனிதர் கஷ்டங்களை அனுபவிப்பதில்லை. இப்படி அனுபவிப்பது மனித இயற்கையுமன்று. மனிதர்கள் கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவிப்பது அவைகளுக் கப்புறம் இன்பத்தை நுகருவதற்குக் காரணமாக இருக்கிறது. இதனல் தான் கஷ்டப்பட்டபின் அனுபவிக்கும் சுகம் மிகவும் மனரம்மியமானதாகத் தோன்றுகிறது.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது சரிதையை நீங்கள் நன்கு படித்துப் பாருங்கள். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது குடும்ப வாழ்க்கை மிகவும் சாமான்யமாகவே இருந்தது. அவர்களது உணவுகளெல்லாம் ரொட்டியும் ஜலமும்தான். மாதக் கணக்கில் அவர்களது வீட்டிலுள்ள அடுப்பில் நெருப்பு எரிக்கப்படுவதில்லை என்பது உங்களுக்கு வெளியாகும். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது இவ்வாழ்க்கையை முஸ்லிம்கள் மிகப் பெருமையாகக் கூறுவர். அவர்கள் தங்கள் கையினலேயே தங்கள் வஸ்திரங்களையும் பாதரக்ஷைகளையும் தைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது 22 வருஷவாழ்க்கை இவைகளாகவே இருந்தது. இதுதான் அவர்களை உச்சி தொடுத்து உள்ளங்கால்வரை அறபியரின் உள்ளத்தில் அதிக பக்தியை யுண்டாக்கிற்று. அறபியர் தங்களது உயிரையும் பொருளையும், மற்ற யாவற்றையும் அவர்களுக்காக தத்தம் செய்தனர். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களிடம் ஏதேனும் ஒரு விசேஷித்த தன்மை இல்லாதிருப்பின் அறபியர் அவர்களுக்காக இவ்வாறு அற்பணம் செய்திருக்கமாட்டார்கள். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு முன்னர் அந்த ஜனங்கள் மிகவும் காட்டுமிராண்டிகளாக இருந்தனர். காரணமில்லாமல் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வது அவர்களது வேலையாக இருந்தது. அவர்களுக்கு வழி காட்டுவதற்காக ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் வந்தார்கள்.

இஸ்லாத்தின் திருநபி (ஸல்.) அவர்களது பெருமை

ஹஜ்றத் முஹம்மது (ஸல்) அவர்கள் வந்த போது அறபியர்கள் அவர்களை நபியென்பதாக அங்கீகரித்துக்கொண்டார்கள். அவர்களிடம் இரண்டு சாக்ஷியங்களிருந்தன. அவர்களது தன்மைகள் ஒன்று, செய்கைகள் மற்றொன்று. இவை இரண்டும் அவர்களுக்கு எதிரில் இருந்தன. இவைகள்மீது எவ்விதத் திரையு மிருக்கவில்லை. அவர்களுடன் அந்த ஜனங்கள் பழகி இருந்தனர். கூடி உண

வருந்தி இருந்தனர். பேசிப் புழுங்கி இருந்தனர். இதனுல்தான் அறபியர் அவர்களுக்காக தங்களது உயிரைக் கொடுக்க ஆரம்பித்தனர். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது உம்மத்துகள் அவர்களை அறிந்தது போல உலகில் எந்தச் சக்கிரவர்த்தியையும் அவரது பிரஜைகள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்களது கைகளால் தைக்கப்பட்ட சட்டையை அணிந்திருந்தார்கள். அதில் அநேகம் ஒட்டுகள் போடப்பட்டிருக்கும். அப்படி இருந்தும் அவர்களது உம்மத்துகள் தங்களிலுள்ள எல்லாப் பொருள்களைப் பார்க்கிலும் அவர்களை அதிகமாக நேசிக்கின்றனர்.

இஸ்லாத்தின் திருநபியின் செய்கைகள்

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது மதம் அவர்களுடைய அந்தஸ்தை தாழ்த்தி விட்டது என்று எவ்விதத்திலும் சொல்ல முடியாது. அவர்களது அந்தஸ்தை இன்னும் அதிகமாகவே ஆக்கிவைத்தது. ஹதீது ஷரீபுகளில் அவர்களுடைய அநேகம் நற்குண நன்னடக்கைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களது புதல்வி மரணமானபோது அவர்கள் கூறிய வார்த்தைகள் அவர்களது பரிசுத்தத் தன்மையையும், நல்லெண்ணத்தையும் அறிவிப்பதற்கு பகிரங்க சாக்ஷியாக இருக்கின்றன. "அல்லாஹு தஆலாவினுலேயே கொடுக்கப்பட்டதை அவனே திரும்ப எடுத்துக் கொண்டான்; அவன்தான் போற்றுதற்குரியவன்" என்றே அவர்கள் கூறினுர்கள். இதுபோன்ற வார்த்தைகளை அவர்கள் தங்களது ஊழியரான ஜைத் (றலி.) அவர்கள் ஷஹீதான போதுங் கூறி இருக்கிறுர்கள். இவர் 'தபூக்' சண்டையில் ஷஹீதானுர். இதனைப் பற்றி ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் "துக்கப்படுவதற்கு எவ்விதக்காரணமுமில்லை; ஜைத் தமது எஜமானனுக்கு ஊழியம் புரிந்தார்; இப்பொழுது அவருடைய எஜமானன் அவரைத் தன்பால் அழைத்துக் கொண்டான்; இது எல்லாம் நல்லதுதான்" என்று கூறினுர்கள். ஆனுல், ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் அவருக்காக அழுது கொண்டிருந்ததை ஜைத் (றலி.) அவர்கள் புதல்வி ஒரு முறை பார்த்து "தாங்கள் ஏன் அழுகிறீர்கள்? இப்பொழுது நான் பார்த்துக் கொண்டிருப்பது என்ன?" என்று வினவினுர். அதற்கு ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் "ஒரு நண்பர் தனது நண்பரை நினைத்து அழுதுகொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறினுர்கள்.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் இவ்வுலகைவிட்டு செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக "மஸ்ஜிது நபவி"க்கு வந்து ஜனங்களை நோக்கி "என்மீது எவருக்கேனும் கடன் இருக்குமாயின் அதனை இப்பொழுதே கூறிவிடுங்கள்; அதனை நான் கொடுத்து விடுகிறேன்" என்று கூறினுர்கள். இவ்வாக்கியங்களை அவர்கள் இரண்டாவது முறையும் கூறிய போது ஒருவர் "தாங்கள் என்னிடம் மூன்று திர்ஹம்களை வாங்கி இருக்கிறீர்கள்" என்று கூறினுர். உடனே, ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் அம்மூன்று திர்ஹம்களையும் கொடுத்துவிட்டு "அவ்வுலகில் வெட்கத்தை அடைவதைப் பார்க்கினும் இவ்வுலகில் வெட்கத்தை அடைவது எத்தனையோ மடங்கு சுலபமானது" என்பதாகக் கூறினுர்கள்.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் சிறந்த மனிதர் என்பதற்கு இவைகளெல்லாம் சாக்ஷியங்களாக இருக்கின்றன. நம் எல்லோர் மீதும் அவர்கள் அபிமானங் கொண்டிருந்தார்கள். நமக்காக வருந்தினுர்கள். இதனுல்தான் 12 நூற்றுண்டுகள் சென்றும் அவர்கள் இன்னமும் ஜீவியமுள்ளவர்களாக மக்களுள்ளத்திலிருந்து வருகின்றுர்கள்.

பரிபூரண மனிதத்துவம்.

ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களிடம் பிறர் மெச்ச ஒன்றைச் செய்தல், வெளிப்பகட்டு என்பவைகள் பெயருக்குக்கூட இல்லை. இதனுலும் அவர்களை நான் அதிகமாக நேசிக்கிறேன். அவர்கள் மிகவும் சாதாரண மனிதராக இருந்தார்கள். அந்தரங்கத்தில் அவர்களிடம் எது இருக்கிறதோ அதனையே அவர்கள் ஜனங்களிடம் காண்பித்தார்கள். அவர்கள் அகம்பாவம், தற்பெருமை கொண்டவர்களல்லர். ஆனுலும், உலகிலுள்ள எந்தச் சக்தியும் அவர்களைப் பயப்படும்படி செய்வதற்கான அளவிற்குப் பணிவு உள்ளவர்களுமல்லர். (அதாவது அவர்களைப் பயமுறுத்திப் பணியச்செய்ய முடியாது). தங்களது கையாற் தைக்கப்பட்ட வஸ்திரத்தையும், பாதரக்ஷையையும் அணிந்து கொண்டு கைஸர், கிஸ்ரா முதலிய சக்ரவர்த்திகளுக்கு உத்தரவு கொடுப்பவராக இருந்தார்கள். அந்த சக்கரவர்த்திகளது புற ஆடம்பர

வைபவங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் கண்டு அவர்களுக்கு பயப்படுபவர்களல்லர். 'பதவி' அறபியருடன் நிகழ்ந்த யுத்தங்களில் மனித உதிரம் சிந்தப்பட்டது என்பதிற் சந்தேகமில்லை. ஆனாலும் எவருக்கும் அநீதி செய்யப்படவில்லை. ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்கள் ஒளிவு மறைவின்றிப் பேசுபவர்கள். சத்தியத்தைக் கூறுவதில் அவர்கள் கிஞ்சிற்றும் பின்வாங்மாட்டார்கள். 'தபூக்' சண்டையின்போழ்து வெய்யல் உஷ்ணத்தால் ஸஹாபிகள் முறையிட்டனர். அதற்கு அவர்கள் "இது அளவிற்கதிகமான உஷ்ணம்தான். இந்த வெய்யல் ஒருநாளைக் குத்தானிருக்கும். ஆனால், 'மஹ்ஷர்' நாளில் இருக்கிற வெய்யல் எவ்வாறிருக்கும். காலநிலையோ இது போழ்து சகிப்பதற்கு முடியாததாக இருக்கிறது என்பது மெய். என்றாலும், நரகத்தின் நெருப்பு இதனைப் பார்க்கினும் சகிக்கமுடியாமலிருக்கும்" என்று கூறினார்கள்.

பிரதம அறிகர்கள் பெருமானார் (ஸல்.) அவர்கள் விஷயமாய்க் கூறியிருப்பவைகளை நம்மவர் ஊன்றி கவனித்து உணர்ச்சி பெறுவார்களாக.

புத்தகாலய இயக்கம்

(சென்றமாத 180-ம் பக்கத் தொடர்)

இந்தியா

வேத காலத்திலுங்கூட இந்தியாவில் எழுத்து வேலை இருந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அக்காலத்தில் புத்தகங்க ளெழுதப்பட்டனவா? அப்பொழுது எழுதப்பட்ட புத்தகங்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டனவா? என்ற விபரம் தெரியவில்லை. புத்த மதம் இந்தியாவில் பிரபல்யமடைந்திருந்த காலத்தில் அநேகம் புத்தகாலயங்களிருந்தன வென்று ருஜுவாகிறது. அக்காலத்தில் இந்தியாவிற்குள் மட்டுமில்லாமல் இந்தியாவிற்கு வெளியிலுங்கூட ஏராளமான நூல்கள் கொண்டு போகப்பட்டு வந்தன. பாகியான் என்பவர் பனைஓலையில் எழுதப்பட்ட 520 ஏடுகளைத் தம்முடன் சீனாவிற்குக் கொண்டுபோனதாகவும், இதிசிங் என்பவர் புத்தமத சம்மந்தமான, 500 புத்தகங்களை சீனாவிற்கு அனுப்பிவைத்ததாகவும் இப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் 600 சுலோகங்கள் எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. கி பி. 568-ம் வருஷத்திய வல்லப சிங்கின் சாசனங்களில் அக்காலத்தில் புத்தகங்களுக்காக தர்மம் கொடுப்பதைப் பற்றிய பிரஸ்தாபம் காணப்படுகிறது. 7-வது நூற்றாண்டில் "ரத்னவதி" புத்தகாலயம் மிகப்பிரபல்யமாக இருந்தது. அது ஒன்பது மெத்தையுள்ள பிரமாண்டமான கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதில் முன்னூறு அறைகளிருந்தன. குப்த வம்சத்தினர் ஆட்சிபுரிந்த காலத்தில் கோவில்களிலும் மடங்களிலும் புத்தகங்கள் ஏராளமாகச் சேமித்து வைக்கப்பட்டு வந்தன. பால் அரசர்கள்காலத்தில் ஒளதனத்புரி, விக்கிரமசாலை முதலிய கல்வி ஸ்தாபனங்களில் சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் போதிய அளவு கிரந்தங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. விக்கிரமசாலையிலுள்ள புத்தகாலயம் மேற் சொல்லப்பட்ட தனாதி புத்தகாலயத்தைப் பார்க்கினும் பெரிதாக இருந்தது. இங்கிருந்த ஏராளமான புத்தகங்கள் நேபாளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. குஜராத், கத்தியவார் ஆகிய தேசங்களில் ஜைனர்களது புத்தகங்களிருந்தன. தாரில் ராஜாபோஜ் என்பவர் புத்தகாலய மேற்படுத்தி இருந்தார். சாளக்கிய ராஜரான வேசல் தேவர் "பாரதி பாண்டகார்" என்பதாக ஒரு பெரும் புத்தகாலயத்தை ஏற்படுத்தி இருந்தார். ஹைதராபாத்திலுள்ள கற்சாசனங்களிலிருந்து சாளக்கிய அரசனை நாராயணன் என்பவரது திவான் மதுசூான் என்பவர் ஒரு கல்விச்சாலை ஏற்படுத்தி இருந்தார். அதிலிருந்த புத்தகாலயத்தில் 6 பேர் லைப்ரேரியனாக இருந்தனர். அவர்களது அந்தஸ்து அங்குள்ள போதானாசிரியர்களுக்குச் சமமாக இருந்தது. தக்ஷணத்திலுள்ள சோழ அரசர்களும் தமிழ்ப்பாஷையில்

புத்தகாலயங்களை ஏற்படுத்தி இருந்தனர். அவைகளுக்கு "பட்டி மண்டபம்" என்று பெயர்.

முஸ்லிம் அரசர்களது புத்தகாலயங்கள்

முஸ்லிம் அரசர்களும் பெரும் பெரும் புத்தகாலயங்களை ஏற்படுத்தி இருந்தனர். அலாவுத்தீன் கில்ஜீயின் புத்தகாலயத்திற்கு பிரபல கவிச் சக்கிரவர்த்தியான அமீர் குல்ஸ் என்பவர் தான் அதிபராக இருந்தார். இதே காலத்தில் ஹஜ்றத் நிஜாமுத்தின் அவ்லியா மஹ்பூபே இலாஹி (றஹ்.) அவர்களிடத்திலும் ஒரு பெரிய புத்தகாலயமிருந்தது. தக்கணத்தில் பஹ்மினி அரசாங்கத்தில் முஹம்மது காவான் என்பவருக்கு ஒரு புத்தகாலயமிருந்தது. அதில் கையேட்டுப் பிரதிகள் மட்டிலும் 3 ஆயிரமிருந்தன. முகலாய சக்கிரவர்த்திகளுக்குப் புத்தகங்கள்பாலிருந்த ஆர்வம் உலகப் பிரசித்தம். ஹுமாயூன் "ஷேர் மண்டலம்" என்ற கட்டிடத்தில் தமது புத்தகாலயத்தை வைத்திருந்தார். அக்கட்டிடத்துப் படிகளின் மீதிருந்து விழுந்துதான் அவர் மரித்தார். அக்பர் சக்கிரவர்த்தியின் காலத்தில் ஏராளமான சமஸ்கிருத நூல்கள் பாரசிக பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. புத்தகங்களைத் தருவித்துச் சேமித்து வைப்பதில் இவருக்கு மிகுந்த ஆர்வமிருந்தது. குஜராத்திலிருந்து ஏராளமான புத்தகங்களைத் தமது புத்தகாலயத்திற்குக் கொண்டுவந்தார். "பைஜீ" என்பவரது புத்தகங்களும் அரசாங்கப் புத்தகாலயங்களிற் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இப்புத்தகங்கள் மூன்று பாகங்களாக வைக்கப்பட்டிருந்தன. ஒரு பாகத்தில் வைத்தியம், வான சாஸ்திரம், இலக்கண இலக்கியம், காவியம் முதலியன. மற்றொரு பாகத்தில் தத்துவ சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலியன. மூன்றாவதில் மதசம்மந்தமான கிரந்தங்கள் இருந்தன. ஜஹாங்கீர், ஷாஜஹான் சக்கிரவர்த்திகளுக்கும் புத்தகங்களைச் சேமித்து வைப்பதில் மிகுந்த ஆர்வமிருந்தது. முகலாய அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பின்னர் வட இந்தியாவில் அயோத்தி நவாப்களும் தென்னிந்தியாவில் ஹைதராபாத் நிஜாமும், மைசூர் திப்பு சுல்தானும் புத்தகங்களைச் சேமித்தனர். அயோத்திப நவாப்களது புத்தகாலயம் சிப்பாய் கலகத்தின் போழ்து அழிந்தது. திப்பு சுல்த்தானது புத்தகாலயத்திலிருந்த கிரந்தங்கள் அவரது மரணத்திற்குப் பிறகு, கல்கத்தாவிற்குக் கொண்டு போகப்பட்டன.

அரசாங்கப் புத்தகாலயங்களைத் தவிர மந்திரங்களிலும், மடங்களிலும், மஸ்ஜிதுகளிலும், மத்ரஸாக்களிலும் தனி தனிப் புத்தகாலயங்கள் இருந்தன. பூர்வீக காலத்திலிருந்து பனாரஸ் சமஸ்கிருத கல்விக்கு மத்திய இடமாக இருந்து வருகிறது. இங்கும் பல புத்தகாலயங்களிருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சி

இந்தியாவில் ஆங்கிலேயர்களது ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இந்தியாவிலுள்ள கையேட்டுப் பிரதிகள் லக்ஷக் கணக்கில் மேனாட்டிற்குக் கொண்டுபோகபட்டுவிட்டன. பாரிஸ், பர்லின், இங்கிலாந்து ஆகிய இடங்களிலுள்ள புத்தகாலயங்களைப் பற்றிய விபரத்தில் அங்குள்ள சமஸ்கிருத அறபி பாரசீக கிரந்தங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதுபொழுது சில காலமாக இந்திய நூல்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பூனாவிலுள்ள "பாண்டர் ரீசர்ச் இன்ஸ்டிடியூஷனில்" 20 ஆயிரம் கிரந்தங்களும், சென்னை ஒரியண்டல் லைப்ரேரியில் 23 ஆயிரம் கிரந்தங்களும், கல்கத்தாவிலுள்ள ஏஷியாட்டிக் சொஸைட்டியில் 14 ஆயிரம் கிரந்தங்களுமிருக்கின்றன. அடையார் தியாஸபிகல் சொஸைட்டி, பனாரஸ் சரஸ்வதிபவன், தஞ்சாவூர் புத்தகாலயம் ஆகியவைகளிலும் சமஸ்கிருத கிரந்தங்கள் ஆயிரக்கணக்கிலிருக்கின்றன. சுதேச சமஸ்தானங்களில் பரோடா, மைசூர், பிகானீர், ஜெய்ப்பூர், ஜோட்பூர், காஷ்மீர், திருவாங்கூர், நேபாளம் ஆகிய இடங்களிலும் கையேட்டுப் பிரதிகளிருக்கின்றன. அறபி பார்ஸி கிரந்தங்களுக்கு இரண்டு பெரிய புத்தகாலயங்களிருக்கின்றன. ஒன்று பாட்னாவில் குதாபக்ஷ் லைப்ரேரி, மற்றொன்று ஹைதராபாதில் ஸெய்யித்அலி பல்கராமீ லைப்ரேரி. பாட்னாவிலுள்ள குதாபக்ஷ் லைப்ரேரியில் முகலாய சக்கரவர்த்திகளின் விலையுயர்ந்த அநேகம் கையேட்டுக் கிரந்தங்களிருக்கின்றன. குதாபக்ஷ் என்பவரது தந்தைக்கு கையேட்டுப் பிரதிகள் பால் ஆர்வம் அதிகம். அவர் மரிக்கும்போது அவரிடம் 1,400 கையேட்டுப் பிரதிகளிருந்தன. இவர் மரிக்கும்போது இதனை இயன்றவரை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று வஸிய்யத்துச் செய்தார். அவரது புதல்வரான குதா

பக்ஷ் தமது தந்தையின் இவ்வஸிய்யத்தைப் பூரணமாக நிறைவேற்றினர். அவர் பீகாரில் ஜட்ஜாக இருந்தார், லக்நௌ, டில்லி, ஹைதராபாத் ஆகிய இடங்களுக்கு அவர் சென்று மிகப்பிரயத்தனத்துடன் கையேட்டுப் பிரதிகளை ஒன்று சேர்த்தார். அரேபியா, திமிஷ்கு, எகிப்து, ஈரான் ஆகிய தேசங்களிலுள்ள கையேட்டுப் பிரதிகளை வாங்கி வருவதற்காக ஒரு அறபியை வேலைக்கமர்த்தி இருந்தார். இந்தப் புத்தகங்களைக் கிரயத்திற்கு வாங்கி இங்கிலாந்திற்குக் கொண்டுபோய்விட வேண்டுமென்பதற்காக பிரிட்டிஷ் மியூஸியம் பெருந்தொகை கொடுப்பதாகக் கூறிற்று. அதனை குதாபக்ஷ் நிராகரித்து "நான் ஏழை மனிதன்; இக்கிரந்தங்கள் தாம் எனது தந்தைக்கும் எனக்கும் செல்வமாகும்; இவை பாட்னுவின் பொது ஜனங்களுக்குக் காணிக்கையாகும்; இவை அங்குதானிருக்கவேண்டும்" என்று கூறி விட்டார்.

தற்போதுள்ள புத்தகாலயங்களில் கல்கத்தாவிலுள்ள "இம்பீரியல் லைப்ரரி"க்கு விசேஷ மதிப்புண்டு. சென்ற 1845-ம் வருஷத்தில் சில ஜனங்கள் கல்கத்தாவில் ஒரு புத்தகாலயத்தைத் திறந்தனர். 1899-ம் வருஷத்தில் லார்டு கர்ஜன் இந்திய வைஸிராயாக இருந்த போது சர்க்கார் புத்தகாலயம் சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டிலும் உபயோகமாக இருப்பதால் இப்புத்தகாலயத்தையும் அதனுடன் இணைத்துவிட்டால் பொது ஜனங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று அபிப்பிராயப்பட்டு 1902-ம் வருஷத்தில் சட்டத்தின் மூலமாக இவ்வபிப்பிராயத்தை அமலில் கொண்டு வந்தார். சரித்திர மெழுதுவோருக்குப் போதியவளவு தகவல் கிடைக்கத் தகுந்தவாறு இந்தியா சம்மந்தமாக எழுதப்படுகிற எல்லா கிரந்தங்களும் இங்கிருக்கவேண்டும் என்பதாகவும் திட்டஞ்செய்தார். உண்மையில் இப்புத்தகாலயம் இந்நோக்கத்தை நன்கு பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. முக்கியமாக பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மந்தமாக இங்கு கிடைக்கும் புத்தகங்கள் இந்தியாவிலுள்ள வேறு எந்தப்புத்தகாலயத்திலும் கிடைக்கமாட்டாது. இங்கு 285 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. இந்தியாவிலுள்ள வேறு எந்தப் புத்தகாலயத்திலும் இத்தனை கிரந்தங்களில்லை. இதனை "காப்பிரைட் டிபாசிட்டாக" ஆக்க வேண்டும் என்று வெகுகாலமாக முயற்சி நடந்து வருகிறது. இன்னமும் இதில் வெற்றி யேற்படவில்லை. அவ்வாறு செய்யப்பட்டு விட்டால் இந்தியாவில் பிரசுரமாகிற எல்லாப் புத்தகங்களையும் இப்புத்தகாலயத்தில் பார்க்க முடியும். இந்தியாவில் வருஷந்தோறும் ஏறக்குறைய 8 ஆயிரம் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. கல்கத்தாவைத் தவிர அலஹபாத், லக்நௌ, லாகூர், பம்பாய், சென்னை முதலிய இடங்களிலும் பொது ஜன உபயோகத்திற்கென புத்தகாலயங்கள் பலவிருக்கின்றன.

சர்வகலாசாலைகளிலுள்ள புத்தகாலயங்கள் அங்குள்ளவர்களுக்கு மாத்திரம் பிரயோஜனப்படுகின்றன. அவைகளில் உயர்தரமான புத்தகங்கள் தாம் அதிகமிருக்கின்றன. இதுவரை ஒரு லக்ஷம் புத்தகங்களுக்கு அதிகமாகவுள்ள புத்தகாலயம் இவைகளில் ஏற்படவில்லை. கல்கத்தா சர்வகலாசாலையின் புத்தகாலயத்தை கட்டுவதற்காக தர்பங்கா ராஜா ராமேஸ்வரசிங் பணங் கொடுத்தார். பனாரஸ் சர்வகலாசாலையின் புத்தகாலய கட்டிடத்திற்காக பரோடா மகாராஜா இரண்டு லக்ஷம் ரூபாய் கொடுத்தார். தற்போது தேசிய பாஷைகளிலுள்ள புத்தகங்களுக்கென நல்ல புத்தகாலயம் ஏற்படவில்லை. வருஷந்தோறும் தேசிய பாஷைப் புத்தகங்களதிகமாகிக்கொண்டே இருக்கின்றன. ஆனுல், இது விஷயத்தில் மிகவும் குறைவாகக் கவனஞ் செலுத்தப் படுகிறது. இது சம்பந்தமாக வங்க பாஷைப் புத்தகங்களுக்கென கல்கத்தாவிலும், ஹிந்திப் புத்தகங்களுக்கென பனாரஸிலும், மராட்டியப் புத்தகங்களுக்கென பம்பாயிலும், பூனுவிலும் புத்தகாலயங்களேற்பட்டிருக்கின்றன.

சுதேச சமஸ்தானங்களின் புத்தகாலயங்கள்

பிரிட்டிஷ் இந்தியாவைப் பார்க்கினும் சுதேச சமஸ்தானங்கள் இவ்விஷயத்தில் அதிகம் முன்னேறி இருக்கின்றன. மேனாட்டு முறையில் புத்தகாலயங்களை ஒழுங்கு படுத்துவதற்காக முயற்சி எடுத்துக்கொண்ட பெருமை பரோடா மகாராஜாவிலிருந்து வருகிறது. ஐரோப்பிய அமெரிக்கப் புத்தகாலயங்களைப் பார்த்த பிறகு அவை போன்ற புத்தகாலயங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற விருப்பம் அவருக்கேற்பட்டது. ஆகவே, சென்ற 1910-ம் வருஷத்தில் அமெரிக்காவிலிருந்து மிஸ்டர் போர்டன் என்ற ஒரு நிபுணரை தம்முடனழைத்து அதே வருஷத்தில் சமஸ்தானத்

தில் புத்தகாலயங்களுக்கென தனி இலாக்கா ஒன்றை ஏற்படுத்தினர். இவ்விலாக்காவின் மேல்பார்வையில் தற்போது 45 நகர புத்த காலயங்களும், 818 கிராமப்புத்தகாலயங்களும், 463 நகரும் புத்தகாலயங்களும், 200 படிக்கு மிடங்களும் இருக்கின்றன. இவைகளுக்கென வருஷந்தோறும் ஒரு லக்ஷத்திற்கதிக மான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. நகரபுத்த காலயங்களில் பரோடாவிலுள்ள மத்திய புத்த காலயம் மிகச் சிறந்தது. அதில் ஒரு லக்ஷத் திற்கதிகமான புத்தகங்களிருக்கின்றன. அங்கு ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் தனிப்பிரிவு இருந்து வருகிறது. குழந்தைகளுக்குள்ள பிரிவில் விளையாட்டு சாமான்களும், கதைப் புத்தகங்களுமிருக்கின்றன. இவைகளைப் படித்துப் பிள்ளைகளுக்குப் படிப்பில் அதிகம் ஆர்வமுண்டாகவேண்டும் என்பது நோக்கம். அதில் தினசரி 60 அல்லது 70 பிள்ளைகள் வந்து படிக்கின்றனர். சமஸ்தானத்திலுள்ள ஜில்லா, தாலுக்கா, கிராமங்களில் மூன்று வித மான புத்தகாலயங்களிருக்கின்றன. ஒருவர் ஒரு கிராமத்திற்கு அல்லது ஒரு தாலுக்கா விற்கு நூறு அல்லது முன்னூறு ரூபாய்கள் வருஷ வருவாய் கிடைக்கும்படிச் செய்வா ராயின் அத்தனை தொகை அவருக்கு ஜில்லா பஞ்சாயத்திலிருந்து அல்லது சமஸ்தானத்தி லிருந்து கொடுத்து புத்தகாலய மேற்படுத்தப் படுகிறது. புத்தகாலய கட்டிடத்திற்கும் இது போலவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நகரும் புத்தகாலயங்களில் சிறு சிறு பெட்டிகள் நிரம்ப புத்தகங்கள் வைக்கப்பட்டி ருக்கின்றன. இவைகள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு அங்குள்ளவர்களுக்குப் படிக் கக் கொடுக்கப்படுகின்றன. இவை வாரந் தோறும் அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை பிரதி கிராமங்களுக்கும் வரும். சினிமா, கண்காக்ஷி, மகாநாடுகள், சங்கங்கள் ஆகியவை களில் பிரசங்கங்களின் மூலமாக புத்தகாலயங் களை ஏற்படுத்தி அவைகளை அபிவிருத்தி செய் வதுபற்றிப் பிரசங்கங்கள் புரியப்படுகின்றன. புத்தகாலயங்களை ஒழுங்குபடுத்தி நிர்மாணிப் பது சம்பந்தமாக பரோடா நகரிலுள்ள மத் திய புத்தகாலயத்தில் படித்துக் கொடுக்க ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிறது. மைசூர், திரு வாங்கூர் ஆகிய சமஸ்தானங்களிலும் இவ்வித மான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி நடை பெற்றுவருகிறது. மைசூர் சமஸ்தானத்தில் பெங்களூரிலுள்ள பப்ளிக் லைப்ரேரி பிரசித்தி பெற்றது.

புத்தகாலய மகாநாடுகள்

கொஞ்சகாலமாக நமது நாட்டில் புத்தகால யங்களை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் கவனஞ் செலுத்தப்பட்டு வரு கிறது. வங்காளம், பாஞ்சாலம், சென்னை மாகாணங்களில் புத்தகாலய கான்பரன்சுகள் நிறுவப் பட்டிருக்கின்றன. பெயரளவில் அகில இந்திய புத்தகாலய கான்பரன்சு இருந்து வருகிறது. ஆனால், அது தூங்கிக் கொண்டுதானிருக்கிறது. இதர தேசங்க ளுடன் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியா எவ்வளவு பிற்போக்கிலிருக் கிறது என்பது புலப்படும். இதற்குப் பல காரணங்களுள. இவ்விஷயத்தில் அரசாங்கம் கவனஞ் செலுத்தாமலிருப்பதுதான் முக்கிய காரணமாகும். இதற்காகப் பணத்தைச் செலவு செய்வது ஒருபுறமிருக்கட்டும் "காப்பிரைட் டிபாசிட் புத்தகாலய"மாக ஒன்றை நிர்ணயிக்க வும் கூட அரசாங்கத்திற்கு தைரியமில்லை.

புத்தகாலய ஒத்துழைப்பு

இப்பொழுது சிலகாலமாக புத்தகாலய இயக்கம் ஒரு அடி முன்னேறி வந்திருக்கிறது. புத்தகாலயங்களை ஏற்படுத்தும் முறையிலும் ஒரு மாறுதலேற்பட்டிருக்கிறது. பல இடங்க ளில் ஒன்றுபோலுள்ள புத்தகாலயங்களை ஏற் படுத்தும் நோக்கம் மாறி அக்கம்பக்கத்தி லுள்ள புத்தகாலயங்களை ஒன்றுடன் ஒன்றாக இணைத்துஇவைகளுக்கிடையில்ஒத்துழைப்பை ஏற்படுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது. இவ்விஷயமாக தேசத்தைப் பல மாகாணங்க ளாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திலும் எத்தனை புத்தகாலயங்களிருக்கின்றனவோ அவைகளை எல்லாம் ஒரு சங்கமாக இணைக்கப் படுகிறது. இச்சங்கத்தின் காரியாலயம் ஒரு புத்தகாலயத்திலிருக்கும். இக் காரியாலயத் தில் எல்லாப் புத்தகாலயங்களையும் அவைகளி லுள்ள புத்தகங்களையும் பற்றிய அட்டவணை இருந்து வரும். ஒருவருக்கு ஒரு புத்தகால யத்தில் ஒரு புத்தகம் அகப்படவில்லையானால் அப்புத்தகாலயத்தலைவர் மாகாண புத்தகால யத்திற்கு தகவல் கொடுத்தால் அப்புத்தக முள்ள புத்தகாலயத்திற்கு தகவல் கொடுத்து அதனைத் தேவையுள்ளவருக்குக் கிடைக் கும்படிச் செய்யப்படுகிறது.

இவ்வாறுன மாகாண கான்பரன்சுகளுக்கு மத்திய கான்பரன்சு ஒன்றிருக்கிறது. இது தேசம் முழுவதற்கும் பொதுவானது. மாகாண புத்தகாலயம் ஒன்றில் ஒரு புத்தகம் கிடைக்க வில்லையானல் அப்புத்தகாலயத்தின் மூலமாக மத்திய புத்தகாலய கான்பரன்சுக்குத் தெரி வித்தால் அப்புத்தகமுள்ள வேறு மாகாண புத்தகாலயத்திற்கு எழுதி அதனைக் கிடைக் கும்படிச் செய்வது அதன்வேலை யாகும். இதனல் அநேகம் நன்மைகளுண்டு. சிறுசிறு புத்தகாலயங்களிலும் கூட இம் முறையினல் புத்தகத்திற்குக் குறை யேற்படமாட்டாது. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் சகலவிதமான புத்தகங்களு மிருக்கவேண்டுமென்ற அவசியமு மேற்படாது. புத்தகங்களை வாங்கும் சிரமமு மில்லை. இதனை அல்லாமல் படிப்பவருக்கும்சிரம மில்லை. தேசத்திலுள்ள எல்லா புத்தகங்களை யும் படிப்பதற்குத் தக்கவசதியு மிருக்கிறது.

முஸ்லிம்கள் இந்தியாவிற்கு எப் பொழுது வந்தார்கள்?

ஆங்கிலக் கல்விபயின்ற நமது வாலிபர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த முதல் முஸ்லிம் முஹம்மதுப்னு காஸிம் (றஹ்.) என்பவர் தான் என்று கருதிவருகின் றனர். பொருத்தமற்றதும் நிறைவில்லாததது மான போதனமுறைத் திட்டத்தை ஏற்படுத் தியிருக்கிற நமது சர்வகலாசாலைகளே இந்தத் தவறுக்கு அசல் பொறுப்பாளிகளாகும். ஆயி னும், சரித்திரத்தில் தங்களுக்குப் பாண்டித்து வமேற்பட்டு விட்டதாக நினைத்துக்கொண்டி ருக்கும்ஆங்கிலம்படித்தவர்கள்இந்தத்தவறுக்கு ஜவாப்தாரிகளாக இல்லை என்று கூறமுடியாது. சர்வகலாசாலைகளுக்கும் அவைகளின் மாணவர் களுக்கும் மேலில் வேறு கூட்டம் ஒன்று ளது. அக்கூட்டத்தினரின் சமிக்ஞைபின் படியே அவர்களும் அவைகளும் நடக்கின்றன. ஆகவே, அவர்கள் தவறிவிருந்தால் சர்வகலா சாலைகளும் மாணவர்களும் தவறிவிட வேண்டி யவர்களே யாவர்.

முஹம்மதுப்னு காஸீம் ஹிஜ்ரீ 89-ம் வரு ஷத்தில்தான் ஸிந்து மீது படையெடுத்தார். அக்காலத்தில் அப்துல்மலிக்கிப்னு மர்வான் கலீபாவாக இருந்தார். ஹஜ்ஜாஜுப்னு யூஸுப் இராக்கு கவர்னராக இருந்தார். இரண்டாவது கலீபா ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் காலத்தில் முஸ்லிம்களுக் கேற்பட்ட வெற்றி கள் கணக்கிடமுடியா. இவர்களது ஆட்சி காலத்தில் இந்தியாவின்மீது படை யெடுக்கப் பட்டது என்பதற்கு சரித்திர ஆதாரங்களிருக் கின்றன. இது மட்டுமல்ல, இதற்கப்புறமும் முஹம்மதுப்னு காஸிம் படை யெடுப்பதற்கு முன் பலமுறை இந்தியாவின்மீது படை யெடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வரு மாறு.—

1. ஹிஜ்ரி 15-வது வருஷத்தில் இரண்டா வது கலீபா ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர் களது காலத்தில் உதுமானுப்னு அபில்ஆஸ் (றலி.) அவர்கள் பஹ்றைனுக்கும் உம்மானுக் கும் வைசராயாக இருந்தார். இவர் உத்தி யோகப்பதவி யேற்றவுடன் பஹ்ரைன் மாகாண ஆட்சியைத் தமது சகோதரர் ஹக்கம் என்பவ ரிடம் ஒப்புவித்துவிட்டு, உம்மானுக்கு நேரடி யாக வந்து ஒரு கடற்படையைத் தயார் செய்து பம்பாய்க்கு அனுப்பிவைத்தார். அக் காலத்தில் பம்பாய்க்கு "தாண" என்ற பெயர் இருந்தது. இக்கடற்படை இந்தத் தாக்கில் வெற்றியடைந்து உம்மானுக்குத் திரும்பிற்று. இதன் விபரத்தை கலீபா அவர் களுக்கு உதுமான் எழுதியனுப்பினர்.

2. வைசராய் உதுமான் இந்த ஒரு படை யெடுப்புடன் நிற்கவில்லை. மற்ருெரு கடற் படையைத் தயார் செய்து அதற்கு தமது சகோதரர் ஹக்கமை அட்மிரலாக நியமித்து புரோச்சுக்கு அனுப்பிவைத்தார். அக்காலத் தில் புரோச் நர்மதை நதியின் மீதுள்ள பிரபல மான துறைமுகம். இக்காலத்தில் அத்துறை

முகத்திற்கு அத்துணை பிரபல்யமில்லை யென்றாலும் அந்த நகரம் அதே பெயரின் பேரில் இன்னமுமிருந்து வருகிறது.

3. இம்முறை வைசராய் உதுமான் புரோச்சின் மீது மட்டிலும் படை யெடுக்காமல் அக்காலத்தில் இந்தியாவில் மிகப் பெரிய துறைமுகமாக இருந்த 'தேபில்' என்ற நகருக்கனுப்பினார். இங்கு வந்த கப்பற் படைக்குத் தமது மற்றொரு சகோதரரான 'முகையரு' என்பவரை அட்மிரலாக நியமித்தார். இத்துறைமுகம் சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்தது. இப்பொழுது இந்நகரம் இருந்தவிடம் தெரியாமல் அழிந்துபோயிற்று. இங்கு பலமான சண்டை நிகழ்ந்தது. இறுதியாக இந்தியர் தோற்றனர். முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது.

4. நான்காவது முறை நிகழ்ந்த இந்த தாக்குதை இரண்டாவது கலீபா அவர்கள் காலத்திலேயே நிகழந்தது. மூன்றாவது கலீபாவான ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் காலத்தில் நிகழ்ந்ததாகவும் சிலர் கூறுவர். இம் முறை ஹக்கமுப்னு அம்று தஃலபி என்பவர் கரை மார்க்கமாக பலுச்சிஸ்தானைக் கடந்து சிந்து நதிவரை வந்தார். பலுச்சிஸ்தான் வாசிகள் முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக சிந்து அரசனை உதவிக்கழைத்தனர். அவ்வரசன் உதவி புரிந்தான், ஆயினும் சிந்து அரசனும் பலூச்சிஸ்தான் வாசிகளும் தோல்வியடைந்தனர். ஆகவே, சிந்து அரசனைத் துரத்திக்கொண்டு சிந்து நதிவரை வந்தனர். அப்புறம் இவ்வெற்றியைப் பற்றி கலீபா அவர்களுக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. இத்த கவலைக்கொண்டு போனவர் இவ்வெற்றியைப்பற்றி மிக அழகிய முறையில் பிரசங்கம் புரிந்தார். இவரது பிரசங்கம் இரண்டாவது கலீபா அவர்களது ஜிவிய சரித்தில் விபரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

5. ஐந்தாவது முறை நான்காவது கலீபா ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களது காலத்தில் ஹிஜ்ரி 38-39-ல் நிகழ்ந்தது. கலீபா அவர்களது உத்தரவுப்படி ஹாரிதுப்னு மர்த் என்பவர் சிந்தின் மீது படை யெடுத்தார். இவர் சிந்தைக் கைப்பற்றி அங்கு ஒரு சிறிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார். ஆனால், அந்த ராஜ்யம் வெகு காலத்திற்கிருக்க முடியவில்லை. ஹிஜ்ரீ 42-வது வருஷத்தில் அவர் கீக்கானில் கொலை செய்யப்பட்டார். அவருடன் அந்த ராஜ்யமும் முற்று பெற்றது.

6. ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்களது காலத்தில் ஹிஜ்ரீ 44-வது வருஷத்தில் 6-வது முறை முஹலபுப்னு அபீஸப்ரா ஸிந்து எல்லைப் புறத்தில் படையெடுத்து காபுலுக்கும் முல்தானுக்கு மிடையிலுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றினர். இதிலிருந்து இந்தியா எல்லைப் புறத்தில் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர்.

7. ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்கள் அப்துல்லாஹிப்னு ஸவார் என்பவரை எல்லைப் புற வைசராயாக நியமித்தார்கள். இவர் கீக்கான் மீது மறுபடியும் படை யெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டார்.

8. ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்கள் காலத்திலேயே எட்டாவது முறையாக ஸனுனுப்னு ஸல்மா என்பவர் இந்தியா எல்லைப் புறத்தில் படை யெடுத்து முக்ரானைக் கைப்பற்றி அங்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தி எல்லா நகரங்களையும் பலப்படுத்தினர்.

9. ஸனுனுப்னு ஸல்மா விற்குப் பிறகு ராஷிதுப்னு உமர் என்பவர் நியமிக்கப் பட்டார். இவர் முக்ரானில் வந்திருந்துகொண்டு கீக்கானின் மீது படை யெடுத்து அதனை ஜெயித்தார். பிறகு வேறு ஜாதியினரை அவர் எதிர்த்தபோது கொல்லப்பட்டார். பிறகு மறுபடியும் ஸனுனுப்னு ஸல்மாவை ஜனங்கள் தங்கள் தளபதியாக நியமித்தனர். அவர் இரண்டு வருஷகாலம்வரை அங்கு ஆட்சி புரிந்தார்.

10. ஸனுனுப்னு ஸல்மாவிற்குப் பிறகு உபாதுப்னு ஜியாத் என்பவர் ஸஜிஸ்தானிலிருந்து இந்தியா எல்லைப் புறத்தின் மீது படை யெடுத்து ஸிந்து நதியைக் கடந்து பலுச்சிஸ் தானிலிருந்து காந்தஹார் வரையுள்ள நாடுகளைக் கைப்பற்றினர்.

11. உபாதுப்னு ஜியாதுக்குப் பிறகு எல்லைப் புற நிர்வாகம் ஸந்தா இப்னு ஜாதர்த் என்பவரிடம் வந்தது. இவர் பூக்கான், கீக்கான், கஸ்தரா ஆகியவைகளைக் கைப்பற்றினர். கீக்கான் இதற்கு முன்பே முஸ்லிம்களால் ஜெயிக்கப்பட்டிருந்தாலும் அப்புறம் அவர்கள் கலகஞ் செய்தனர். இக்கலகத்தை அடக்குவதற்காக இவர் படை யெடுத்தார்.

12. சந்தாவிற்குப் பிறகு அப்துல்லாஹிப்னு ஜியாத் நியமிக்கப் பட்டார். இவர் இப்னு லரீ என்பவரைத் தமது அதிகாரியாக நியமித்தார். இவர் பல இடங்களில் பலத்த

போராட்டங்களைச் செய்து அநேகம் ஜில்லாக்களை ஜெயித்தார்.

13. அப்துல் மலிக்கிப் னுமர்வான் கலீபாவாகவும், ஹஜ்ஜா ஜுப்னு யூஸுப் இராக்கின் கவர்னராகவும் இருக்கும்போது பதின்மூன்ருவது முறையாக படையெடுக்கப்பட்டது. பெலுச்சிஸ்தான் நிர்வாகம் ஸயீதுப்னு அஸ்லம் என்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. இவருக்கு விரோதமாக முஆவியத்துப்னு ஹாரிது, முஹம்மதுப்னு ஹாரித் என்பவர்கள் கலகஞ் செய்து இவரைக் கொன்று விட்டனர். ஆகவே, 'முஜாஹிதுப்னு ஸஅர்' என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் கன்டீல் வழியாகிப் படையெடுத்துப் பல வெற்றிகளை அடைந்தார். இவ்வெற்றிகள் பிறகு முஹம்மதுப்னுகாஸிம் என்பவர் மூலமாகப் பூர்த்தியடைந்தன.

14. முஜாஹிது இறந்து போனபடியால் முஹம்மதுப்னு ஹாரூன் நிர்வாகப் பதவிக்கு வந்தார். இக்காலத்தில் சில வியாபாரிகள் மரித்தனர். இவர்களது குடும்ப ஸ்திரீகளையும் குழந்தைகளையும் முஹம்மதுப்னு ஹாரூன் கப்பல் மார்க்கமாக இராக்கு கவர்னரிடம் அனுப்பி வைத்தார். இடைவழியிற் கடற்கொள்ளைக்காரர்கள் இக்கப்பலைக் கைப்பற்றி ஸ்திரீகளைச் சிறைப்படுத்தினர். இவர்களைத் தமது வசம் ஒப்புவிக்கவேண்டும் என்று ஹஜ்ஜா ஜுப்னுயூஸுப் சிந்து ராஜாவிற்குக் கட்டளையிட்டார். அப்பொழுது சிந்து அரசராக இருந்த தாஹர், கொள்ளைக்காரர்கள் தமது அதிகாரத்திற்குள்ளில்லை என்று கூறிவிட்டார். ஆகவே, ஸ்திரீகளை மீட்பதற்காக ஹஜ்ஜா ஜுப்னுயூஸுப், அப்துல்லா ஹிப்னு பஹ்னன் என்பவரது தலைமையில் ஒரு படையை அனுப்பினர். இத்தளபதி யுத்தத்தில் மாண்டார். இவருக்கு பதிலாக 'அதில்' என்பவர் நியமிக்கப்பட்டார். இவரும் ஜாட்டுகளால் கொல்லப்பட்டார். இவருக்குப் பிறகுதான் முஹம்மதுப்னு காஸிம் நியமிக்கப்பட்டார். எனவே, பதினைந்தாவது முறையாக முஹம்மதுப்னு காஸிம் சிந்துவின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி அரசாங்கத்தையும் ஸ்தாபித்து சட்டப்படி ஆட்சிபுரியவாரம்பித்தார். ஆகவே, முஹம்மதுப்னு காஸிம் தான் முதல் முதலாக இந்தியாவின்மீது படையெடுத்தார் என்று ஆங்கிலேய சரித்திரங்கள் கூறுவது தவறு.

மதிப்புரை

"நஜ்முல் இஸ்லாம்" என்னும் தீன் விளக்கம்

மகுடத்தில் கண்ட பெயர் நாமங்கொண்ட 'ஹனபி பிக்ஹு' மஸ் அலாக்களமைந்த தமிழ் பாஷையில் எழுதப்பட்ட நூல் ஒன்று நமது பார்வைக்குக் கிடைத்திருக்கிறது. இந்நூலில் ஈமான், இஸ்லாமின் முழு விபரங்களும், ஒவ்வொரு முஸ்லிமும் அறியவேண்டிய மார்க்க கட்டளைகளும், அக்கட்டளைகளை நிறைவேற்றவேண்டிய விபரங்களும் அடங்கியிருக்கின்றன. சாதாரணமாக மார்க்க விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமலிருப்பவர்கள் இதனைக் கற்றுக் கொள்வதுகொண்டு ஒருவாறு தங்கள்மீதுள்ள கடமைகளைத் தெரிந்து அவைகளை நிறைவேற்றுவதற்குச் சௌகரியமுண்டாய்விடுமெனக் கூறலாம். இஃது அய்யம்பேட்டை கே. எ. அப்துற்றஷீத் ஆலிம்சாஹிப் அவர்களால் இயற்றப்பெற்று, ஷெயூர் பிரபல வர்த்தகரும் சுல்த்தானிய்யா படை மருந்தாலய புரொப்ரைட்டருமான ஜனுப் A. K. முகம்மது சுல்த்தான் சாஹிப் அவர்களின் பொருளுதவியால் அச்சிடப்பட்டு இனமாய் வினியோகிக்கப்படுகிறது. இது 83 பக்கங்களைக்கொண்டது. அறபி, உர்தூ, அறப் தமிழ் கற்காமல் தமிழ் மட்டும் கற்றுள்ளவர்களுக்கு இப்புத்தகம் மிக மிக அவசியமாகும். அன்னேர் நேரிலும், அல்லது தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பு அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். ஆனல் நபர் ஒன்றுக்கு ஒரு பிரதிதான் அனுப்பிவைக்கப்படும்.

பெற்றுக்கொள்ளுமிடம் :—

A. K. முகம்மது சுல்த்தான்சாஹிப்.
ஜவுளிக்கடை,
அய்யம்பேட்டை.

குபேரர்கள் படும்பாடு

"என்னிடம் ஏராளமான செல்வங்களிருக்கின்றன; அவைகளை நான் கணக்கிடவும் முடியாது; எனக்குள்ள பூஸ்திதிகள் 75 கோடி ரூபாய்க்கு அதிகமான விலைமதிப்புள்ளவை; ஆனால், நான் எனது பூஸ்திதிகளனைத்தையும் சந்தோஷமாகக் கொடுத்து விடுவதற்குத் தயாராக இருக்கிறேன்; அதற்கு பதிலாக ஒரு வேளையாவது எனது வயிறு நிறம்ப நான் உண வருந்த முடியவேண்டும்"

இவ்வாக்கியங்கள் அமெரிக்காவிலுள்ள பிரபலகோடீஸ்வரரான "எண்ணெய் அரசர்" ராக்பெல்லர் என்பவரது நாவிலிருந்து வெளிவந்தவை. இவரது ஆஸ்தியைப் பற்றிய கதை புதிய உலகமாகிய அமெரிக்காவிலும் பழைய உலகமாகிய ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியாவிலும் மூலை முடுக்களிலெல்லாம் பரவி இருக்கிறது. அவருக்கேற்பட்ட நல்ல அதிர்ஷ்டத்தைப்பற்றி ஒரு உலகம் இன்று பொறாமைப் பட்டுக் கொண்டிருக்கிறது. இவரது பெயரைக் கேட்டு வாயில் ஜலம் ஊறுகிறவர்கள் உலகில் எத்தனைபேர்களிருக்கின்றனரோ? ஆனால், அக்குபேரரது நிலைமை யாது என்பதை அவரது நாவிலிருந்து வெளியான மேற்கண்ட வாக்கியங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு பெரிய திரண்ட செல்வத்திற்கு அவர் சொந்தக்காரராக இருந்தும் அவரையும் தரித்திரம் விட்டபாடில்லை. குவியல் கணக்காக தங்கத்தை வைத்திருந்து ஒரு வேளை அன்னம் வயிறார உண்பதற்கில்லை. ஒரு வேளை வயிறார உண்ணக் கொடுத்து வைக்கும் பாக்கியத்திற்குப் பதிலாக தன்னிடமுள்ள கோடிக்கணக்கான திரவியங்களை அர்ப்பணம் செய்வதற்கு அவர் தயாராக இருக்கிறார். தமக்குள்ள இப்பிணிக்காக அவர் எத்தனை திரவியங்களைச் செலவு செய்திருப்பார். சொற்ப பாலையும் சில பிஸ்கோத்துகளையும் தவிர அவர் வேறொன்றும் அருந்துவதில்லை. காலை நாஷ்டாவிற்குப் பதிலாக சொற்ப அளவு பால் அருந்துகிறார். அப்புறம் பகல் முழுவதிலும் வேறு உணவருந்த முடியாது. படுக்கப் போகும்போது சில பிஸ்கோத்துகளும் சொற்ப பாலும் தான் அவரது ஆகாரம். ஆனால், அவரிடமுள்ள வேலைக்காரர்களும் கூலிக்காரர்களும் அவரது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களும் வயிறு நிறம்ப தினந்தோறும் பல முறை இவ்வுலகத்தைய மதுரமான அறுசுவை யுணவருந்தி ஜீரணித்து விடுகிறார்கள். ஆனால், இவர் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு உணவளிக்கும் பாக்கியம் பெற்றிருந்தும் இவர் வெறும் பாலையும் சில பிஸ்கோத்துகளையும் தவிர வேறு எவ்வித உணவையும் கையால் தொடுவதற்குக்கூடக் கொடுத்து வைக்கவில்லை! சீமான் தனத்தை யடைந்து வாழ்பவர்கள் மீது பொறாமை கொள்ளும் ஏழையாள்? அல்லாஹு தஆலா உங்களுக்களித்துள்ள பாக்கியத்திற்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள்! உலகிலுள்ள சிறந்த முதற்றரமான செல்வச்சீமான் உங்களுக் கிருக்கும் இந்தப்பாக்கியத்திற்காக உங்கள் மீது பொறாமை கொண்டிருக்கிறார் என்பதை ஞாபகத்திலிருத்திக் கொள்ளுங்கள்.

மற்றொரு குபேரர் மோட்டார் அரசரான ஹென்ரி போர்டு என்பவர். இவரது சம்பத்து காரூனின் பொக்கிஷங்களையும் கூடத் தோற்கடித்துவிடும். இவர் மெலிந்த தேகி. நித்திய நோயாளி, தனது உயிரைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காகப் பல வருஷங்களாக சகலவிதமான உணவுகளையும் தன் மீது விலக்கி வைத்திருக்கிறார். டாக்டர்கள் எந்நேரமும் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரது உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதேனும் உணவினால் இவருக்குத் தொந்தரை ஏற்பட்டு விடுமோ வென்பது டாக்டர்களின் பீதி. செல்வத்தினாலும் திரவியத்தினாலும் மனிதன் இவ்வுலகில் அடையக்கூடிய இன்பங்களையும், அனுபவிக்கவேண்டிய பாக்கியங்களையும் இக்காலத்து காரூனான இவ்வமரிக்க குபேரர் அடியுடன் அனுபவிக்க முடியாதவராக இருக்கிறார் என்பது சிலருக்குத்

தான் தெரியும். இவரிடம் வேலை செய்யும் லக்ஷக்கணக்கானவர்கள் சகலவிதமான இன்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதை பாபம் இக்குபேரர் பார்த்துப் பார்த்து மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார். செல்வந்தான் வாணாளின் முக்கிய பயன் என்றும், திரவியம் தான் இந்த ஜீவியத்தின் கனி என்றும் கருதும் மக்களே ! செல்வமும் திரவியமும் எற்றுக்கு உபயோகப்படும் என்பதைக் கவனியுங்கள்.

அமெரிக்காவிலேயே வாழ்ந்த மற்றொரு கோடீஸ்வரரான பிரபு, பத்திரிகைகளுக்குச் சொந்தக்காரரான மிஸ்டர் எட்வர்ட்ஸ் கூபிஸ் என்பவர். இவர் பல்லாண்டு சுகானுபவங்களை நுகர்ந்தபின் இவ்வுலகில் நிகழும் சம்பவங்களையும் காரியாதிகளையுங் கண்டு அலுத்துப் போய் விட்டார். இவருக்கு மன நிம்மதியின் பால் அதிக தாகமுண்டாகிவிட்டது. நாகரீகத்திற்கு மத்திய இடமாகவுள்ள அந்தப் பெரிய பட்டினங்களில் இவருக்கு மனவமைதி கிடைக்க இடமிருக்குமா? கடைசியாக இவர் நாற்பது லக்ஷம் டாலர் என்னும் தங்க நாணயங்களைச் செலவு செய்து ஒரு கப்பல் கட்டுவித்தார். அற்பத்திலும் அற்பமான சப்தங்கூட அவரது காதில் விழாமலிருப்பதற்குத் தகுந்த சகல ஏற்பாடுகளையும் அமைத்தார். இவ்வாறாக தம்மைச் சுற்றிலும் நிசப்தமான ஒரு செயற்கை உலகை அமைத்துக்கொண்டு இனியேனும் தமக்கு மனவோய்வு ஏற்பட்டு விடும் என்று கருதினர். பத்திரிகைத் தொழிலைத் தமது மக்களிடம் ஒப்புவித்தார். கப்பலில் ஏறிக் கடல் பிரயாணம் செய்தார். ஒரு தேசமல்ல; இரண்டு தேசமல்ல உலகம் முழுவதையும் சுற்றி வந்தார். ஒருமுறைக்கு இருமுறை சுற்றி வந்தார். இவ்வுலகச் சப்தம் தமக்கு எட்டாமலிருப்பதன் மூலமாக தமது கோரிக்கையான மன நிம்மதி அவருக்கேற்படவில்லை. இதே கவலையிலும் துக்கத்திலும் அவர் தமது கடைசி காலத்தை அடைந்தார். அவரது விருப்பத்திற்கிணங்க அவரது சவத்தை சமுத்திரத்தின் ஆழிய பாதாளத்திற்கனுப்பப்பட்டது. செல்வத்தைத் திரட்டுபவர்களே ! வட்டித் தொழில் புரிவது ஆகுமென்பதற்கு மார்க்க ஆதாரம் தேடுபவர்களே! செல்வச் சீமான்களது இந்த கையாலாகாத நிலைமையைப்பற்றி எப்பொழுதேனும் சிந்தித்துப் பார்த்தீர்களா?

கோயஸ்ப் போக்யானீ என்பவர் ஒரு கோடீஸ்வரர். இவர் இத்தாலி தேசத்தில் பிறந்து அமெரிக்காவிற்குப் பிழைக்கச் சென்றார். அமெரிக்காவில் திரண்ட தனத்தைச் சம்பாதித்தார். அதனையே தனது தாய் நாடாகவும் ஆக்கிக்கொண்டார். இதுதான் அவரது ஆரம்ப காலம். இவர் கூமூ என்ற அழகிய ஏரியின் கரையில் தமது வாசஸ்தலத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தார். கடைசியில் ஒரு நாள் ஒரு மரத்தில் சுருக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். அவரது சட்டைப் பையில் அதுபொழுது அடியிற்கண்டவாறு எழுதப்பட்ட ஒரு கடிதம் இருந்தது:—

"சுகம் பணக் குவியலுக்குள் இல்லை என்பது எனது நீண்டகால வாழ்க்கையின் அனுபவத்தால் தெரிந்து விட்டது. நான் எனது ஜீவியத்தை முற்றுப்பெறச் செய்துகொள்கிறேன். ஏனெனில், தனித்திருப்பதன் மூலமாகவும், காரிய சித்தியடையாததன் மூலமாகவும் நான் எனது வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டேன். நான் நியூயார்க்கிற்கு வரும்போது சாமான்ய கூலிக்காரனாக இருந்தேன். அக்காலத்தில் நான் சந்தோஷமாக வாழ்ந்தேன். ஆனால், இன்று நான் பல கோடி திரவியத்திற்குச் சொந்தக்காரனாக இருக்கின்றேன். எனது கவலைக்கு எல்லை இல்லை. இவ்விதமாக வாழ்வதைப் பார்க்கிலும் மரணம் சிலாக்கியமென்று நான் கருதுகிறேன்."

பணம்தான் சகல கவலைகளுக்கும் அருமருந்து என்பதாகக் கருதுபவர்களே! தனத்தைப் பூஜிப்பவர்களே ! செல்வத்திற்கு எவ்விதச்சக்தியும் பலனுமில்லை என்பதைப்பார்த்துக் கொள்வீர்களாக !

ஜே. பீட்டர் லுவைட் மார்கன் என்பவர் ஒரு அமெரிக்கர். இது போழ்து உலகிலுள்ள மிகப் பெரிய விளையாட்டுக்கருவித் தொழிற்சாலைக்கு அதிபர். இவரது செல்வம் இவ்வளவிருக்குமென்று மதிப்பிடுவது அசாத்தியம். இவரது வாழ்க்கையைக் கவனியுங்கள். காலையில் மிகவும் சாமான்யமும் சுருக்கமுமான நாஷ்டாவிற்குப் பிறகு தமதுகாரியாலயத்திற்கு அலுவலின் பேரில் செல்கிறார். இவர் அங்கு சரியாய்ப் போய்ச்சேர மணி பத்தாகிவிடும். மத்தியானச் சாப்பாடு மிகவும் எளிமையானது. பரம ஏழையான ஒரு சாமான்யனும்கூட அந்தச் சாப்பாட்டைச் சந்தோஷத்துடன் அருந்தமாட்டான். மாலை 5-30 மணிவரையில் தமது காரியாலயத்தில் வேலை செய்துகொண்டிருந்து

விட்டுத் தமது வீட்டிற்குத் திரும்ப வருவார். இதே நிலைமைதான் இவரது தந்தைக்குமிருந்தது. வீட்டில் மிக மிக உயர்ந்த சாமான்களெல்லாமிருக்கின்றன. பெருஞ் செல்வமிருக்கிறது. ஆனால், குன்ம வியாதியினால் மிகவும் சாமான்யமான உணவையுங்கூட அருந்த முடியாமலிருக்கிறார். தமது வாணாள் முழுவதிலும் மிகவும் கண்டிப்பான பத்திய உணவையே அவர் உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமிருந்து வருகிறது. ஒருவேளையேனும் நல்ல ருசியுள்ள உணவை உண்ணும் பாக்கியம் அவருக்கில்லை. எந்நேரமும் வயிற்றுநோவால் வாடிக்கொண்டே இருக்கிறார். தன்னிடம் வேலைசெய்கிற அற்ப ஊழியன் அருந்தும் உணவையுங்கூட அருந்தக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கத்துடனிருந்து வருகிறார்.

பிரபுக்களைப் பார்த்துப் புழுங்குபவர்களே! பிரபுவாகிவிட வேண்டுமென்ற ஆசையுள்ளவர்களே! வருந்தத்தக்க இவ்விருத்தாந்தங்களைச் செவியேற்றுக் கொள்ளுங்கள். சமுத்திரத்தின் மத்தியில் நின்றுகொண்டிருக்கிற ஒருவர் தமது தாகவிடாயைத் தீர்த்துக்கொள்ள முடியாமலிருக்கிற நிலைமையிலேயே இந்தக் குபேரர்களிருந்து வருகின்றனர்.

மிஸ்டர் பரீவஸ்டர் என்பவர் அமெரிக்காவிலுள்ள ஒரு கோடீஸ்வரர். அவரது மனைவி அழகிற் சிறந்தவள் என்று அவ்வுலகம் போற்றும் கட்டழகி. கணவன் சம்பத்திற் சிறந்தவன். மனைவி அழகிற் சிறந்தவள். வெளித் தோற்றத்திற்கு இதனைப் பார்க்கினும் அதிக மகிழ்ச்சியைத் தரக்கூடியது வேறொன்றுமில்லை. இவர்களுக்குக் கிடைத்த வெற்றிகரமான பாக்கியம் உலகில் வேறு யாருக்குமிருக்க முடியாது. பாக்கியசாலிகளான இவ்விரு தம்பதிகளையும்பற்றி ஒரு உலகமே பொறாமைகொண்டிருந்தது. இவ்விருவருக்குமிடையில் அந்நியோன்யம் மிகவதிகம். சென்ற 1926-ம் வருஷம் ஜூன் மாதம் கணவனும் மனைவியும் கிராமத்திலுள்ள தங்களது வாசஸ்தலத்திற்குச் சென்றனர். ஒரு நாட் காலையில் இவ்விரு தம்பதிகளும் தங்கள் சயன அறையில் கொல்லப்பட்டுக் கிடந்ததை வேலைக்காரர்கள் கண்டனர். இரண்டு சவங்களிலும் குண்டுக் காயமிருந்தது. இவ்விதமாக அவ்விருவரும் தற்கொலை செய்துகொண்டதற்குக் காரணம் யாது என்பதை உலகம் அறிய முடியவில்லை. இந்த இரகசியம் அவர்களது உடலங்களுடன் புதைக்கப்பட்டுவிட்டன.

செல்வத்திற்கும் அழகிற்கும் உயிரை விடும் கனவான்களே! செல்வமும் அழகும் உதவாக்கரை என்பதை இனியேனும் கண்டுகொள்ளுங்கள்.

அல்லாஹுதஆலாவிற்கு நன்றி செலுத்துங்கள்

இவை கட்டுக்கதைகளல்ல; கண்காக்ஷியாய்க் காணப்பட்ட விஷயங்களாகும். இவைகளை பம்பாயிலுள்ள ஒரு ஆங்கில பத்திரிகை வெளியிட்டது. இச்சம்பவங்களிலிருந்து நாம் உணரவேண்டிய விஷயங்கள் அனந்தமுள: ஒரு பக்கல் திரண்ட செல்வங்களும், நிதிக் குவியல்களும், வியாபார மண்டிகளும், தொழிற்சாலைகளும், மோட்டார்களும், எலக்ட்ரிக் விசிரிகளும், விளக்குகளும் இருக்கின்றன. இவைகளுடன் நிம்மதியின்மை, சங்கடங்கள், நோய்கள், சஞ்சலங்கள், பிணிகள் முதலியன இவைகளைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. மற்றொரு பக்கல் தரித்திரம், வறுமை, இடிந்த குடிசைகள், மண் விளக்குகள், கீரைகள், பயறுகள், கிழிந்த கம்பளிகள், ஒட்டுப்போட்ட சட்டைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இவைகளை சந்தோஷம், மகிழ்ச்சி, மனநிம்மதி, ஆனந்தமான நித்திரை, கவலையின்மை, ஜனங்களிடம் தேவையின்மை, பொறுமை, சிருஷ்டிக்கர்த்தாவிற்கு நன்றி செலுத்தும் தன்மை ஆகியவைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இவ்விரண்டில் எதனை வேண்டுமானாலும் தெரிந்தெடுத்துக்கொள்ள ஒவ்வொரு மனிதரும் சுதந்திரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இவ்விரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக்கொள்வதற்குமுன் இவ்வுலகில் தோன்றிய துறவிகள், ஞானிகள், வலிமார்கள், குத்புகள், நபிமார்கள் முதலிய பெரியார்களில் எவரேனும் எப்பொழுதாவது தற்கொலை செய்துகொண்டார்களா? மத பக்தியுள்ள எவரேனும் சஞ்சலம், கவலை ஆகியவைகளுக்காக தங்களது உணர்ச்சிக்கு அடிமைப்பட்டார்களா? என்பதை யோசித்துப் பாருங்கள். உயிருள்ள இருதயங்களையுடையவர்கள் நபிமார்கள்தாம். இவர்கள் இவ்வுலகிலுள்ள மிக மிகக் கடுமையான சங்கடங்களையும் எதிர்ப்புகளையும் மிகவும் அமைதியுடனும் சமாதானத்துடனும் பொறுத்துக்கொண்டார்கள். அவ்வுலகினுடையவும் சகலவிதமான சுகங்களையும் இன்பங்களையும் குறித்து முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள். இவர்களைக் குறித்து திருமறையில் "அவர்களுக்கு எவ்விதப் பயமுங்கிடையாது; அவர்

கள் துயருறவும் மாட்டார்கள்" என்பதாக அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. குபேரர்களாகவுள்ள இவர்கள் தங்கள் ஜிவியத்தை சஞ்சலத்தில் கழித்து மறு உலகிலும் சஞ்சலத்திற்கே ஆளாகின்றனர். இதனுற்ருன் இறைவன் தனக்குப் பிடித்தமான அடியார்களிற் பெரும்பாலருக்குச் செல்வத்தைக் கொடுப்பதில்லே. அவ்வடியார்களும் செல்வத்தை விரும்புவதில்லே. "உங்களுடைய முதல்களும் உங்களுடைய பிள்ளைகளும் "பித்ந" என்பதாகவும் உலகினருக்கு வெளியாக்கியுள்ளான். ஆகவே, பொருள் பொருள் என்று இவ்வுலகமாய் கையிலேயே மூழ்கி இறுதியில் நஷ்டமடைவதைப் பார்க்கினும் தேவையான அளவிற்குப் பொருள்தேடி மறு உலக வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களிலீடுபடுவதே சிறந்ததும் அறிவாளர்களது வேலேயுமாகும் என்பதை நம்மவர் உணர்வார்களாக.

ஐரோப்பாவின் விபரீத முன்னேற்ற துறையில் மாறுதல்

மேனாட்டின் நாகரீகத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவர்கள் ஆரம்பத்தில் ஒவ்வொருவரின் அபிப்பிராயத்திற்கும் சுதந்தர மளியுங்கள்; பெண்டிர்களுக்குச் சுயேச்சை அளியுங்கள்; பத்திரிகைகளுக்குச் சுதந்திரத்தைக் கொடுங்கள் என்னும் ஓசையைக் கிளப்பிக் கொண்டே யிருந்தார்கள். இரண்டாவதாக இதுபொழுது அதற்கு மாருன கிளர்ச்சியை உண்டுபண்ண முற்பட்டிருக்கின்றனர். அதாவது,

பெண்களின் சுதந்திரத்தைத் திரும்பப் பெற்று அவர்களே அடக்கிவையுங்கள், அபிப்பிராயங்களுக்குள்ள சுயேச்சையை களைந்துவிடுங்கள்; பத்திரிகைகளின் சுதந்திரத்தைத் தடுத்துவிடுங்கள்! என்னும் கூச்சல் எங்கு பார்த்தாலும் பிரலாபித்துக்கொண்டிருக்கிறது.

வாழ்க்கைக்கு கட்டுப்பாடு மிக மிக அவசியம்

தீவிரவாதி ஒன்றிருக்கில் உச்சஸ்தானத்தை அடைவான்; அல்லது மிக மிகத் தாழ்ந்த ஆழிய கிடங்கில் விழுந்து விடுவான். மானிட வெற்றியின் இரகசியம் தீபரவாதத்தில் கிடையாதென்பது திண்ணம். ஆனல் அவ்வெற்றி நடுத்தரப் போக்கில் மறைந்து கிடக்கின்றது. அங்ஙநிலைமை மாநிடனின் வலம் இடம் முன் பின் முதலிய கட்டுப் பாடுகளன்றி உண்டாக மாட்டா.

இப்பொழுது ஒரு துஷ்ட குதிரையை சுயேச்சையாக விட்டுப்பாருங்கள்! அது நேரான பாதையிற் செல்லமாட்டாது. சிலகால் வலதுபுறம் நகர்ந்து செல்லும்; சிலகால் இடதுபுறம் ஓட்டம் பிடிக்கும்; சமயாசமயம் வெள்ளாமைகளில் இறங்கிவிடும்; ஒருக்கால் படுகுழியிற் விழுந்துவிடும். நாம் அக்குதிரையை குறிப்பிட்ட ஓரிடத்திற்கு ஓட்டிச் செல்ல நாடுவோமாயின் குதிரைக்கு கடிவாள மிட வேண்டும்; முகப்பட்டை கட்டவேண்டும்; சிலகால் சவுக்கையும் கையாளவேண்டும். இக் கட்டுப்பாடுகளேக் கொண்டுதான் அந்தப் பிரயாணத்தை சரியான முறையில் முடிக்க முடியும்.

ஒரு சிலர், மார்க்கத்தின் கட்டுப்பாடுகளேக் கண்டு மிரளுகின்றனர்; "அல்லாஹ் நம்மீது எதற்காக சட்ட திட்டம், கட்டுப்பாடுகளே ஏற்படுத்தி யிருக்கிருன்; ரஸூல் (ஸல்.) அவர்கள் ஷரீஅத் என்னும் சங்கிலிகளே நம்மீது எதற்காகப் பிணைத்திருக்கின்றூர்கள்" என்னும் கேள்வியை விடுக்கின்றனர். நீங்கள் கார்மானத்துடனிருப்பதற்காகவும், படுகுழியில் விழாதிருப்பதற்காக வேண்டியும், நாசக்காரியங்களில் சிக்காமலிருப்பதற்காகவும்தான் உங்கள் மீது கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென 'ஷரீஅத்' விடை பகர்கின்றது.

ஜனக்கட்டுப்பாட்டின் ஒழுங்குமுறை, சட்ட திட்டங்களைக்கொண்டே நிலை பெற்றிருக்கின்றன. ஒரு மணி நேரத்திற்காகமட்டும் மக்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை அகற்றிவிடுவோமாயின் அதே நிமிஷத்தில் உலகின் நிருவாகம் முழுதும் சீர்குலைந்து போய்விடும். மானிடவர்க்கத்தினருக்கு ஒரு நாளைக்கு வக தேசத்தில் சுயேச்சை அளித்து, பூபாகத்தில் வதியும் மக்கள் புரியும் காரியாதிகளைக் கேழ்ப்போர் யாருமில்லை; அவர்கள் நாடியதைச் செய்து கொள்ளலாம் என்று அறிக்கையுமிட்டு விட்டதாக வைத்துக்கொள்வோம். இச்சுயேச்சையின் முடிவு யாதாகுமென்பதை நீங்களே ஆலோசித்துப்பாருங்கள்! எங்கு பார்த்தாலும் கொலை, களவு, கொள்ளை, நெருப்பு மூட்டல் முதலிய துர்ச்செய்கைகள் ஆரம்பமாகிவிடும். கடன்காரன் கடன்கொடுத்தவன் மீது பாய்வதற்கு முற்பட்டுவிடுவான்; துஷ்டர்கள் அந்தப்புறங்களில் புகுந்துவிடுவர்; ஒரு அரசாங்கம் மற்றொரு அரசாங்கத்தை விழுங்கிவிடப் பார்க்கும்; சுருங்கக்கூறின், அந்நாளை சுயேச்சையின் தினமென்று அழைப்பதற்கு பகரமாய் நாசத்தின் தினமென்றே கூறவேண்டும். அன்றைய சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்பாகவே மானிடவர்க்கத்தினரின் நாகரீகம், ராஜரீகம், முன்னேற்றம் முதலிய சகலமும் அழிந்துபோம்.

அபிப்பிராயங்களுக்கு சுயேச்சை அளிப்பதனு லேற்படும் விநாசம்

நாம் மேலே கூறிவந்ததிலிருந்து, வாழ்க்கை ஒழுங்குபடுவதற்கு கட்டுப்பாடுகள் அவசியமென்பது வெளிப்படை. ஐரோப்பா சுயேச்சையின் பயித்தியத்தில் இறங்கியபோது கட்டுப்பாடுகளை விலங்கு, அடிமைத்தன மென்று மதித்தது. ஒவ்வொருவருக்கும் அபிப்பிராய சுதந்திர மளிப்பதுகொண்டு மானிடனது வாழ்க்கை சந்தோஷகரமாகவும், அருட்கொடையாகவும் ஆகிவிடுமென எண்ணியது. ஐரோப்பாவின் இவ்வெண்ணம் பகற்கனவாகவே முடிந்தது. அபிப்பிராய சுயேச்சை கடைசியாக அங்கு ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும் பற்பல சச்சரவுகளையும் சமூகச் சண்டைகளையும் விளைவித்து விபரீத நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயத்தை உற்பவித்து உலகமே அதனைப் பின்பற்ற வேண்டுமென நினைத்தனர். இத்தோரணையில் அங்கு எத்தனை பெயர்களிருந்தனரோ அத்தனை புரோகிராம்களும், அத்தனை பார்ட்டிகளும், அத்தனை பத்திரிகைகளும் உண்டாய் விட்டன. ஒவ்வொரு சமூகத்திலும் அபிப்பிராய பேதம் தழைத்தோங்கி பெண்களின் நடப்பு ஒருவிதமாகவும், ஆண்களின் போக்கு வேறுவிதமாகவும் மாறிவிட்டது. இதனுல் இம்மாபெரும் பூகோளமே பல பார்ட்டி, பல வகுப்பு, பல கூட்டமாகப் பிரிந்து விட்டது. இதில் ஒவ்வொரு கூட்டத்தினரும் இதர வகுப்பினரை வீழ்த்த முயற்சி செய்வதிலீடுபட்டிருந்தனர். ஒரு கூட்டம் பொதுமக்களை தன் பக்கத்தும், மற்றவர் வேறு பக்கத்தும் சேர்த்துக்கொள்ள முயற்சித்தனர்.

ஆனுல், இதுபொழுது மேனுட்டினர்களில் அறிவுள்ளவர்களின் கண்கள் திறந்தன. முதன் முதலாக அபிப்பிராயத்திற்குச் சுயேச்சை அளித்ததின் கெடுதியை உணர்ந்து அதனுல் மக்களின் மத்தியில் ஒற்றுமையின்மை, மாச்சரியம், குரோதம் இவைகளைத் தவிர வேறு எவ்வுதப் பிரயோசனமு மேற்படுவதில்லை என்பதைத் தெரிந்து கொண்டனர்.

விகற்பத்திற்குப்பின் ஒற்றுமை

இதுகாலை ஐரோப்பியதேசம் முழுவதிலும் அபிப்பிராய சுயேச்சையை மறுக்கும் வேலை ஆரம்பமாகி இருக்கிறது. அங்குள்ள ஒவ்வொரு நிபுணர்களும் ஐரோப்பியருக்கு மத்தியிலேற்பட்டுள்ள இம்மாச்சரியத்தைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு என்னும் முடிவுக்கு வந்தனர். அதாவது, நிபுணத்துவம் வாய்த்த ஓர் தலைவர் விஷயாலோசனை செய்ய வேண்டும்; அதனை மக்கள் யாவரும் பின்பற்றி நடக்கவேண்டுமென்பதே. ஐரோப்பிய ராஜிய நிபுணர்களது இம்முடிவு முற்றமுற்ற இஸ்லாத்திற்கு ஒற்றுமையானதாக இருக்கிறது. என்றாலும் இவ்விரண்டிற்கு மத்தியில் வானம், பூமிக்குள்ள வித்தியாசமிருக்கிறது. ஹிட்லரின் ஆலோசனையில் தோன்றும் விஷயங்களை ஜர்மன் பின்பற்றவேண்டுமென்று ஜர்மானியர் கூறுகின்றனர். இஸ்லாமோ அல்லாஹ்வின் பக்கலிருந்து கட்டளை வரவேண்டும், அல்லாஹ்வின் அடியார்கள் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுகின்றது. ஏனெனில், மானிடனது அபிப்பிராயத்தில் தவறுதல் ஏற்படுவது சகஜமாக இருக்கிறது. அல்லாஹ்

வின் தீர்ப்பிலோ தவறுதல் ஏற்பட இடமே கிடையாது.

இங்கு இன்னுமொரு பிரச்னையும் எழலாம். அதாவது, ஹிட்லர் மட்டும் ஏன் சட்டம் இயற்றவேண்டும்; கைஸருக்கு இந்த பாத்தியதை ஏன் இருக்கக்கூடாது என்பதே. இவ்வாறு ஒவ்வொருவரும் ஹிட்லருடைய யோக்கியதையை அடைவதற்கு ஆசித்தால் அதன் முடிவு மீண்டும் ஒற்றுமையின்மை, பகைமைத்தனம், குரோதம், மாச்சரியத்தில் கொணர்ந்து விட்டுவிடும். இதற்கு நேரிய வழி மானிடர்களுக்கு மத்தியில் தலைவர், பிரஜை என்னும் சம்மந்தத்தை நிலைநிறுத்துவதற்கு சமத்துவம், கிரிகா பாகுபாடு என்னும் சட்ட திட்டங்களைக் கையாளுவதுதான் சிறந்த மார்க்கமாகும். சமத்துவம் என்பது, மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்தவர்களென்று மதிக்கவேண்டும் என்பதாகும். கிரிகா பாகுபாடு என்பது ஹிட்லர் அவருக்குரிய வேலையையும், முஸோலினி தமக்குரிய வேலையையும், மற்றத் தலைவர்கள்தம் தமக்குள்ள வேலைகளையும் செய்வதிலீடுபட்டிருக்க வேண்டும்; அத்தலைவர்கள் புரியும் காரியாதிகளில் பாகுபாடு இருக்கலாமேயன்றி தலைவர்களுக்கு மத்தியில் ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது; அத்தலைவர்கள் தாங்களெல்லோரும் அல்லாஹ்வின் அடிமை, ஒருவருக்கொருவர் சகோதரர் என்னும் கருத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்.

இதுபொழுது நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை துலக்குவதளவில் முற்படுவோம்: அபிப்பிராய சுயேட்சையை மறுக்கும் விஷயத்தில் ருஷியா, ஜர்மனி, இடாலி இவைகள் தக்க ஏற்பாடு செய்துவிட்டன; இம்மகத்தான ஏற்பாட்டை சமூக சீர்திருத்த சேவையின் முக்கியாம்ஸம் எனவும் மதிக்கின்றன. சமூகத்திற்கு ஒரு தலைவர்தான் இருக்கவேண்டும். அவர் சமுதாய வாழ்க்கைக்குரிய சட்ட திட்டங்களை அமைக்கவேண்டும். மக்கள் யாவரும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அறிஞர்கள் தலைவருக்கு ஆலோசனை கூறலாமேயன்றி அவர்களுடைய ஆலோசனைக்கு முட்டுக்கட்டை போடலாகாது. சட்டமறுப்புச் செய்யக்கூடாது. பொதுஜனங்களை பல அபிப்பிராயத்திற்கு ஆளாக்கக்கூடாது என்று ஏகதேச முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

2-வது ஐரோப்பாவில் பத்திரிகைகளுக்கு மிதமிஞ்சிய சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. இதனால் அடியிற்கண்ட பலாபலன்கள் விளைந்தன:

(1) மக்கள் பற்பல பார்ட்டிகளாகப் பிரிந்தனர்.

(2) ஒவ்வொருவனும் தன்தன் அபிப்பிராய சுயேட்சையின் காரணமாக தன்னைப் பிரபலப்படுத்தி, தன் அறிவு ஆற்றலையும், பொருள் ஐசுவரியங்களையும் செலவு செய்து தானே தேசத் தலைவனருவதற்குள்ள முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

(3) சந்தர்ப்பம் வாய்ந்தவர்கள் தங்களுடைய விரோதிகளை மனமாற தூஷித்தனர்.

(4) சுயநலமும், பிரபல்யமும்தான் முக்கிய நோக்கமாகவிருந்தது; சத்தியம், உண்மை இவைகள் முதுகிற்குப் பின் போடப்பட்டுப் போயிருந்தது.

(5) சில சுயநலமிகள் மறைமுகமாக தங்கள் பிரசாரத்தில் ஊக்கங் காட்டி அதில் வெற்றி பெற்று வந்தனர்.

(6) எந்த சமூகத்தினர்களுடைய இரகசியங்களும் மறைத்துவைப்பதற்கு முடியாதிருந்தது. பொய்ப்பிரசாரம் பொதுமக்களை எப்பொழுதும் தடுமாற்றத்தி லாக்கி வைத்துக் கொண்டேயிருந்தது.

சுயேட்சையுடன் உயிர்வாழும் எந்த சமூகமும் இக்கெடுதிகளைப் பார்த்து வாளாயிருக்க முடியவில்லை. ஆதலால் நாகரீகம் பெற்ற தேசத்தின் முக்கிய முயற்சி பத்திரிகைகளை குரோதம், வகுப்புவாதம், மோசம், தாக்கு முதலிய கெடுதிகளைவிட்டு நீக்கி சமூக ஒற்றுமை, சமூக சீர்திருத்தம் செய்வதிலீடுபட்டிருக்கிறது.

இட்டாலீ

உதாரணமாக, இடாலியில் பற்பல பத்திரிகைகள் நடைபெறுகின்றன. என்ருலும், அப்பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட அனுமதிபெற்றவர்களாக இல்லை. ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒவ்வொரு நோக்கத்தை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி அப்பத்திரிகையின் ஆசிரியரிடம் அனுப்பிவிடுகின்றனர். அந்நோக்கத்தை கண்முன் வைத்து அப்பத்திரிகையை நடத்தவேண்டும். இடாலியில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளின் நோக்கங்களெல்லாம் ஒரேமாதிரியாகவே யிருக்கிறது. கவர்ன்மெண்டின் அபிப்பிராயங்களைத் தான் எல்லாப் பத்திரிகைகளும் வெளியிடவேண்டும்.

கவர்ன்மெண்டார் சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு வர்த்தமானங்களை திருத்தி அமைத்து வெளியிடச் செய்கின்றனர். தினசரியுள்ள வர்த்தமானங்கள்மீது அபிப்பிராயம் வெளியிட வேண்டுமானாலும் கவர்ன்மெண்டின் அனுமதி பெற்றுத்தான் வெளியாக்கவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து மக்களிடையே எவ்வாறான அபிப்பிராயபேதம், குரோதம், சச்சரவு, மாச்சரியம், பகைமை இவைகள் உண்டாகக் கூடாதென்பதே கவர்ன்மெண்டின் நோக்கமாக இருந்து வருகிறது.

ஜர்மனி

ஜர்மனியிலுள்ள ஏழுகோடி மக்களும், நாஜி கவர்ன்மெண்டார் எவைகளை வெளியிடுகின்றார்களோ அவைகளைத்தான் படிக்கவேண்டும். பத்திரிகைகள் சம்மந்தமாக நாஜி கவர்ன்மெண்டின் முக்கிய நோக்கம் என்னவெனில், பத்திரிகைகள் அதிகமாகவிருப்பது தேசத்திற்குப் பிரயோசனம் அளிக்காதென்பதும், சீர்திருத்தப்பட்டதும் பலம் பொருந்தியதுமான சில பத்திரிகைமட்டில் இருந்தால் போதுமென்பதுமாகும். இதற்கிணங்க ஜர்மன் கவர்ன்மெண்ட் ஒரே சமயத்தில் 5,000 பத்திரிகைகளை நிறுத்தி விட்டது. எஞ்சியுள்ள பத்திரிகைகளில் சிலது கவர்ன்மெண்டாராலேயே நடத்தப்படுகிறது. மற்றும் சில கவர்ன்மெண்டின் உபகாரம் பெற்று நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் விளம்பர மந்திரி காரியாலயத்தில் பத்திரிகை ஆசிரியர்களின் கூட்டம் நடைபெறுகின்றது. அச்சபையில், அன்றைய தினத்தின் பத்திரிகைகளில் வெளியிடப்படவேண்டிய விஷயங்களெல்லாம் தீர்மானிக்கப்படுகிறது. விஷயங்களுக்குத் தலையங்கமிடப்படுவதும் அங்கேயே தீர்மானமாகிறது.

ரஷியா

ரஷ்யாவிலுள்ள பத்திரிகைகளுக்கு இதர தேசங்களிலுள்ளவைகளைவிட அதிகக் கட்டுப்பாடு இருந்துவருகின்றது. அதன் நோக்கம் என்னவெனின், இதர தேசங்களின் விஷயங்களை மக்கள் அறியாமல் தேச நோக்கத்திற்கேற்ப அவர்கள் பயிற்சிபெற்று வாலிப திசையில் வேலைத் திட்டத்தில் இறங்கிவிட வேண்டுமென்பதேயாகும். இவ்வாறு செய்வதற்குள்ள அவர்களது பிரதான நோக்கம் என்னவெனின்,

(1) பால்ஷிவிக் கவர்ன்மெண்டின் ஒழுங்கு முறைகளை அனுசரித்து இதர தேசங்களில் உலாவும் அபிப்பிராயங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளக்கூடாது.

(2) பால்ஷிவிக் கவர்ன்மெண்டார் செய்யும் காரியாதிகள் முழுதும் மக்களுக்குமுன் அழகிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டு கெடுதிகளையும் நலவுபோல் காண்பிக்கவேண்டும். முஸ்லிம் நேயர்காள்!

பால்ஷிவிக் கவர்ன்மெண்ட் ரஷியர்களுக்கு மிகவும் கஷ்டமும் வெறுக்கத்தக்கவுமான கஷ்டங்களையே ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறெல்லாம் மக்களை கசக்கி கஷ்டத்திற்குள்ளாக்கி நவீன முறையில் பழக்கி உலகின் சகல சமுகத்தினருடனும் அவர்களைப் போட்டி போடச் செய்யவேண்டுமென்பதே அந்த கவர்ன்மெண்டின் கருத்தாகும். இத்தியாதி காரணங்களை முற்கொண்டு கவர்ன்மெண்ட், பத்திரிகைகளை இரக்கமற்ற முறையில் கையாண்டு வருகிறது. எனவே அப்பத்திரிகைகள், ருஷிய கவர்ன்மெண்ட் மற்றெல்லா கவர்ன்மெண்டுகளைவிட வெற்றி பெற்றதென்றும், ருஷியாவிலுள்ள தொழிலாளர்கள் இதர தேசங்களிலுள்ள தொழிலாளரைவிட நல்ல நிலைமையிலிருக்கின்றனரென்றும் பிரசாரம் செய்து வருகின்றது. கவர்ன்மெண்டிற்கு விரோதமான எப்பிரசாரத்தையும் அப்பத்திரிகைகள் வெளியிடக்கூடாதென உத்திரவு மிடப்பட்டிருக்கின்றது.

(3) பெண்கள் சுயேச்சை:—மேல்நாடுகளில் சில காலத்திற்குமுன் பெண்களுக்கு சுயேச்சை அளியுங்கள்; அவர்கள் இஷ்டம் போல் வெளியிற் சுற்றி வரவும், பரபுருடர்களுடன் கைகோர்த்துத் திரியவும் உத்திரவளியுங்கள்; அவர்கள் ஆடவர்களுடன் போட்டி போடுவதற்கு சந்தர்ப்பமளியுங்கள் என்னும் விஷயங்களே எங்கு பார்த்தாலும் பிரலாபிக்கப்பட்டு வந்தது. பத்திரிகைகள் இது சம்மந்தமான கட்டுரைகளை பத்திபத்தியாய் வெளியாக்கிக்கொண்டிருந்தது. பெண்டீர்களும் கட்டுரைகள் வரை ஆரம்பித்தனர். இதன் பயனாய் பெண்டீர்கள் ஒருவாறு சுயேச்சை பெற்று தங்கள் இஷ்டம்போல் வெளியிற் புறப்படவும், சுற்றி வரவும், ஆண்களுடன் போட்டி போடவும் முற்பட்டனர். சுருங்கக் கூறுமிடத்து, பெண்கள் புருடனுக்கு அடங்கி நடக்கும் பழக்கமே கைவிடப்பட்டுப் போயிற்று. இதன் முடிவு எவ்வாறாயிற்றென்றால் மேல்நாடுகளில் நிருவாண இயக்கம் ஆரம்பமாகி மக்கள்

மிருகங்களைப்போல் காலங்கழிக்க முற்பட்டனர். லண்டனில் வெளியாகும் பியர்சன் வீக்லீ இவ்விபரீதச் செயல்களைப் பிரசுரித்துவிட்டு கவலைப்படுகிறது. ஆனால் மேல்நாட்டாரில் சுய அறிவும் நிதான புத்தியுமுள்ள அறிஞர்கள் யாவருமே பெண்களின் இவ்விபரீத சுயேச்சையைத் தடுப்பதற்குள்ள சிந்தனையில் ஈடுபட முற்பட்டிருக்கின்றனர்.

நாகரீகம் பெற்றதாகக் கூறப்படும் தேசங்களினுடைய முற்கால தற்கால நிலைமைகளை நன்குணர்ந்துவிட்டீர்கள். இதுபொழுது அவர்களுடைய சிற்சில போக்கு இயற்கைக்கே மாற்றமாக இருக்கிறது என்பது வெளிப்படை. என்றாலும், அவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவெனின், மேனாட்டார் தங்கள் தேசமக்களுக்கு மத்தியில் விகற்பமில்லாமல் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக என்னென்ன காரியங்கள் செய்கிறார்களென்பதை உணர்ந்துகொள்ள வேண்டியதேயாகும். எந்த விஷயத்தையும் கட்டுப்பாடுடன் செய்தால்தான் அதில் வெற்றிபெற முடியுமென்பது அன்னோரின் தீர்மானமாகும். இஸ்லாமும் இதேகொள்கையைத்தான் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. நபிகள்பெருமான் (ஸல்.) அவர்களும் அருமை சஹாபாக்களும் இதே முறையில்தான் தங்கள் வாழ்க்கை சட்டங்களை நிறவினார்கள். இதுபொழுது நம் சமூகநிலையைப் பார்ப்போமானால் எங்குபார்த்தாலும் ஒற்றுமைக் குறைவு, உணர்ச்சிக் குறைவு தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. எனவே முன்னேற்றத்துறையில் இதர சமூகத்தினருடன் போட்டிபோட நாடுவோமாயின் சமூகத்தில் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உண்டுபண்ணுவதற்கு முயற்சிக்க வேண்டும். எழுமின்! எழுமின்!! விழிமின்!!!

தின்மைகளறுத்த திண்ணியதியாகி

[தென்காசி. மௌலவி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலிஸாஹிப் வரைவது]

உலக ரக்ஷகர் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் இம்மண்ணுலகை நீத்து இறையடி சேர்ந்தபின் இரண்டாவது இஸ்லாமிய குடிஅரசு தலைவராக வந்த ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களது ஆட்சியில் தான் அநேக இஸ்லாமிய பக்தர்கள் தங்களது கரங்களில் இஸ்லாம், நேர்வழி என்ற தீபத்தை யெடுத்துச்சென்று உலகத்தின் பல பாகங்களையும் பிரகாசிக்கச் செய்தனர். அசத்தியம், வழிகேடு, அஞ்ஞானம் முதலியவைகள், இஸ்லாம் என்ற சத்தியத்தின் பாறைகள்மீது மோதுண்டு தூள்தூளாய் விட்டன. உலகின் பெரிய பெரிய அரசாங்கங்களும், அவைகளையுடைய அரசர்களும் மஹா சாதுக்களான, ஆனால், தத்தம் உடல் பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் இறைவனுக்காக தியாகம்செய்த ஏழை முஸ்லிம்கள் முன் பணிந்து நடுங்க ஆரம்பித்துவிட்டனர்.

இவ்வண்ணமாக, உலகமே நடுக்கமுறகூடிய அம் முஸ்லிம்களின் ஆரம்ப நிலையை உற்று நோக்கின் அதி ஆச்சரியப்படத்தக்கதாக விருக்கிறது. எங்ஙனமெனில், உலகம் முழுதும் அவர்களின் பகைவர்களாக விருந்தனர். அவர்களின் நண்பர்களும், பந்து மித்திரர்களும் அவர்களின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எண்ணத்தொலையாத இடையூறுகளையும், கஷ்டநஷ்டங்களையும் சிறிதும் ஈவு, இரக்கமின்றி கொடுத்துக் கொண்டிருந்தனர். இவர்கள் உலகத்தில் ஆதரிப்பாரின்றி அத்துணைக் கேவல நிலையிலிருந்தனர். இவர்களுக்கு இவ்வுலகத்தில் இவர்களைப் படைத்த இறைவனைத்தவிர்த்து வேறுயாரும் உதவி செய்வாரில்லை. இவர்களின் இந்நிலைமையைப் பார்த்தால், இவர்கள் வருங்காலத்தில் இவ்வளவு பெரும் அந்தஸ்தை அடைவார்களென்று எவரும் கனவில்கூட கருதியிருக்கமுடியாது.

இத்துணை தூரம் ஏழ்மையிலும் ஆதரிப்பாரன்றியும் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள், பிற்காலத்தில் ஈரான் (பெர்ஷியா) தேசத்தின் பெரும் சக்திகளையுடைய சேனைகளுடனும், ரோமாபுரியின் பலம் பொருந்திய வீரர்களுடனும் போர் புரிந்து இஸ்லாத்தின் ஜெயக்கொடியை ஓங்கச்

செய்தார்களென்றால், இவர்கள் கைகொண்ட போதனைகளின் மகிமைகளையும், இவர்களை இவ்வழகிய முறையில் பழக்கிய தலைவரான நபிகள்கோன் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களின் மகிமைகளையும் மதிப்பிடல் சாலுமோ?

இவர்களை உயிரற்றவர்களென்று நினைத்துக் கொண்டிருந்த உலகம், பின்னர் இவர்களின் இறைபக்தியையும், பராக்கிரம செயல்களையும் விடாமுயற்சியையும் கண்டு தலைகுனிய ஆரம்பித்து, பூபாகத்தை ஆளும் சக்தியை இவர்களின் பாதங்களின்முன் சமர்ப்பித்து விட்டது. இத்துணைதூரம் இவர்கள் முன்னேற்றமடைந்ததற்கும், வெற்றிக்கொடி நாட்டியதற்கும், இவர்கள் இணையில்லா இறைவன்பால் கொண்டுள்ள பக்தியும் நம்பிக்கையும், இன்னும், உலகரக்ஷகர் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களின் மீது வைத்திருந்த அன்பும், அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதுமே உண்மைக் காரணங்களாகும். ஆதலால், நாமும் அவர்களைப் போல் உண்மைப் பக்தியுடனும் விடாமுயற்சியுடனும் நடந்து கொள்வோமாயின், இன்றையத்தினமே அவர்களடைந்த சகல வெற்றிகளையும் நாமும் அடைந்து, ஆளப்படுபவராயிருப்பதைவிட்டும் நீங்கி, ஆளும் வீரர்களாக இருப்போமென்பது நிச்சயம். இறைவனும் அவன் வாக்களித்த பிரகாரம் தனது உதவிகளை நமக்குத் தந்தருள்வான்; உலகினரும் நம்மை உயிருள்ள சமூகமாக மதித்து கண்ணியமாகக் கருதுவதுடன் நம்மைப் பின்பற்றவும் முற்படுவார்கள். ஆதலின், ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களின் அரசாட்சி காலத்தில் நிகழ்வுற்ற ஓர் யுத்தத்தில் ஸஹாபிகள் நடந்து கொண்ட முறைகளைப்பற்றிய ஓர் சிறிய சம்பவத்தை இவண் வரைகின்றனம். அன்பர்கள் அன்புடன் படித்து, அதனைப் பின்பற்றி யொழுக எம் யாவர்கட்கும் இறைவன் நல்லருள் பாலிப்பானாக.

ஹிஜ்ரி 14-வது வருஷம் முஹர்ரம் மாதத்தில் ஈரான் தேயத்தின் காதிஸிய்யா வென்ற இடத்தில் முஸ்லிம்களுக்கும் ஈரானியர்கட்கும் ஓர் யுத்தம் ஏற்பட்டது. யுத்த மைதானத்தின் ஒருபக்கல் கணக்கற்ற பல லக்ஷ ஈரானிய வீரர்கள் வெகு ஆடம்பரத்துடனும், ஆரவாரத்துடனும் யுத்தத்தை எதிர்பார்த்து நிற்கின்றனர். மற்றொரு புறத்தில் சிறிய கூட்டத்தினரான முஸ்லிம்கள் இறைவனின் அருளை நம்பி யுத்தத்திற்காக தயாராய்க் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

சூரியன் தனது ஜோதியைப்பரப்ப ஆரம்பித்தது. உலகை சூழ்ந்திருந்த கார்மேகம் மறைந்தது. யுத்தம் நடப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. யுத்தக் குதிரைகளின் கால்களின் சப்தம் வானைப் பிளக்கின்றன. உறைகளிலிருந்த வாட்கள் திடீரென வெளிக்கிளம்பி தனது பிரகாசத்தைக்கொடுக்க வாரம்பித்தன. ஈரானியர் சார்பில் பெரும் பெரும் வீரர்களும் தலைவர்களும் முன்வந்து தத்தம் சக்திகளையும் விளையாட்டுகளையும் காட்டி பெருமை கொள்கின்றனர். இதே நிலையில் இரு பக்கத்திலும் பலரும் வாட்களுக்கு இரையாகி கீழே வீழ்கின்றனர். மனித இரத்தம் பெரும் நதிகள் போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. இஸ்லாமிய சேனைகளின் தளகர்த்தராகிய ஹஜ்ரத் 'ஸஅதிப்னு அபீ வக்காஸ்' (ரலி.) அவர்கள் ஒரு வியாதியின் காரணமாக யுத்த களத்திற்கு வராமல் சற்று அப்பாலுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த ஓர் கட்டிடத்தில் இருந்துகொண்டு கவனித்து வந்தார்கள். யுத்தம் நடத்தவேண்டிய ஒவ்வொரு முறைகளையும் அப்போதைக்கப்போது எழுதி, தங்கள் பிரதிநிதியாக விருந்து யுத்தத்தை நடத்தும் ஹஜ்ரத் 'காலிதிப்னு அர்பதா' (ரலி.) என்ற தளபதிக்கு எரிந்துகொண்டே யிருந்தார்கள்.

யுத்தம் நடக்குமிடத்திற்கு சற்று அப்பால் முஸ்லிம் பெண்களுக்கென்று பிரத்தியேகமாக கூடாரங்கள் பல அமைக்கப்பட்டு அதைக் காப்பாற்றும் பொருட்டு சில வீரர்கள் வைக்கப்பட்டிருந்தனர். இக்கூடாரங்களுக்கு மத்தியில் ஒரு கூடாரம் நன்கு பந்தோபஸ்தான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இக்கூடாரத்திலிருந்து ஓர் வாலிபர், யுத்தம் நடக்கும் முறைகளையும், மாறுதல்களையும் கவனித்து அடக்கமற்றவராக குதித்துக்கொண்டிருக்கிறார். காட்டில் சுயேச்சையாகத் திரிந்து கொண்டிருந்த ஓர் பட்சியைப் பிடித்து ஒரு கூண்டினுள் அடைத்து வைத்திருந்தால், அப்பட்சி அக்கூண்டினுள் இருந்துகொண்டு வெளியில் ஏனைய பட்சிகள் சுயேச்சையாகத் திரிவதையும் இன்னும் வெளியில் காணப்படும் இயற்கைக் காட்சிகளையும் கண்டு மனம் உடைந்து வெளியில் எவ்விதம் செல்லலாம்? என்று எப்படி துடித்துக் கொண்டிருக்குமோ அப்படியே இந்த வாலிபரும் மன நிம்மதியற்றவராய்க் காணப்பட்டார்

இவ்வாலிபரின் பெயர் 'அபூமிஹ்ஜன்' என்பதாகும். இந்த வாலிபர் மதுவருந்தியதற்காக தளபதியான ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்கள் இவரைக் கைது செய்து விலங்கிட்டு அக்கூடாரத்தில் வைத்திருந்தார்கள். ஆனுல் இவர் அதில் இருந்துகொண்டு பதறிக்கொண்டும், துடித்துக்கொண்டும் இருந்தார். அக்கூடாரத்தில் கைதியாக இருப்பதினுல் தனக்கேற்படும் கஷ்டத்தைக் கவனித்தா? அல்லது பிறர், பொய்யாக இவர் மீது குற்றத்தைக் கற்பித்ததின் காரணமாக இவர் இந்நிலைமையையடைந்ததற்காகவா இவ்வாறு துடித்துக்கொண்டிருந்தார்? என்று பார்த்தால் 'இல்லை' என்று நிச்சயமாகக்கூறலாம். ஏனெனில், அவர் யுத்தம் நடப்பதைப்பார்த்து துடித்துக்கொண்டிருந்தார். மேலும் அவர் துழும்பியவராக "எனது நண்பர்கள் வெகு சந்தோஷத்துடன் யுத்தத்தில் கலந்துகொண்டு இறைவனுக்கு உகப்பான வேலையைச் செய்துகொண்டிருக்கின்றனரே, யான் மட்டும் இந்த வேலை செய்வதை விட்டும் துற்பாக்கியனுக இருக்க வேண்டியதிருக்கிறதே" என்று வாய்விட்டு தன்னுணர்வற்றவராக புலம்பிக்கொண்டிருந்ததே காரணமாகும்.

இந்நிலைமையில் யுத்த மைதானத்தில், காபிர்களின் சேனையிலிருந்து கொழுத்துப் பருத்து பயங்கரத் தோற்றமுடைய ஓர் யுத்த வீரன், முஸ்லிம்களின் முன்வந்து, முஸ்லிம் வீரர்களைப் பார்த்து "என்னுடன் போர் செய்ய தைரியமுள்ளவர் உங்களிலிருக்கின்றனரா?" என்று வெகு கெம்பீரத்துடன் அறைகூவி அழைத்தான். இதனைச் செவியுற்ற இஸ்லாமிய வீரரொருவர் ஆனந்தம்மிகுந்தவராகமுன்வந்து அவனை எதிர்த்தார். கடும்போர் செய்தார். முடிவில் இவர் ஷஹீதாகிவிட்டார். இச்சம்பவத்தைக்கண்ட அபூமிஹ்ஜன் மிக துடித்தவராக ஒரு குதி குதித்தார். ஆனுல் விலங்கிடப்பட்டிருந்ததால் வெளியில் வரமுடியவில்லை. இவரின் நாவோ, "நாம் எப்படி இந்த சிறையை விட்டுவெளியாகி, சபிக்கப்பட்ட அந்த கொழுத்தவம்பனை இஜ்ராயீலிடம் (அலை.) ஒப்புவிப்பது? நான் இருக்கும் தன்மையோ முற்றிலும் அதைவிட்டும் தடுத்துக்கொண்டிருக்கிறதே என்செய்வேன்" என்று புலம்பிக்கொண்டிருந்தது. இன்னும். அந்த எதிரியான போர்வீரன்முன் பல இஸ்லாமிய வீரர்கள்வந்து போர்செய்தும் இறுதியில் இவ்விஸ்லாமிய வீரர்கள் ஷஹீதாகிக்கொண்டேயிருந்தது இவருக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் அதிகமாக்கிவிட்டன.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த அபூமிஹ்ஜன் என்பவரின் கண்களிலிருந்து தண்ணீர் வடிய ஆரம்பித்தது. தன்னுணர்வற்றவராய் உயர்ந்த சப்தமிட்டு அழ ஆரம்பித்துவிட்டார். இந்நேரத்தில் "ஏ அபூமிஹ்ஜனே! உம்மை விலங்கிட்டு இங்கு வைக்கப்பட்டிருப்பதை நினைத்தா அழுகின்றீர்?" என்று ஒரு சப்தம் கேட்டது. இச்சப்தத்தைச் செவியுற்ற அபூமிஹ்ஜன் திடுக்கிட்டு, கண்ணை விழுத்துப்பார்க்கும்போது, இஸ்லாமிய சேனைத் தலைவரின் மனைவியரான "ஹஜ்ரத் ஸல்மா" (ரலி) அவர்கள் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை முக மூடி அணிந்தவர்களாக ஆங்குவந்து நிற்பதைப் பார்த்தார். உடனே சற்று தைரியத்துடன் அம்மாதரசியை நோக்கி பின்வருமாறு கூறத் தொடங்கினர்.

அபூமிஹ்ஜன்(—இஸ்லாமியவீரர்களின் தலைவரின் மனைவி அவர்களே! நான் விலங்கிடப்பட்டு அவஸ்தைப் படுவதை நினைத்து அழவில்லை. ஆனுல், யுத்த மைதானத்தில் நடக்கும் சம்பவங்களைப் பார்த்துத்தான் அழுது கொண்டிருக்கிறேன்.

ஸல்மா:—என்ன! தங்களின் ஹிருதயம், யுத்த மைதானம் சென்று அவ்யுத்தத்தில் கலந்து யுத்தம் புரிய நாடுகின்றதா?

அபூ:—தாங்கள், இந்தக்கேள்விக்கு "வாளின் நிழலிலேயே பிறந்து, அதிலேயே வளர்ந்து, அதிலேயே உயிரைத் தியாகம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் துடித்துக்கொண்டிருக்கும் இவ்வேழை வீரனிடத்திலா" பதிலைத் தேடுகின்றீர்கள்?

ஸல்மா:—தாங்கள் இத்துணை தூரம் இஸ்லாத்திற்காக தியாகம் செய்யப் பிரியமிருப்பின், பின்னர் எதற்காக இப்பெரிய குற்றத்தில் சிக்குண்டீர்கள்?

அபூ:—(கண்ணீர் வடித்தவராக) எனது ஆத்மா நாசமடைக. எனது அறிவின் மீது ஷைத்தான் மிகைத்து என்னை இத்துற்செய்கையைப் புரியும்படி செய்துவிட்டான்.

இதைக்கூறும் பொழுது இவரின் கண்களிலிருந்து நீர் ஒலித்தோட ஆரம்பித்தது. ஒரு பக்கல் இறைவனின் கட்டளையை மீறியதை நினைத்து மனசஞ்சலமும் வருத்தமும் அதிகமாயின. மறுபுறம் இவ்வாறு பாபமான

காரியத்தைச் செய்ததினால் தாமடைந்த கேவலத்தன்மையைக் கவனித்து வெட்கமும் விசனமும் பொங்கிக்கொண்டிருந்தன. சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு மீண்டும், ஹஜ்ரத் ஸல்மா (ரலி.) அவர்களை நோக்கி, தமது திக்கற்ற நிலைமையை வெளிப்படுத்தி பின்வருமாறு கூறத்தொடங்கினர்.

அபூ:—கண்ணிய மிக்கதலைவியே! தாங்கள் என்மீது கிருபைகூர்ந்து அல்லாஹ்வுக்காக எனக்கொரு சிறிய உதவி செய்வீர்களாயின் தங்களது உதவியை நான், எனதாயுள் பரியந்தம் மறக்கவே மாட்டேன்.

ஸல்மா:—நான் செய்யவேண்டிய அவ்வுதவி யாது? கூறுவீராக.

அபூ:—அல்லாஹ்வுக்காக வேண்டி கொஞ்ச நேரம் எனது பாதங்களில் மாட்டப்பட்டுள்ள விலங்கை அவிழ்த்து விடுங்கள். அப்பொழுது யான் யுத்தகளம் சென்று, யுத்தத்தின் மீது யான்கொண்டுள்ள காதல் என்ற நெருப்பை வாளின் உதவியால் குளிரச்செய்து, அந்த வாய்ப்பறை சாற்றி அநேக முஸ்லிம் சகோதரர்களை வெட்டி வீழ்த்தி ஷஹீதாக்கிய காபிருக்கு தக்க சிக்ஷை கொடுத்து இறைவன் உதவியால் அவனை நரகத்திற்கு அனுப்பி விடுகிறேன்.

ஸல்மா:—சரி, இப்பொழுது உம்மை அவிழ்த்து விட்டுவிட்டால், ஹஜ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் வந்து என்னிடம் உம்மைப்பற்றி விசாரித்தால் யான் என்ன பதில் கூறுவேன்?

அபூ:—தாங்கள் என்னை அவிழ்த்து விட்டுவிட்டால் நான் யுத்தகளம் சென்று யுத்தம் புரிந்துவிட்டு இன்று மாலை மீண்டும் திரும்பி வந்தால், நிச்சயமாக நான் நேராக இவ்விடத்திற்குவந்து இப்பொழுது எனக்குப் போடப்பட்டிருக்கும் விலங்குகளை மீண்டும் மாட்டிக்கொள்கிறேன் என்று நுங்களுக்கு வாக்குறுதி கொடுக்கிறேன். இவ்விஷயம் தலைவரான ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்களுக்குத் தெரியாமல் போய்விடலாம்.

ஸல்மா:—தாங்கள் யுத்தகளம் சென்று மீண்டும் வந்து விலங்கைமாட்டிக் கொள்வீர்களென்று மனமொழி மெய்களால் உறுதியளிக்க முடியுமா? பின்னர் அதன்படி நடந்துகொள்ள முடியுமா?

அபூ:—(அளவற்ற ஆனந்தமேலிட்டவராய்) சந்தேகமின்றி நான் உயிருடன் திரும்பிவந்தால் எனது வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றிவைப்பேன்.

இவ்வாறு அபூமிஹ்ஜன் கேட்டுக்கொண்டதை ஒப்புக்கொண்டு, ஹஜ்ரத் ஸல்மா (ரலி.) அவர்கள் இவரை விடுவித்துவிட்டனர். உடனே அபூமிஹ்ஜன், தமக்குரிய யுத்த ஆபரணங்களையும் வாள், வில், கேடயம், அம்பு, ஈட்டி முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு, வெண்மையான ஓர் புரவியின்மீதேறிக்கொண்டு யுத்தகளத்திற்குப் புறப்பட்டார்.

நல்ல உச்சி வேளை, வெய்யில் அதிகமாக அடித்துக்கொண்டிருக்கிறது. யுத்தகளத்தில் யுத்தம் மிகக்கொடுமையாக நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு இஸ்லாமிய வீரரும் அதி ஆனந்தத்துடன் தத்தம் சக்திகளை வெளியாக்கிக்கொண்டிருக்கின்றனர். தத்தம் உயிர்களை ஒரு உயிராக அவர்கள் மதிக்கவில்லை. அவ்வீரர்களின் ஹிருதயங்களும் "நாம் யுத்தத்தில் வெற்றி பெற்று ஜீவித்திருந்தால் அதிக நன்மை பெற்றவர்களாகவும் ஜெயவீரர்களாகவும் இருப்போம். அல்லது இதிலேயே மரணமடைந்தால் ஷஹீதின் பதவியைப் பெற்று இறைவனின் அன்பைப் பெற்றவர்களாவோம்" என்ற விஷயத்தையே ஞாபித்துக்கொண்டிருந்தன.

முஸ்லிம் சேனைத் தலைவரான ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்கள் அவ்வுயர்ந்த மாளிகையின் மீதிருந்துகொண்டு யுத்த நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொண்டேயிருந்தனர். திடீரென அவர்களின் கண்களுக்கு "ஓர் வெண்மையான புரவியின்மீது ஒரு வாலிபர், தனது கரத்தில் ஈட்டி, வாள் முதலியவைகளை ஏந்திக்கொண்டு யுத்தகளம் வந்து, காபிர்களின் சேனைகளிருக்கும் அணிவகுப்பில் வெகு ஆக்ரோஷமாய்ப் புகுந்தது தெரியவந்தது. இவர், யுத்தகளத்தில் அநேக முஸ்லிம் வீரர்களை வெட்டி வீழ்த்தி ஷஹீதாக்கிய அக்கொழுத்துப்பருத்து பெருமையடித்துக்கொண்டிருந்த காபிர் வீரனை குத்தி வீழ்த்தினர். சிறிது நேரத்திற்குள் காபிர்களின் அணிவகுப்புகளை சின்னபின்னப் படுத்தினர். இதனால், அவர்களின் அணிவகுப்புகள் சீர்குலைந்தன. சீர்குலைந்த காபிர் வீரர்கள் தலைகால் தெறிக்க நாலாபக்கமும் ஓடத்தலைப்பட்டனர். ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்கள் அதி ஆச்சரியமுற்றவர்களாய் தங்கள் மனதிற்குள்ளேயே "அந்த புரவியின் மீதமர்ந்து யுத்தம் புரிந்த வீரர் யார்? அவரின் நடைமுறைகளைப் பார்த்தால் அபூமிஹ்ஜன் என்பவரைப்போல் தெரிகிறதே. ஆனால்

அவரை நாம் விலங்கிட்டு கூடாரத்திற்குள் ளல்லவா அடைத்து வைத்திருந்தோம். அவர் இங்கு எவ்வாறு வரமுடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லையே. எல்லா விஷயத்தையும் நாம் நமது கூடாரம் சென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்'' என்று கூறிக்கொண்டார்கள்.

இன்றைதினம் காபிர்களின் தலைவர்களிலனேகர் வெட்டுண்டு மாண்டனர். மீதியிருந்த சேனைகள் நாலாபக்கங்களிலும் ஓடிவிட்டன. இஸ்லாமிய வீரர்களும் அவர்களை வெகுதூரம்வரை பின்சென்று விரட்டினார்கள். இன்றைய யுத்தத்தில் 'அபூமிஹ்ஜன்' அவர்களின் நடைமுறைகள், இதரர்களின் யுத்த முறைகளைவிட்டு தெளிவாகக் காண்பித்துக்கொண்டிருந்தன. மாலைநேரமும் வந்துவிட்டது. சூரியனும் மறைய ஆரம்பித்தது. யுத்தம் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. முஸ்லிம் சேனைகளும் தங்களிருப்பிடம் திரும்பின. சேனைத் தலைவரான ஹஜ்ரத் ஸஅதிப்னு அபீவக்காஸ் (ரலி.) அவர்கள் தங்களிருப்பிடம் திரும்பிவரும்பொழுது முதன் முதலாக கைதியாக வைக்கப்பட்டிருந்த 'அபூமிஹ்ஜன்' என்பவரிருக்கும் கூடாரத்திற்குச் சென்று பார்த்தபொழுது, அவண் அபூமிஹ்ஜனை காணமையால் நேராக தமதிருப்பிடம் சென்று, தமது மனைவியரான ஹஜ்ரத் ஸல்மா (ரலி.) அவர்களிடம் விசாரித்தார்கள். ஹஜ்ரத் ஸல்மா (ரலி.) அவர்களும் நடந்த எல்லா விருத்தாந்தங்களையும் ஆதியோடந்தமாக எடுத்துக்கூறி "அவர் மீண்டும் யுத்தகளத்திலிருந்து திரும்பிவந்தால், முன்னால் மாட்டப்பட்டிருந்த விலங்குகளை மீண்டும் மாட்டிக்கொண்டு கைதியாகிவிடுவதாய் வாக்களித்துச் சென்றுள்ளார்" என்றார்கள். இவைகளைக் கேட்ட ஹஜ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் "உனது அபிப்பிராயப்படி அவர் மீண்டும்வந்து சிறையில் இருந்துவிடுவார் என்று எதிர்பார்க்கின்றாயா?'' எனக் கேட்க, ஹஜ்ரத் ஸல்மா (ரலி.) அவர்கள் "சந்தேகமின்றி அவர்வந்து அவ்வாறு இருந்துகொள்வாரென்பதில் எனக்கு எள்ளத்தனையும் சந்தேகமில்லை; நிச்சயமாக அவர் வாக்குறுதியைக் காப்பாற்றுபவர்'' என்றார்கள்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் 'அபூமிஹ்ஜன்' என்ற வாலிபக் கைதி வெகுவேகமாகவந்து தாம் ஆதியில் கைதியாக இருந்த கூடாரத்திற்குச் சென்றார். இவர்வருகையைக்கண்ட ஸல்மா (ரலி.) அவர்களும் தங்கள் கூடாரத்தினுள் புகுந்து கொண்டனர். ஹஜ்ரத் ஸஅதோ (ரலி.) மூட்டைகளால் அடுக்கப்பட்டிருந்த உயர்ந்த ஓர் இடத்திற்குள் மறைந்துகொண்டு, இவர் என்ன செய்கிறார் என்று கவனித்துக் கொண்டிருந்தனர். 'அபூமிஹ்ஜன்' என்பவர் சிறைகூடாரத்திற்குள் வந்து தாம் அணிந்திருந்த எல்லா ஆயுதங்களையும் கழற்றி அப்பால் வைத்துவிட்டு ஆங்குகிடந்த விலங்குகளை தமது கால் கரங்கள்மீது மாட்டிக்கொண்டு முன்னால் எவ்வாறு இருந்தாரோ அவ்வாறே இருந்துகொண்டார். இவைகளைக் கண்ணுற்ற சேனாதிபதியான ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்கள், இவ்வாலிபக் கைதியின்முன் தோன்றி "ஓ உண்மை யுத்த வீரரே! வாக்குறுதியைக் காப்பாற்றிய இறை பக்தரே!! இத்துணைப்பரிசுத்தமான நுங்களை கைது செய்து விலங்கிட்டு சிறையில் வைத்ததற்காக நான் மிக்க வருந்துகிறேன்; மன்னிப்பீராக.'' என்றனர். உடனே அபூமிஹ்ஜன் அவர்கள் "ஏ எனது தலைவரே! தவறு என்னுடையதே தவிர நுங்களுடையதல்ல. நான் பரிசுத்த இஸ்லாத்தின் ஆடையை அணிந்தபின் (அதாவது இஸ்லாத்தைத் தழுவியபின்) அறியாத்தனத்தால் பழங்கால வழமையான மதுவை அருந்தியதற்காக வருத்தமடைகின்றேன்'' என்றனர்.

உடனே ஹஜ்ரத் ஸஅது (ரலி.) அவர்கள், சத்தியவந்தரான அபூமிஹ்ஜன் (ரலி.) அவர்களை சிறையைவிட்டும் விடுவித்தனர். அது போழ்து, அபூமிஹ்ஜன் (ரலி.) அவர்களும் "இன்றிலிருந்து இனி எப்பொழுதும் மது வருந்துவதில்லை'' என்று சத்தியம் செய்து கொண்டார்கள்.

இஸ்லாமிய பக்தர்களே! வாலிபர்களே!!

மேற்வரையப்பட்டுள்ள சரித்திர சம்பவத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் அநேக விஷயங்களை உணர்ந்துகொள்ள வேண்டியதுடன் அவர்களின் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டிய கடமையும் இருந்துகொண்டிருக்கிறது. ஏனெனில், இந்த அபூமிஹ்ஜன் (ரலி.) அவர்களும், ஹஜ்ரத் ஸஅதிப்னு அபீவக்காஸ் (ரலி.) அவர்களும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தோழர்களாகும். உலக ரக்ஷகர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "எனது ஸஹாபிகள் (தோழர்கள் நேர்வழியின்) நட்சத்திரங்களைப்

போலாகும்; ஆதலால் நீங்கள் அவர்களில் எவரைப் பின்பற்றினும் நேரான வழியை அடைந்துவிடுவீர்கள்" என்று கூறியிருக்கிறார்கள். ஆதலால், ஹஜ்ரத் ஸஅதிப்னு அபீவக்காஸ் (ரலி.) அவர்கள், ஹஜ்ரத் அபூமிஹ்ஜனின் தைரியத்தையும் வீரத்தன்மையும், அவர் பெரிய ஸஹாபியாய் இருக்கிறாரென்பதையும் உணர்ந்திருந்தும், அபூமிஹ்ஜன் அவர்கள் மதுவருந்தியதற்காக அவர்களை விலங்கிட்டு சிறையிலடைத்து இஸ்லாத்தின் சட்டவரம்பை நீதத்தின் மூலமாக நிலை நிறுத்தாட்டிய விஷயத்தையும், ஹஜ்ரத் அபூமிஹ்ஜன் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தின் மீது கொண்டிருந்த பிரீதியையும் தியாக உணர்ச்சியையும், கஷ்ட நிலைமையிலும் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி இறைவன்பக்தியை அடைந்த முன்மாதிரியையும் நாமும் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளோம். ஆதலின் அல்லாஹு தஆலா, நம் அனைவர்கட்கும் நபிகள் நாயகத்தையும் (ஸல்.) அவர்களின் தோழர்களான ஸஹாபாக்களையும் பின்பற்றி மோக்ஷமடைய இன்னருள்பாலிப்பானாக. ஆமீன்.

பல திரள்

துருக்கியில் புதிய சட்டம்

கவர்ன்மெண்டில் உத்தியோகம் வகிப்பவர்கள் அன்னிய வகுப்பிலுள்ள பெண்களை விவாகஞ் செய்வார்களாயின் அன்னோர் உடனே உத்தியோகப் பதிவியிலிருந்து நீக்கப்படுவார்களென்றும், இவ்விதமாகவே அன்னிய தேசங்களிலுள்ள பெண்களை விவாகஞ் செய்பவர்களும், இதற்குமுன் விவாகஞ்செய்து கொண்டுள்ளவர்களும் கவர்ன்மெண்டு ஊழியத்திலிருந்து நீக்கப்பட்டுப் போய்விடுவார்களென்றும் துருக்கி பார்லிமெண்ட் நிருவாக கமிட்டி ஒரு சட்டமியற்றியிருக்கிறது.

துருக்கியிலுள்ள பிரதான தலைநகர், முக்கிய பட்டணம் இவைகளை அழகிய முறையில் வைத்திருக்கவேண்டுமென அங்கோரா கவர்ன்மெண்டு விரும்புவதால், மக்கள் பொது இடங்களிலிருந்துகொண்டு சத்தியஞ் செய்வது, இராக்காலங்களில் மக்கள் தங்கள் வீடுகளிலோ, அல்லது பொது இடங்களிலோ சத்தம் கூக்குரலிடுவது, தெருவீதிகளில் பஹிரங்கமாக பிச்சை வாங்குவது, துர்ச்செய்கை புரிவது, தெருக்களில் அசங்கிதம் செய்வது, மக்கள் கெடுதி நடக்கும் இடங்களுக்கும், மிருக சண்டை நடக்கும் இடங்களுக்கும் செல்வது ஆகியவைகள் புரியலாகாதென தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. பற்பல சாமான்களையும் விற்பனை செய்வோர் ஒவ்வொரு தெருவிலும் குறிப்பிட்டுள்ள இடங்களில் நின்றுதான் தங்கள் சாமான்களை கூறி விற்பனை செய்ய வேண்டும். இரவு எட்டு மணி முதல் காலை எட்டு மணி வரை மோட்டார் ஹாரன் செய்யக்கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

துருக்கியில் வசிக்கும் மாணவர்களின் எண்ணங்களில் கெடுதி உண்டாகக் கூடாதென்பதைக்கருதி அன்னோர் சினிமா காட்க்ஷிசாலைக்குச் செல்வதை விட்டும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். துருக்கியிலுள்ள பிந்திய சந்ததியினர் தேகப்பயிர்ச்சி பெற்றவர்களாகவும், அதிக அறிவு ஆற்றலுள்ளவர்களாகவும் திகழுவதற்காக இம்மாணவர்களுக்கு பற்பல இடங்களிலும் புத்தக சாலைகளும், அப்பியாச ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஹிஜாஸ் அரசாங்கம்

தாடியைச் சிறைப்பது குற்றமாகுமென ஹிஜாஸ் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கின்றார்கள். இதன்படி தாடியைச் சிறைக்கும் பரியாரியினது கடை, சாமான் யாவும் பறிமுதல் செய்யப்பட்டுப்போம். சிறைத்துக் கொண்டவர்களுக்கு எட்டுநாள் சிறைதண்டனை அல்லது $17\frac{1}{2}$ ரியால் அபராதம் விதிக்கப்படும். இரண்டாவது முறை இக்குற்றம் புரிபவருக்கு இரண்டு பவுன் அபராதம் விதிக்கப்படும்.

[stamp]

[illegible]லமாக்கள் சான்பரன்ஸ்

[illegible]வில உலமாக்களின் கான்பரன்ஸ் ஒன்றைக் கூட்டவேண்டுமெனவும், அதற்கு ஒவ்வொரு தேசத்தின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு அனுப்பப்படவேண்டு மெனவும், இக்கான்பரன்ஸில் மார்க்க முன்னேற்றம், பிரசார ஒழுங்குமுறை இவைகளை தக்கமுறையில் முடிவுசெய்யவேண்டு மெனவும், இக்கான்பரன்ஸில் ராஜிய விஷயங்களுக்கு எவ்வித சம்மந்தமுமில்லை என்றும் ஜாமிஅ அஜ்ஹரிலுள்ள உலமாக்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

லண்டனில் தாஜ்மஹால்

டாக்கா வாசியான இஸ்லாமியப் பிரசாரகர் ஷெய்கு அப்துல் கபூர் சாஹிப், நமது சக்கரவர்த்தி கிரீடம் தரித்துக்கொண்டதின் ஞாபகார்த்தமாக லண்டன் நகரில் ஒரு இடம் தேவையென விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அந்த இடத்தில் முஸ்லிம் அரசர்களின் உதவியால் அழகு பொருந்திய 'தாஜ் மஹால்' என்னும் பெயருள்ள ஓர் விடுதியை அமைக்கவும் அந்த இடம் முஸ்லிம்களின் பொதுவேலைக்காக உதவவேண்டுமெனவும் உத்தேசித்திருக்கிறார்.

சகல துறையிலும் முஸ்லிம்களின் முன்னேற்ற தடை

யூ. பி. யிலுள்ள பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாட புத்தகங்களில் முஸ்லிம்களால் எழுதப்பட்ட எப்பதகமுங்கிடையாது. இதுபொழுது கல்வி மந்திரியாயுள்ள சலீம்பூர் ராஜா முஸ்லிம்களால் இயற்றப்பட்டுள்ள சில புஸ்தகங்களை அதில் சேர்த்துவிட்டார். இதனை ஹிந்து பப்ளிஷர்கள் சகிக்காது பற்பலஇடங்களிலும் கண்டனக்கூட்டம் நடத்த முற்பட்டு கவர்னர், பிரதம மந்திரி, கல்வி மந்திரி இவர்களுக்கு தந்திமூலம் தெரிவித்து, முஸ்லிம்களால் இயற்றப்பட்டுள்ள எந்த புஸ்தகத்தையும் பாட புஸ்தகங்களில் சேர்க்கக்கூடாதென அறிவித்திருக்கின்றார்கள்.

அமீர்ஷகீப் அர்சலான்

பிரான், ஷாம் முஸ்லிம்களுக்கிடையே சமாதானம் ஏற்பட்டு கவர்ன்மெண்ட் தேச பிரிஷ்ட உத்திரவை நீக்கிக்கொண்டவுடன் அமீர்ஷகீப் அர்சலான் ஷாம் வந்து சேர்ந்துவிட்டார். இஸ்கந்தரிய்யா, பேருத், திமிஷ்க் இவ்விடங்களிலுள்ள முஸ்லிம்கள் அவரை ஆடம்பரமாக வரவேற்றனர். அவர் ஷாமில் ஒருமாதம் தங்கிவிட்டு ஜினிவா செல்வார்.

அல்பானிய முஸ்லிம் ஆட்சி

அல்பானிய அரசாங்கம் முஸ்லிம் மாதுக்களை தங்கள் முகமூடிகளை அகற்றிவிடுமாறு வம்பு றிசெய்வதாக சில காலத்திற்குமுன் பத்திரிகைகளில் சமாசாரம் வெளியிடப்பட்டிருந்தது. இச்சமாசாரம் மிகமிக பொய்யானதென்றும், இச்சமாசாரம் உண்மையில் பிரான்ஸ், யூனன் பத்திரிகைகளினுடைய இட்டுக்கட்டு என்றும், அன்னோர் அல்பானிய முஸ்லிம் அரசாக்ஷியை தூஷிப்பதற்கு முற்பட்டிருக்கின்றனர் என்றும் அங்குள்ள பிரபல்ய முஸ்லிம் ஒருவர் கூறியுள்ளார்.

ஷாமிலிருந்து தேச பிரஷ்டம் செய்யப்பட்டவர்களின் திரும்புகை

பிரான்ஸ் கவன்மெண்டார் அநேக ஷாம் வாசிகளை தேச பிரஷ்டம் செய்திருந்தனர். இதுபொழுது மெள்ளமெள்ள அவர்களது தடைகளெல்லாம் நீக்கப்பட்டு வருகிறது. அப்துற் றஹ்மான் ஷாஹ், சையத் ஹைதர் ஷாஹ் இவ்வருஷம் ஷாம் சென்றுவிட்டனர். சுல்த்தான் பாஷா அத்ரஷ் முதலானோர் மீதுள்ள தடை கூடிய சீக்கிரம் நீக்கப்பட்டுப் போகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மௌலானு ஹுஸைன் அஹ்மத்

தேவ்பந்து மத்ரஸாவின் பிரின்ஸ்பால் மௌலானு ஹுஸைன் அஹ்மத் சாஹிப் மதனீ அவர்கள் 6 மாதங்கள் வரை தெஹ்லியின் எல்லைக்குள் அடி வைக்கக்கூடாதென கவர்ன்மெண்டாரால் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பாலஸ்தீன் யூதர்கள்

பாலஸ்தீனிலுள்ள யூதர்கள் அவ்விடத்திலுள்ள தலைமை முப்தியான சையித் அமீன் ஹுஸைன் அவர்களைக் கொன்றுவிட பகீரதமுயற்சி செய்து வருகின்றார்கள். யூதர்கள், கொலை புரிவதில் நிபுணத்துவம் வாய்ந்த அநேகரை இதற்காக வெளி தேசங்களிலிருந்து அழைத்திருக்கின்றனர். அல்லாஹ் தஆலா முஸ்லிம்களின் பகைவர்களது இக்கோரிக்கை நிறைவேறாதிருக்க கிருபை புரிவானாக.

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் ஆலீம் சாகிப் ஸித்தீக்கி அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக்கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென்ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூர தேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக்கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.	Rs.	A.
1. First Teachings of Islam	1	4
2. The Elementary Teachings of Islam	0	8
3. A New Muslim World in Making	0	8
4. A Shavian meets a Theologian	0	3
5. Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம்:— மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா பணத்தை வருட ஆரம்பத்தில் கொடுத்து, அரும்மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது உங்களெல்லோருக்கும் தெரியாத விஷயமன்று. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள், சென்ற வருடத்திய சந்தா ரூபாயை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றார்கள். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பாக்கிகளை தாமதமின்றி நேரில் நமக்காவது, அல்லது அவ்விடத்திய நமது ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர், (220, 2-ம் குறுக்கு தெரு) அவர்கள் மூலமாவது அனுப்பிக் கொடுத்து உதவி புரிவீர்களென எதிர்பார்க்கிறோம். வி. பி. செய்வதுகொண்டு வீண்செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள்:—

மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர்,
220, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப் அவர்கள்,
144, கைஸர் ஸ்டீட், கொழும்பு

ஜனாப் M. O. முகம்மது யூசுப் அவர்கள்,
45, குயின் ஸ்டீட், பினாங்

ஜனாப் S. முகம்மது அப்துல்காதிர் அவர்கள்,
No. 30, பஜார், முன்னார்

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T. Madras.